# நல்லோர் நல்லுரை



டாக்டர். சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நல்லோர் நல்லுரை

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்,
தமிழ்மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

திருமலர்ப் பதிப்பகம்
சென்னை. 29

முதற் பதிப்பு : நவம்பர், 1980
இரண்டாம் பதிப்பு : 1984

விலை ரூபாய் : 9-00

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை - 600 108.

**ஆசிரியரின் பிற நூல்கள் :**

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
வாழையடி வாழை
மனோன்மணீயம் (பதிப்பு)
காரும் தேரும்
முருகன் காட்சி
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
மலர் காட்டும் வாழ்க்கை
இலக்கியக் காட்சிகள்
சான்றோர் தமிழ்
நெஞ்சின் நினைவுகள்
சங்க கால மகளிர்
The Status of women in Tamilnadu during the Sangam Age
A Study of the literature of the Chera Country.
Papers in Tamil Literature.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ்ரோடு
சென்னை 14.

# முன்னுரை

'வைகறைத் துயிலெழு' என்பது ஆன்றோர் அறிவுரை. "He would lay down with the lamp and rise with the lark" என்பது ஆங்கில அறிஞர் வழங்கிய அறிவுரையாகும். வைகறை நேரத்தில், வையத்து உயிர்களை வாழவைக்கும் இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுவது தமிழ் மரபு. சிறப்பாக மார்கழித் திங்களில் மணிவாசகப் பெருந்தகை யின் திருவெம்பாவையினையும், சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாம் ஆண்டாளின் திருப்பாவையினையும் ஓதுதல் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டே நிலவிவரும் வழக்காக இருந்துவருகிறது.

அனைத்திந்திய வானொலி நிலையத்தினரும் தங்கள் அன்றாட நிகழ்ச்சியின் தொடக்கமாக 'அருள் வாக்கு' எனும் நிகழ்ச்சியினை, மங்கல இசையினை அடுத்து வைத்து வருகிறார்கள். தமிழ் இலக்கியம் பக்தி இலக்கியம் என்று பிறநாட்டினரும் பிற சமயத்தினரும் பாராட்டப்பெறும் தகுதி வாய்ந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருவள்ளுவரும், திருமூலரும், தாயுமானார், வள்ளலார் முதலான சான்றோர்களும் கால்தரைதோய நடந்த திருவிடம் நம் தமிழகமாகும். இத்தகு சான்றோர் பெருமக்கள் அருளிய நல்லுரைகள், நம் வாழ்வைச் செம்மைப்படுத்தித் துலக்க முறச் செய்யும் சீர்த்தியும் தகவும் வாய்ந்தனவாகும்.

உடல் தூய்மைக்கு நீரில் குளித்து எழுகிறோம். அது போன்றே உள்ளத்தூய்மை பெறச் சான்றோர் சாற்றிய சால்புரையில்—நல்லோர் நவின்ற நல்லுரையில் மூழ்கிக் குளிக்க வேண்டும் என்பர் சான்றாண்மைக்கு ஆழி எனத் துலங்கிய மு.வ. அவர்கள்.

திருவள்ளுவர் முதலாகக் காந்தியடிகள் ஈறாகப் பெரு மக்கள் பலர் வழங்கிய அருளுரைகள்—அனுபவ உரைகள் 'நல்லோர் நல்லுரை' என்ற தலைப்பில் ஈண்டு நூல் வடிவந் தாங்கி வெளிவருகின்றது.

இந்நூல் தமிழ்ச் சமுதாயத்தின் உயர்விற்கு—குறிப்பாக —இளைஞர் சமுதாயத்தின் எழுச்சிக்குப் பெருந்துணை புரியும் என்னும் நம்பிக்கையோடு இந்நூலினைத் தமிழ் கூறு நல்லுலகிற்குப் படைக்கின்றேன்.

'தமிழகம்'
சென்னை-29

சி. பா.

முதற் பதிப்பு : நவம்பர், 1980
இரண்டாம் பதிப்பு : 1984

விலை ரூபாய் : 9-00

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை - 600 108.

ஆசிரியரின் பிற நூல்கள் :

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
வாழையடி வாழை
மனோன்மணீயம் (பதிப்பு)
காரும் தேரும்
முருகன் காட்சி
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
மலர் காட்டும் வாழ்க்கை
இலக்கியக் காட்சிகள்
சான்றோர் தமிழ்
நெஞ்சின் நினைவுகள்
சங்க கால மகளிர்
The Status of women in Tamilnadu during the Sangam Age
A Study of the literature of the Chera Country.
Papers in Tamil Literature.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ்ரோடு
சென்னை 14.

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | வணங்கிய வாயினர் | 5 |
| 2. | இன்புறும் இன்சொல் | 14 |
| 3. | வீறெய்தும் வினையாண்மை | 21 |
| 4. | கனவிலும் தேற்றாதார் | 31 |
| 5. | அறத்தான் வரும் இன்பம் | 41 |
| 6. | கூற்றெதிர்க்கும் படை | 51 |
| 7. | வந்தது வந்தது கூற்று | 60 |
| 8. | மாண்புறு கவசம் | 71 |
| 9. | யாவர்க்குமாம் இறை | 80 |
| 10. | விளையும் உயிர் | 85 |
| 11. | ஆனந்த வெள்ளம் | 90 |
| 12. | எவ்வெண்ணம் உய்வண்ணம் | 101 |
| 13. | மதி மறந்தவர் | 107 |
| 14. | ஒருமை உணர்வு | 117 |
| 15. | அண்ணலின் அருட் சிந்தனைகள் | 122 |

# 1. வணங்கிய வாயினர்

## 1

'' பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர் ''
—திருக்குறள் : 417

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்அரிது' என்று ஆன்றோர் மனிதப் பிறவியின் அருமைப்பாட்டினை நலமுற நவின்றுள்ளனர். பெறற்கரிய மனிதப் பிறவியின் சிறப்பே மனத்தின் சிந்தனையாற்றலாகும். நன்று இது, தீது இது என்று தான் காணும் ஒவ்வொரு பொருளையும் பகுத்தறிந்து பார்க்கும் பகுத்தறிவு மனிதப் பிறவியின் தனிச் சிறப்பாகும். கல்விப் பயிற்சியால் அறிவு நிரம்புகிறது. நூற்கல்வி பெறப்பெற அறியாமை இருள் அகல்கிறது. இவ்வாறு கல்வியே ஒருவர்க்கு எழு பிறப்பிலும் உதவும் தன்மையுடையதா யிருக்கிறது. எனவே, ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் கல்வியேயாகும். கற்றவரே கண்ணுடையவராகக் கருதப்படுவர்.

கல்வி எல்லார்க்கும் வாய்த்துவிடாது. வறுமைச் சூழ்நிலையால் சிலருக்குக் கல்விச் செல்வம் வாய்க்காது போய்விடலாம். அத்தகையோர் கேள்விச் செல்வமாவது பெறவேண்டும். கேள்விச் செல்வமாவது யாது? கற்றலால்

வருவது கல்வி; கேட்டலால் வருவது கேள்வி. எனவே தான் திருவள்ளுவர் 'கற்றிலனாயினும் கேட்க' என்றார்.

கற்றுவல்ல அறிஞர் பேசுவதைக் கேட்டாவது, கல்வி பயிலாத ஒருவர் தம் கேள்வியறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். செல்வங்களுள் ஒன்றாகச் செவியால் கேட்டறியும் கேள்விச் செல்வம் மதிக்கப்பெறும். இக் கேள்விச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும். வாழ்க்கையில் தளர்ச்சி வருமானால் ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச்சொற்கள் சேற்று நிலத்தில் வழுக்காது உதவும் ஊன்றுகோல்போல உதவும். எனவே, கற்றறிந்த அறிஞரிடம் கேட்டுக் கேட்டுக் கேள்விச் செல்வத்தினைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தலால் காணும் ஒரு பொருள்பற்றி நுட்பமாக அறியும் ஆற்றல் வந்தமையும்; பின்னர்க் கேள்வியறிவும் நிறையும். இவ்வாறு உடையவர் பெரும்பாலும் பொருள்களைத் தவறாக உணரமாட்டார்கள். 'யானைக்கும் அடி சறுக்கும்,' 'முக்காலம் உணர்ந்தோரும் மயங்கி நிற்பர்' எனும் உலகியற் பழமொழிகளின்படி, ஒரு சமயம் பொருள்களைத் தவருக உணர்ந்திருந்தாலும் பேதைமையான சொற்களைச் சொல்லமாட்டார்கள். வழுக்கியும் வாயால் அறிவற்றனவற்றைச் சொல்ல மாட்டார்கள். கேள்விச் செல்வம் வாய்த்த காரணத்தால் தம்மை அறியாமையில் அழுந்தியவர் என்று பிறர் கூறிவிடும் அளவில் எத்தகைய சொல்லையும் கூறிவிடாது காப்பர். இத்தகைய நற்பண்பினையே புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலாசிரியர்,

"உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர் வாய்ச் சொல்" (பு. வெ : 167)

என்று குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர் இதனையே,

" பிழைத்துணர்த்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர் "

—திருக்குறள் : 417

என்று கூறியுள்ளார்.

## 2

" கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி "

—திருக்குறள் : 418

உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியினை ஆற்றுகின்றன. மனித உடம்பில் எந்தவோர் உறுப்பும் இறைவனால் வீணாகப் படைக்கப்படவில்லை. ஒவ்வோர் உறுப்பின் இயக்கமும் உடலை இயக்க வேண்டப் படுவதாயுளது.

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து புலன்களை ஐம்பொறி என்பர். மெய்யால் உற்றறிதலும், வாயால் உண்ணலும், கண்ணால் காணலும், மூக்கால் நுகர்தலும், செவியால் கேட்டலுமாகிய செயல்கள் நடைபெறுகின்றன.

ஒலிக்கூட்டங்கள் ஓர் ஒழுங்கில் இயங்கும்போது சொற்கள் பிறக்கின்றன. இச் சொற்கள் செவிகளைத் தாக்குகின்றன. இந்த ஓசையும் ஒலியுமே உலகில் நிறைந் திருப்பதனால் திருநாவுக்கரசர் பெருமானும் இறைவனைப் பாடவந்தபோது, 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்று குறிப்பிட்டனர். செவிகளில் இயற்கையாக அமைந் துள்ள துளைகள் வழி ஒலிகள் செவியினுள்ளே புகுந்து அங்கிருக்கும் செவிப்பறையைத் தாக்கி ஒலிகளைப் பொரு ளுணரும் சொற்களாக்குகின்றன. பின்னரே நாம்

சொல்லின் பொருளை மூளையின் ஆற்றல்கொண்டு விளங்கிக்கொள்கிறோம். எனவே செவிகள் கேள்வியறிவால் துளைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு கேள்வியறிவினைப் போற்றிப்போற்றி நுட்பமான அறிவை நிறைத்துக்கொள்ளும்போது செவிகள் கேட்கும் தன்மை உடையனவாகக் கருதப்படும்.

'கேள்வியாற் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும்
அமுதத்தின் சுவையாய் நின்றாள்'
(கம்பராமாயணம்; சவரி பிறப்பு நீங்கு படலம்: 7)

என்று கம்பநாடர் குறிப்பிடுவதுபோலக் கேள்விச் செல்வத்தினை விருப்பமாய் ஏற்றுக்கொண்ட செவிகளே அமுதமாகிய சுவையைப் பெற்று உணர்வாய் விளங்கும் பெற்றியனவாகும்.

இவ்வாறு கேள்வியறிவு கொண்டு துளைக்கப்படாத செவிகள், இயற்கையான துளைகள் அமைந்து ஓசையைக் கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மையுடையனவாகும்.

இதனையே இரும்பல் காஞ்சி என்ற நூல்,

"எய்கணை விழுத்துளை அன்றே செவித்துளை
மையறு கேள்வி கேளா தோர்க்கே"

என்று குறிப்பிட்டுள்ளது.

திருத்தக்க தேவரும் இவ்வாறு கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள் உடையவரை 'ஓட்டைச் செவியர்' என்கிறார்:

" ......இரும்பிற் போர்த்த
பழுதெண்ணும் வன்மனத்தார் ஒட்டை மரச் செவியர்
...........கேளார்."

(சீவக : 1552)

எனவே கேள்வியறிவினைக் கேட்டுப் பெறாதவர், செவியிருந்தும் செவிடராய் வாழுவோரேயாவர். இதனையே திருவள்ளுவர்,

" கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி "

—திருக்குறள் : 418

என்கிறார்.

## 3

" நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது "

—திருக்குறள் : 419

ஒருவருடைய கருத்தை அவர் சொற்களால் வெளிப் படுத்தப் பிறிதொருவர் செவிகளால் கேட்டு மற்றொருவர் விளங்கிக் கொள்ளலாம். ஆனால் இம்மட்டோடு அமைந்து விட்டால், செவியின் கடமை முற்றுப்பெற்றதாக ஆகாது. செவி கேள்விச் செல்வத்தினை மேலும் மேலும் பெற வேண்டும். ஒரு பொருளை ஆழமாக அணுகிக் கற்றவர் அப் பொருளினை உள்ளவாறு அறிந்தவராவர். அத்தகைய அறிஞர் ஒரு பொருளை மருட்சியோடு நோக்கமாட்டார்; தெளிவோடு நோக்குவார். தங்களுக்குத் தெளிவு வந்து விட்ட காரணத்தால் பிறருக்கும் அவர்கள் தெளிவை ஏற்படுத்த முடியும். கற்கக் கற்க அறியாமை இருள் அகன்று அறிவு என்னும் ஒளி வந்து நிறைகிறது. இது

போன்றே நுட்பமான அறிவுடையவர் ஒரு பொருளினை விளக்கிச் சொல்லச் சொல்ல அதனைக் கேட்பவர் கேள்வி நுட்பத்தினைப் பெறுகின்றனர். 'படிப்பு' என்ற பெயர்ச் சொல் 'படிதல்' என்னும் வினையினையும் உணர்த்தி நிற்கிறது. படிக்கப் படிக்க வாழ்க்கையில் படிந்துபோகும் தன்மை ஏற்படுகிறது; அடங்காமை அகன்று அடக்கம் ஏற்படுகிறது. இதனையே திருத்தக்கதேவர்,

'கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'

என்கிறார். வயலில் நெற்பயிர் பசுமையாகத் தொடக்கத்தில் இளம்பயிராய் நிற்கும்போது நிமிர்ந்து நிற்கிறது. கதிர் வாய்த்துப் பின் அவை முற்றியதும் பசுந்தாள்கள் மஞ்சள் நிறம் பெற்றதும், நெற்கதிர்கள் கீழே தலை சாய்கின்றன. கல்வி நிறைந்தோரும் கல்வி சேரச் சேர ஆரவாரம் குறைந்து அடக்கம் மிகுந்து காணப்படுவர்.

செவிகளால் கேட்டுக்கேட்டுக் கற்றறிந்த நல்லவரும் வாயிற்பிறக்கும் சொற்களில் அடக்கங் காட்டுவர். நடக்கும் பான்மையில் அடக்கத்தைப் பிரதிபலிப்பர். எனவே நுட்பமான பொருள்களைக் கேட்டறிந்தவரே வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக இருக்கமுடியும்.

"வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினான்"

(கம்பராமாயணம் : விபீடணன் அடைக்கலப் படலம் : 87)

என்று கம்பர் வீடணன், இராமனிடம் அடைக்கலம் கேட்கச் சென்றபோது, நுட்பமான கேள்விச் செல்வம் பெற்று, மறைத்த—அடங்கிய—பணிந்த வாயினனாக இருந்தனன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒருவர் பேசும் சொல் உறவை வளர்ப்பதற்கும் பயன் படும். உறவை முறிப்பதற்கும் பயன்படும். எனவே ஒருவர் சொல்லும் சொல், துன்பத்தைப் பிறருக்கு விளைத்து விடாமலும் அமையவேண்டும். நுட்பமான பொருள் களைக் கேட்டறிந்தவர்க்கே வணக்கமான சொற்களைப் பேசும் வாய் வாய்க்கும். அந்த 'அடக்கமே அமரருள் உய்க்கும்'. எனவே நுட்பமான பொருள்களைக் கேட் டறிந்தவர் அல்லாத மற்றவர், வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக இருக்கமுடியாது. இதனையே திருவள்ளுவர்,

" நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது " —திருக்குறள் : 419

என்கிறார்.

## 4

" செவியிற் சுவையுணரா வாயுணவின் மாக்கள்
அவியினும் வாழினும் என் ?"

—திருக்குறள் : 420

உடம்பில் அமைந்துள்ள ஒவ்வோர் உறுப்புக்கும் ஒவ்வொரு கடமையும் பணியும் உண்டு. ஐம்பொறிகளும் அதனதன் பணிகளைத் தட்டுப்பாடின்றிச் செய்யும் பொழுதுதான் ஒருவன் தன் கடமைகளைத் தட்டுப் பாடின்றிச் செய்ய முடியும். ஓர் உறுப்பு, ஒரு புலன் தன் செயலைச் செம்மையாகச் செய்யத் தவறினாலும் அதனால் பெரிதும் இடர்ப்பாடுவிளையும். ஓர் உறுப்பு நன்கு இயங்கி, மற்றோர் உறுப்பு தன் பணியினைச் சற்றுத் தளர்த்தினாலும்கூடச் செயல் முழுமை பெறாது.

உலகில் மனிதர்கள் பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள்; இறுதியில் முடிகிறார்கள். ஒரு சிலரே 'உரையும் பாட்

டும்' உடையவராய்ப் புகழ் பூத்து நின்று, இறந்தும் இறவாது வாழ்கின்றனர். மறைந்தும் மறையாத இத்தகு மாண்புடையோர் செயற்கரிய செயல்களைத் தங்கள் வாழ் நாளில் செய்தவர்கள் ஆவர்.

"உயிர் வாழ்வதற்கு உணவு தேவை; எனவே தேவையான அளவு உணவை மட்டுமே கொள்ள வேண்டும்" என்று சிலர் வாழ்கிறார்கள். ஆனால் பலர் உண்பதற்காகவே உடம்பெடுத்தவர்கள் போன்று வாழ்கிறார்கள். முன்னவர் உயிர்வாழ உணவு கொள்கின்றனர்; பின்னவர் உணவு உண்ண உயிர் வாழ்கின்றனர்.

ஒவ்வோர் உறுப்புக்கும் உரிய அளவு மதிப்பே தர வேண்டும். ஒவ்வோர் உறுப்பும் அவையவை அமைந்திருக்க வேண்டிய அளவில், அமைப்பில் அமைந்திருந்து செயல்பட்டால்தான் சிறப்பு. அதனை விடுத்து, ஓர் உறுப்பின் இயக்கம் குறைந்து, பிறிதோர் உறுப்பின் செயற்பாடு மிகுந்து விடுமாயின் சிக்கல்கள் தோன்றும்; வாழ்வு சீரழியும்.

வாயால் நுகரப்படும் சுவைகள் கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என ஆறாகும். அறுசுவை உணவு உண்ண வேண்டியதுதான். ஆனால் அளவு இருக்கவேண்டும். அவ்வாறு அளவு அமைந்தால் தான் பிறபிற உறுப்புகளின் பணிகளைத் தவறாது இயக்குவதில் மனித உடலின் நாட்டம் அமையும்.

செவியால் நுகரப்படும் சுவைகள் இரண்டாகும். அவை சொற்சுவை பொருட்சுவை என்பனவாம். சொற்சுவை குணம், அலங்காரம் என்று இரண்டாகக் கூறப்பெறும். பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், வெகுளி, அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைப்

படும். இதைத் தமிழ் நூலார் ஒன்பான் சுவை என வழங்குவர். செவிக்குக் குணம் அலங்காரம் என்னும் சுவைகளோடு, இந்த ஒன்பது சுவைகளையும் தரும் இலக்கியச் சுவை, கலைச்சுவை வேண்டற்பாலது.

எனவே செவியால் கேள்விச் சுவையினை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன, உயிரோடு வாழ்ந்தாலும் என்ன? என்று திருவள்ளுவர் சாடுகின்றார். திருவள்ளுவர் பெருமான் இவ்வாறு சாடும் இடங்கள் சிலவே. இதனாற் பெறப் படுவது, வாய்ச்சுவையினை மட்டும் வகையுற வளர்த்து விட்டு, கேள்விச் சுவை பெறாத செவியர்களாய் வாழ்வதை காட்டிலும் வாழாமல் இறந்துவிடுவது நல்லது என்பதாம். ஏனெனில் வாயுணர்வை வளர்த்துச் செவி யுணர்வை வளர்க்காதவன் வாழ்வதால் உலகிற்கு ஒரு பயனும், இறந்துவிடுவதால் உலகிற்கு ஓர் இழப்பும் இல்லை என்பதாம். இதனையே திருவள்ளுவர்,

" செவியிற் செவியுணரா வாயுணவின் மாக்கள்
அவியினும் வாழினும் என் "

—திருக்குறள் : 420

என்னும் குறட்பாவில் குறிப்பிடுகின்றார்.

# 2. இன்புறும் இன்சொல்

## 1

" துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு " —திருக்குறள் : 94

என்பது குறளமுதப்பா.

'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் அறிவிற் சிறந்த ஔவையார். 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்றார் அப்பர் பெருமான். பெறுதற்கரிய மனிதப் பிறவியினும் 'கூன் குருடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்பர். மனிதப்பிறவியின் பெருஞ் சிறப்பு, பேசுதற்கு நா படைத்ததாகும். மனித உள்ளத்தில் உருக்கொள்ளும் எண்ணங்களை வெளியிடுவதற்கு வாய்த்த நல்ல கருவி நாவேயாகும். மற்றவர் மனங்கொளப் பேசுதற்குச் சொற்கள் சீரியனவாயிருக்க வேண்டும். தங்கள் உள்ளக் கருத்துக்களைப் பிறருக்குப் பொருத்தமாக எடுத்துச் சொல்ல முடியாதவர்கள் மலர்ந்தும் மணம் பரப்பாத மலர்களுக்கு ஒப்பாவர். மலர்ந்தும் மணம் பரப்பாத மலர்களை மங்கையர் விரும்புதல் இல்லை. இதுபோன்றே பிறர் மனங்கொளச் சொல்ல முடியாத சொற்களை அறிஞர் ஒலிக்கூட்டங்களாகக் கொள்வரே யல்லாமல், கருத்து நிறைந்த சொற் கூட்டமாகக் கருதுவதில்லை.

சொற்கள் இரு திறத்தன. நன்மை பயக்கும் சொற்கள் ஒரு வகை; தீமை விளைவிக்கும் சொற்கள் பிறிதொரு வகை. நாக்கு எந்தச் சொல்லையும் பேசும் தன்மையுடையது. நாக்கைப் பெற்றிருக்கும் மனிதன் நன்மை தரும் சொல்லையே நாடிச் சொல்ல வேண்டும். தீமை பயக்கும் சொற்கள் கேட்போருக்குத் தீமை விளைவிப்பதோடு சொல்லுவோர்க்கும் இறுதியில் தீமையே விளைவிப்பதைக் காணலாம்.

வாழ்க்கையில் நாம் மூவகையினரைச் சந்திக்கிறோம். நமக்கு நட்பாவார் ஒருவகை; நமக்குப் பகையாவார் பிறிதொரு வகை; நட்பும் இன்றிப் பகையுமின்றி அயலாராக, நொதுமலாளராக நிற்பவர் மூன்றும் வகையினர் ஆவர். இம் முத்திறத்தார் மாட்டும் இன்சொல்லே கூற வேண்டும். எவன் ஒருவன் எல்லோரிடத்தும் இன் சொல்லே கூறி அவர்கள் மனத்தை மகிழச் செய்கிறானோ அவன் பிறரால் ஒருநாளும் துன்பப்பட மாட்டான். ஏனெனில் அவன் கூறும் இன்சொல் பிறரை மகிழ்விக்கின்ற காரணத்தால் அவன் சொல்லைக் கேட்கின்ற பிறரும் அவனை விரும்பி நேசிக்கத் தலைப்படுகின்றனர். தான் ஒருவன் பிறரிடத்து இனிய சொற்களையே பேசி அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி, அவர்கள் தன்னை விரும்பும்படிச் செய்துவிடுவதால் அவனுக்கு உலகில் யாராலும் துன்பமின்றி இன்பமே வந்தெய்துகின்றது. பலரும் அவனுக்கு உதவ விரைந்து வருகின்றனர். அதனால் வாழ்க்கையில் துன்பத்தைச் செய்யக் கூடிய வறுமை, யாரிடத்தும் இன்சொல் பேசுகின்றவனை அணுகுவதில்லை.

'கொடிது கொடிது வறுமை கொடிது' என்பர். அதிலும் 'இளமை வறுமை கொடிது' என்பர். வறுமை என்பது, 'போகந் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்' என்பர்

பழைய உரையாசிரியர் பேராசிரியர். 'நெருப்பினுள் படுத்து உறங்கினாலும் உறங்கலாம்; ஆனால் வறுமை வந்து வாட்ட ஒட்டிய வயிறோடு உறங்குதல் முடியாது' என்பர் திருவள்ளுவர். எனவே கொடிய வறுமையை விரட்டி ஓட்ட வேண்டுமென்றால் ஒருவன் எல்லோரையும் இன்சொல் கூறி மகிழச் செய்யவேண்டும். இதைத் தான் தவயோகியாம் திருமூலரும் 'யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தாமே' என்கிறார்.

எனவே, 'நம்மைச் சுற்றியுள்ள நட்பு, பகை, அயலார் என்கிற முத்திறத்தினரும் நம்மை விரும்பி நேசிக்க நாம் இனிமை பயக்கும் இன்சொற்களையே கூறி அவர்கள் இதயத்தை மகிழச் செய்யவேண்டும்; அவ்வாறு இன் சொல் இனிதீன்றால் வறுமை வந்து சேராது' என்கிறார் திருவள்ளுவர்.

'' துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு '' —திருக்குறள் : 94

2

'' பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற '' —திருக்குறள் : 95

என்பது குறட்பா.

வஞ்சனையற்ற அன்பு கலந்து மெய்ப்பொருள் உணர்ந்தவர்களின் வாயிற் பிறக்கும் சொற்கள் இன்சொற் களாகும். யாவரிடத்தும் இன்சொல் பேசுபவன் எல்லோ ராலும் நேசிக்கப்படுவான் என்பது தெளிவு. இது மட்டும் அன்று; பணிவுடையவனாகவும் இன்சொல் பேசு

பவனாகவும் ஒருசேர ஒருவன் விளங்குவதே ஒருவனுக்கு உண்மையான அணிகலமாகும்.

அழகு நாட்ட மென்பது உலகிற் காணப்படும் உயிர்களின் இயற்கை உணர்வாகும். இறைவன் படைப்பில் அழகு, விண்ணிலும் மண்ணிலும் நீரிலும் வெளியிலும் விந்தை செய்கின்றது. இறைவன் படைப்பில் எப்படியிருப்பினும் ஒவ்வோர் உயிர்களும் தம்மை அழகுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றே அவாவுகின்றன. எனவே தம்மைப் புனைந்து கொண்டு செயற்கைப் பொலிவோடாகவாவது திகழவேண்டும் என்று நினைக்கின்றன.

பிற அஃறிணையுயிர்களுக்கே அழகு நாட்டம் மிகுதியென்றால் மனிதவுயிர்களுக்கு அந்நாட்டம் இன்னும் சற்று மிகுதி என்பது தெளிவு. எனவே பஞ்சாலும் பட்டாலும் நெய்யப்பெற்ற நேர்த்தியான உடைகளையுடுத்து, பொன்னாலும் மணியாலும் ஆன அணிகலன்களை அணிந்து பகட்டாக நிற்கும்பொழுது பலரின் நெஞ்சு நிமிர்வதைக் காணலாம். இதனையே "விரகரிருவர் புகழ வேண்டும்; விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்; இடுப்பில் பஞ்சேனும் பட்டேனும் உடையாக அமைய வேண்டும்" என்றார் இடைக்கால ஔவையார். பிறரால் மதிக்கப்பட வேண்டுமென்றால் ஆடையும் அணிகலன்களும் அவசியம் வேண்டும் என்றார்.

ஆனால் இவையெல்லாம் புற அணிகளாகும். புறக்கோலத்தை இவ்வணிகள் ஆக்கி நிற்குமேயொழிய அகவழகை—உள்ளத்து உண்மையழகை இவை புலப்படுத்தா. பிறர் மனத்தினை மகிழச் செய்யும் அணிகள் இரண்டுள. ஒன்று பணிவுடைமை; பிறிதொன்று இன்சொல் வழங்குவது.

'தாழ்ந்து நிற்பர் வாழ்ந்து நிற்பர்' என்பது நம் நாட்டுப் பழமொழி. பணிவுடைமை என்னும் அதிகாரத்தில் 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்றார் திருவள்ளுவர். செல்வர்க்கு மேலும் செல்வம் சேரத் துணை செய்வது பணிவுடைமையே ஆகும் என்றார். எனவே பிறர் நம்மை விரும்ப நாம் முதற்கண் நம் மனத்தில் செருக்கினைக் கொள்ளாமல் இருக்கவேண்டும். பிறர் நம்மேல் நல்லெண்ணம் கொள்ள அவரிடம் நாம் பணிந்து போக வேண்டும். அடுத்து, கேட்கும் பிறரையும் தன்னையும் ஒருங்கே மகிழச் செய்யும் இன்சொல்லினையே யாவரிடத்தும் பேச வேண்டும். பணிவு என்பது அகவழகு; இன்சொல் கூறுதல் என்பது புறவழகு; எனவே, மதிப்பு வர வேண்டும் என்று அணியும் ஆடையும் அணிகலன்களும், ஒருவன் பணிந்த போக்கும் இனிய சொல்லும் கொண்டிராதபோது அணிகளாக அமையா. எல்லோரிடத்தும்பணிந்துபோகும்பண்பும், யாவரிடத்தும் இன்சொல்லே கூறி நிற்கும் மாட்சியும்தாம் ஒருவனுக்கு உண்மையான அணிகலன்களாகும். மற்றவர் ஒருவனை மதிக்கக் காரணமாய் இருப்பன அவன் பிறர்மாட்டுக் காட்டும் பணிவுடைமையும், இன்சொல் பகரும் திறமுமே யாகும் என்பர் திருவள்ளுவர்.

எனவே ஒருவனுக்கு அழகு செய்யும் உண்மையான அணிகலன்கள் பணிவும் இன்சொல்லுமே யாகும். பஞ்சாலும் பட்டாலும் பொன்னாலும் மணியாலும் அமைந்த ஆடைகளும், அணிகலன்களும் உண்மையில் அணிகளாகா.

" பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப் பிற "

—திருக்குறள் : 95

## 3

" அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் " —திருக்குறள் : 96

என்பது திருவள்ளுவர் வழங்கிய தேனமுதம்.

உலகம் பல்வேறு பண்புகளைத் தன்னகத்தே கொண்டது. ஒளியும் இருளும் கலந்தது; இன்பமும் துன்பமும் கலந்தது; மேடும் பள்ளமும் நிறைந்தது.

இதுபோன்றே பேசும் சொற்களில் நல்லவை உண்டு. தீயவையும் உண்டு. ஒலிக்கூட்டமாய் நின்று எழுத்துகளால் ஆகிய சொற்கள் பொருளைப் புலப்படுத்துகின்றன. இச் சொற்கள் இனிமை தருவதுமுண்டு; இன்னாமை தருவதும் உண்டு. எல்லாம் ஒருவர் பயன் படுத்தும் சொற்களில் அமைந்துள்ளது.

நல்ல சொற்கள் கடுமையாக இருத்தலும் இயற்கை, தீய சொற்கள் செவிக்கு இனிமையாக இருப்பதும் உண்டு. ஆனால் ஒருவர் பேசும் சொற்கள் நன்மையையும் விளைவிக்கவேண்டும்; அதே நேரத்தில் இனிமையான சொற்களாகவும் அமையவேண்டும். எனவே நன்மை தரும் நல்ல சொற்களையே தேர்ந்து, இனிமை பயக்கும் இனிய சொற்களையே எல்லோரிடத்திலும் சொல்லி வரவேண்டும். அவ்வாறு ஒருவன் பிறருக்கு நன்மை தரும் சொற்களை ஆராய்ந்து உணர்ந்து இனிமை ததும்பப் பிறரிடம் சொல்ல வல்லானாயின், அவன் செய்த பாவங்கள் நாளும் தேய்ந்து, அறம் பெருகத் தலைப்படும்.

இன்சொல், வன்சொல் என இருவகைச் சொற்கள் உண்டு. இன்சொல்லே பிறர் மனத்தை மகிழச் செய்வது; மகிழச் செய்யும் இன்சொல் நன்மை பயக்கும் நற்சொல்

லாகவும் இருந்துவிட்டால், இதுவரை உண்டாகிய பாவங்கள் குறைந்து இனி அறம் பெருகத் தலைப்படும் என்பதாம்.

இருளை ஓட்டுவது ஒளி; அதுபோன்று பாவத்தைத் தேய்ப்பது அறமாகும். அறம் நிறையப் பெருகப் பெருக ஒருவன் புகழ் மேன்மேலும் உயர்ந்தோங்கக் காணலாம். இவ்வாறு பாவந்தேய்ந்து, அறம் பெருகி, புகழோங்கக் காரணமாயிருப்பது 'இனியவை கூறல்' என்னும் இனிய பண்பேயாகும்.

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போன்று, வாழ்க்கையில் இரு கூறுகள் உண்டு; சொற்களில் இரு கூறுகள் உண்டு. சொற்கள் விளைக்கும் பயன்களும் இரு திறத்தனவாகும்.

இவ்வுலகம் அல்லவையும் நல்லவையும் கலந்தது. நல்லோர் அல்லவை செய்யார்; அல்லோர் நல்லவை நாடார். ஆனால் நல்ல சொற்களைத் தேர்ந்து, பிறர் மனம்உவக்கும்வண்ணம் இனிமையான முறையில் நன்மை பயக்கும் நல்ல முறையில் ஒருவன் பேசுவானானால் அவன் வாழ்வில் அன்றே பாவங்கள் தேய்ந்து அறம் வளரத் தலைப்படும். அதனால் நாளுக்கு நாள் அவன் புகழும் பெருகும்.

இதனையே திருவள்ளுவர்,

" அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் " —திருக்குறள் : 96

என்று குறிப்பிடுகின்றார்.

# 3. வீறெய்தும் வினையாண்மை

## 1

" மனையாளை அஞ்சும் மறுமை யிலாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று" —திருக்குறள்: 904

" உள்ளுதோறு உள்ளுதோறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு "

என்று மாங்குடி மருதனார் என்னும் மாண்பமை புலவர், 'திருந்திய தமிழில் தெய்வப் புலமை அருந்திறல் வள்ளுவன், ஆய்ந்துதன் வாக்கால் அறம் பொருள் இன்பம் வீடான நான்கின் திறந்தெரிந்துரைத்துச் செப்பிய முப்பாலாம்' திருக்குறளைப் பாராட்டிப் போந்தார். எக் காலத்திற்கும் இயைந்த வாழ்வியற் கருத்துகளை வகையுற மொழிந்து சென்றவர் தெய்வப்புலவர் என நாம் தெளி வுறப் பாராட்டும் திருவள்ளுவர்.

வாழ்க்கையில் ஒரு மனிதன் வெல்ல வேண்டியன அகப்பகை புறப்பகை என இரண்டாம். புறப்பகை கண்ணுக்குக் கண் காணக்கூடியது; ஆயின் அகப்பகை அவ்வாறன்று. அது மனத்தை மயக்கி மருட்டி உருட்டி அதன்வழி மனத்தைப் பாழ்படுத்தி நிற்பதாகும். எனவே புறப்பகையினும் அகப்பகை அடிக்கடி தீமை விளைவிக்கக் கூடியதாகும். இத்தகைய அகப்பகைகளில் ஒன்று காம

மாகும். கையிகந்த காமம் நேரே பகையாகக் கொள்ளத் தக்கது அன்றேனும் ஆக்கஞ் சிதைத்தல், அழிவுதலைத் தருதல் ஆகிய தொழிற் காரணங்களால் பகையோடு ஒத்து நிற்றலின் பகையின்பாற் படுவதாகும்.

பெரியாரை— ஆற்றலாற் பெரியரான வேந்தரை தவத்தாற் பெரியரான முனிவரை அவமதித்து ஒழுக லாகாத தன்மையினைப் 'பெரியாரைப் பிழையாமை' என்னும் அதிகாரத்தில் வற்புறுத்திய வள்ளுவர் பெருந் தகை, அதனையடுத்துப் 'பெண்வழிச் சேறல்' என்னும் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

பெண்வழிச் சேறலாவது யாது? "தன்வழி ஒழுகற் பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்" என்பர் பரிமேலழகர். மணக்குடவரோ "பெண்வழிச் சேறலாவது, இன்பம் காரணமாக மனையாள் வழி ஒழுகுதல்" என்பர். பரிதியார் 'மனையாள் வார்த்தை கேட்டலையே' பெண் வழிச் சேறல் என்று கருதுவர்.

ஆண் பெண் என்றமைந்த சமுதாயத்தில் அவ் ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கடமைகள் உண்டு. ஆண் பெரும்பாலும் வீட்டின் புறத்தே ஆற்றத்தக்க செயல்கள் பலவாகும்; பெண்ணோ வீட்டிலிருந்து ஆற்றும் கடமை களே மிகுதியாகும். இந்த வகையில் கடமையே ஆணின்— கணவனின் உயிர்நிலையாக அமைகிறது; கணவனே மனைவி யின் உயிராக ஒளிர்கிறான்.

" வினையே ஆடவர்க் குயிரே வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் "

என்று 'நல்ல குறுந்தொகை' நலமுற — நயமுற நவிலும்.

ஓர் ஆணுக்குக் குடும்பக் கடமையும் உண்டு; உலகக் கடமையும் உண்டு; குடும்பக் கடமையையும் குறைவற முடித்து, உலகக் கடமையையும் நன்கு செய்ய வல்லவர் சிலர். இத்தகையோர் வாழ்க்கை, போற்றத்தக்க வாழ்க்கை. ஆனால் சிலருடைய வாழ்க்கையில் குடும்பக் கடமைக்கும் உலகக் கடமைக்கும் இடையே போராட்டம் ஏற்படுகின்றபொழுது, குடும்பக் கடமையைப் போற்றி, உலகக் கடமைகளை ஒதுக்கி விடுவார்கள். இவர்களால் பொது வாழ்க்கைக்குத் தீங்கு நேரும். இவ்வாறு உலக வாழ்க்கைக்கு—பொதுவாழ்க்கைக்கு இடையூறாக ஒருவன் நடந்துகொள்வதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால், அதற்குக் காரணம் அவனுக்கு வாய்த்த மனைவியின் போக்கு காரணமாகலாம். அவள் மாட்டுக் கொண்ட அளவிறந்த காமத்தின் காரணமாக, அவள் எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் மதிப் பளித்துத் தன்னலப் பற்று மிகுந்து, தான் ஆற்ற வேண்டிய கடமைகளைத் துறந்து விடுகின்றான். தனக்கு வாய்த்த மனையாளுக்கு அஞ்சி அடங்கி ஒடுங்குகின்ற காரணத்தால் அவன் தன் பொதுக் கடமைகள் தடைப் பட்டதனோடு, அடுத்து அவன் இல்லறக் கடமைகளும் இனிதே நடைபெற இயலாமற் போகின்றன. எனவே அவனுக்கு மறுமைப் பயன் கிடைக்காமற் போகின்றது. மேலும் அவனுக்குச் செயலில் சிறக்கும் செம்மாந்த உள்ளம் இருப்பினுங்கூட, அவனைப் பெரியோர் போற்ற மாட்டார்கள்; மாறாக இகழ்வர். தன் வழியே மனைவி யைத் திருத்திக் கொணர முடியாமல், அவள்வழியே தான் சென்றுவிடுகின்ற காரணத்தால் இம்மைப் பயனும் புகழும் அவனுக்கு வாய்க்காமற் போய்விடுகின்றது. இவ் விரு நிலைகளையும் உள்ளடக்கியேதான் திருவள்ளுவர், ''மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுமைப் பயன் இல்லாத

ஒருவன், செயலாற்றுந் தன்மை பெருமைபெற்று விளங்க முடிவதில்லை" என்ற கருத்து விளங்க,

" மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று "
—திருக்குறள் : 904

என்று குறிப்பிட்டுள்ளார்.

## 2

" இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல் "
—திருக்குறள் : 905

இல்லறத்தை ஆள்பவள் மனைவி. எனவே 'இல்லாள்' என்ற அழகிய சொல் அவளைக் குறிக்க எழுந்தது. இச் சொல்லிற்கு எதிர்ச்சொல் இன்று. 'இல்லான்' எனில் வறியவன் எனப் பொருள்பட்டு நிற்கும். அறத்துப்பாலில் திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத்தில் பெண்ணின் பெருஞ்சிறப்புகளை நாவார மனமாரப் போற்றியுரைத்தார். மனைத்தக்க மாண்புடையாள், மனைவி என்றூர்; வளத்தக்க வாழ்க்கை நடத்துபவள், வாழ்க்கைத் துணை என்றூர். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள; கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்?' என்றார். கற்பென்பதற்கும் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன. 'கல்போன்ற திண்மை நிலை உடையவளாயிருத்தல்' என்பர் சிலர். 'கணவன் கற்பித்த வழியிலே நடத்தல்' என்றும் ஒருசிலர் கூறுவர். எனவே கணவன் காட்டிய வழியில், அறிவுறுத்திய நெறியில் கற்புடை மனைவி ஒழுகுவாள் என்பது பெறப்படுகின்றது. எனவேதான்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" —திருக்குறள் : 56

என்றும் மனைமாட்சி வீறெய்திய மனையாளைக் குறிப்பிட்டார். மனைமங்கலம் மாணப்பெற்ற மனைவி, முதற்கண் தன் கணவன்வழி நடத்தலையே தன் தலையாய கடமையாகக் கருதுவாள். கணவன் இனிது செய்யினும், இன்னா செய்யினும் தாய் தன் குழந்தையைக் கோல் கொண்டு அடிக்கும்பொழுது, அக்குழந்தை 'அம்மா, அம்மா' என்றே அலறி நிற்பது போல, மனைவியும் கணவன் வழியிலேயே கருத்துடன் நிற்பாள். கணவன் தான் வெறுப்பனவே செய்யினும், தான் அவனை வெறுக்க மனமின்றி அவனை மேலும் விரும்பி வாழ்வாள் பெண்." "கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக் குலமகள்" என்று பண்புசால் மனைவியைப் பாராட்டிப் போற்றுவர் குலசேகரப் பெருமாள். இவ்வாறு மனைவி வாய்த்து விட்டால் மனைவாழ்க்கை பீடும் பெருமையும் எய்துதல் திண்ணம்.

ஆனால் கைபிடித்த மனைவி ஒருத்திக்குப் பொருள் வேட்கை மிகுகிறது. 'பொருளற்றவரைப் பொருளாகச் செய்யும் பொருளை நனிவிரும்புகிறாள். அப்பொருள் இப்படித்தான் வரவேண்டும் என்று கருதாமல் எப்படியும் வந்து தீர வேண்டும் என்று அவள் கருதுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது அவளுக்குத் தன்னலம் மிகுந்து, அறவழியிற் செல்லும் பற்றுப் படிப்படியே குறையக் காணலாம். அந்த நேரத்தில் அவளை மணந்த கணவன் உள்ளத்தில் மனைவியா, பொதுக் கடமையா என்ற போராட்டம் எழுகின்றது. அப்போராட்டத்தில் அவன் மனைவி மேற்கொண்ட காமம் வெற்றி பெற்று

விடுமாயின், அது அவன் பொதுவாழ்க்கைக் கடமைக்கு இடையூறாக அமைந்து கெடுக்கின்றது.''

திருவள்ளுவர் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒத்த உரிமை நல்கும் சான்றோர் என்பதையும் இங்கு மறத்தல் கூடாது''. ''ஆணுக்குப் பெண் அடங்கும் பெண்ணடிமைத் தன்மை, குடும்ப முன்னேற்றத்தைக் குலைக்க வல்லது; அதுபோலவே பெண்ணுக்கு ஆண் அடங்கி நடக்கும் ஆணடிமைத் தன்மையும் பொது வாழ்க்கையைக் கெடுக்க வல்லது'' என்பர் அமரர் மு. வ. எனவேதான் தன் பொது வாழ்வுக் கடமையினை மனைவியின் சீற்றத்திற்கு அஞ்சித் துறக்கும் இயல்புடைய ஆணினையே இங்குப் பேசுகின்றார். இவ்வாறு இல்லாளை அஞ்சும் இயல்புடையவன், தானே தேடிய பொருளையும் தக்கார்க்கு — தகுதியுடைய நல்லன செய்தலை ஆற்றாது எப்பொழுதும் அஞ்சியே நிற்பான்.

நல்லவர்கள் யார்? 'தேவர், அருந்தவர், சான்றோர், இதுமுதுகுரவர்' என்பர் பரிமேலழகர். இல்லாளை அஞ்சும் இயல்பினனுக்குக் கடவுளைப் போற்றுதலும், கடவுள் மாட்டுக் காதல் கொண்டு உலகியல் வாழ்வினை உதறித் தள்ளிய தவஞானிகளைப் போற்றுதலும், சான்றாண்மைக்கு ஆழி என விளங்கும் சான்றோர்களைப் போற்றுதலும், தாய் தந்தையராய இரு முதுகுரவர்க்கு ஆற்ற வேண்டிய கடமையினைப் போற்றுதலும் இயலா என்கின்றார்.

அறிவிற் சிறந்த ஔவைபிராட்டி ஒருருக்குச் சென்றார். அவர் வழி நடந்து வந்த வருத்தத்தினைக் கண்ட ஒருவன், ஔவையாரை உபசரிக்க ஒருப்பட்டான். அப்பெருமாட்டியைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று திண்ணையில் அமர வைத்துவிட்டு உள்ளே சென்று, தன்

மனைவியை முகந்திருத்தி மகிழ்ச்சிப்படுத்தி, அவள் தலையில் பேன் பார்த்துப் பின்னர் விருந்து வந்தது என்று மெல்லச் சொல்ல. அவள் அவனை அடித்துச் சாடிப் படாதபாடு படுத்தினாள் என்று தனிப்பாடல் திரட்டிலே ஒரு கதை உண்டு.

எனவே திருவள்ளுவர் ''மனைவிக்கு அஞ்சி வாழ்கின்றவன் எப்போதும் நல்லவர்க்கு நன்மையான கடமையைச் செய்வதற்கு அஞ்சி நடப்பான்'' என்ற கருத்தமைய,

''இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்'' —திருக்குறள் : 905

என்ற குறட்பாவினை உரைத்துள்ளார்.

## 3

''இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்''
—திருக்குறள்: 906.

எண்ணற்ற உயிரினங்கள் இவ்வுலகில் வாழ்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு போக்கும் நோக்கும் கொண்டு வாழ்கின்றன. மனிதர்களும் இப்படித்தான். ஒவ்வொருவர் வாழ்க்கையையும் ஊன்றி ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று வாழ்பவர் ஒருவகை; 'எப்படியும் வாழலாம்' என்று கருதி வாழ்கின்றவர் பிறிதொரு வகை. முன்னபடி வாழ்பவர் சிலர்; பின்னதன் வண்ணம் வாழ்வோர் பலர். முன்னைய வாழ்க்கை வரப்பும் வேலியும் அமைந்த நிலம் போன்றது; பின்னது கங்கு கரையற்ற, தங்கு தடையற்ற

காட்டாற்று வெள்ளம் போன்றது. முன்னதில் நெறியினைக் காணலாம்; பின்னதில் வெறியினை நோக்கலாம்.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பர். மனம் போனபடி வாழ்தல் வாழ்வாகாது. மற்ற உயிரினங்களிலிருந்து மனிதன் பிரித்தெண்ணப்படுவது, அவனுக்கு அமைந்துள்ள சிந்தனை செய்யும் திறத்தாலேயாம். சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன்; சிந்தனையே அருளுக்குக் காரணமாகிறது; பகுத்தறிவிற்கு இடமாகிறது. சிந்திக்கச் சிந்திக்க மனிதன் உயர்கிறான். உயர்நிலை வாழ்வினை நம் முன்னோர் 'அமர வாழ்வு' என்றனர். உயரிய குறிக்கோளுடைய வாழ்வினை 'அமர வாழ்வு' என அகமகிழ்ந்து போற்றினர்.

பழங்காலத்தில் காதற் பண்பும் வீரப் பண்பும் சிறப்பாகப் போற்றப்பட்டன. போர்க்களத்தில் தோள்வீரமும் வாள்வீரமும் காட்டி நின்ற பகைவரை வென்று வெற்றிவாகை சூடுதல் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டது. அவ்வாறு விண்ணும் மண்ணும் அதிர வெறியாட்டமாடி வரும் விரோதிக் கூட்டத்தை வென்ற வீரனையும் வேல் விழியால், தோள் நலத்தால் வென்ற சேயிழையர் பலர். பகைவர் தோள்களை அஞ்சாது வென்ற வீரன், தன் வீட்டில் தன் மனைவியின் வேய் போலும், மூங்கில் போலும் தோளினையே தழுவிக் கிடந்து, தான் ஆற்ற வேண்டிய பொதுக்கடமைகளை மறந்து, துறந்து நிற்பானேயானால் அவனை ஒருவரும் போற்ற மாட்டார்கள்.

சச்சந்தன், காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் எற்றிப் பூமாண்ட தேன் வருக்கை கீறும்...ஏமாங்கதம் எனும் இசையால் திசைபோகிய நல்வளஞ் செறிந்த நாட்டின் மன்னன். ஆனாலும் அவன் ஆற்றவேண்டிய

கடமைகளை அறவே மறந்து, மனைவி விசயை வாழும் அந்தப்புரத்திலேயே கழித்தான். பெருவீரனானாலும் கடமையினை மறந்து, மனைவியின் தோளினைச் சேர்ந்து வாழும்வாழ்வே பெருவாழ்வு எனக் கருதிக் காலம் கழித்தான். அவன் கையிகந்த கழிமிகு காமம், இறுதியில் அவன் வாழ்விற்கே இறுதியாய் அமைந்தது. தக்க வாய்ப்பினை நோக்கியிருந்த அவன் அமைச்சன் கட்டியங்காரன், அவனை வென்று நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். எனவே கடமையை மறந்த காதற்கேண்மையும் கடியப்பட வேண்டும் என்பதனைச் சிந்தாமணி செப்பி நிற்கிறது.

மற்றோர் எடுத்துக்காட்டும் காணலாம். தசரதன் சூரியர் வீரம் விளங்கிநின்ற வேந்தன். போர்க்களங்கள் பலவற்றைத் தனதாக்கிக் கொண்ட தறுகண்மை வாய்ந்தவன். சம்பராசுரப் போரில் வெற்றிவாகை சூடிய திறலோன். இவ்வாறிருந்தும் அவன் கைகேயி மாட்டுக் கழிபெருங் கேண்மைக் காமம் கொண்டு நின்றான். அவன் நெஞ்சிலும் நினைவிலும் கைகேயி நிறைந்திருந்தாள். 'மானை யெடுக்கும் மானே போல்' அவளைத் தழுவிக் கிடந்து நாள் பல கழித்தான். யார்மேல் உயிரனைய காதல் கொண்டிருந்தானோ, அவளே மரந்தான் எனும் மனத்தளாகவும், உயிருண்ணுங் கொடுங் கூற்றாகவும் ஆனாள். எனவேதான் அவன்,

> ''விண்ணோர்காறும் வென்ற எனக்கோர்என்
> மனைவாழும் பெண்ணால் வந்தது அந்தரம்''

என்று மனம்மாழ்கித் தவித்தான். ''எந்தப் பொருள்மேல் நாம் அளவுகடந்த ஆசை வைத்திருக்கிறோமோ, அந்தப் பொருளாலேயே அளவற்ற துன்பம் வருதல் இயற்கை.'' எனவேதான் திருவள்ளுவர் பிறிதோரிடத்தில்,

''யா தனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்'' —திருக்குறள் : 314

என்றார்.

எனவேதான் வீரத்தோள்கள் பலவற்றை வென்று 'அமரர்' என மதிக்கத் தக்கவராயினும் மனைவி தோள் இரண்டனை வென்று வாழும் ஆற்றல் அற்று, அஞ்சி வாழ்வாரேயானால் அவரை எவரும் மதிக்க மாட்டார்கள்; பெருமையும் தரமாட்டார்கள் என்ற கருத்தில்,

''இமையாரினும் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்'' —திருக்குறள் : 506

என்று செந்நாப்போதார் திருவள்ளுவர் செப்பிப்போந்தார்.

# 4. கனவிலும் தேற்றாதார்

## 1

"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு."

—திருக்குறள்: 1054

உலகில் என்றும் மாறாமல் சில செயல்கள் நடை பெற்று வருகின்றன. கதிரவன் வைகறையில் கீழ்த்திசையில் உதிப்பதும், மாலையில் மேற்திசையில் மறைவதும் என்றும் நடைபெற்றுவரும் செயல்களாகும். கதிரவன் வானத்தில் நின்று ஒளி வெள்ளம் பாய்ச்சும் காலத்தினைப் 'பகல்' என்றும், அவன் மாலையில் மேற்கே மறைந்த பின்னர் இருள் கவிந்ததும் திங்கள் தோன்றி ஒளி விளக்கம் தருகின்ற காலத்தை 'இரவு' என்றும் குறிப்பிடு கின்றோம். பகலும் இரவும் உலகின் நடைமுறை இயற்கைகளாகும்.

இது பேன்றே சமுதாயத்தில் உடையாரும் இல்லாரும் ஒருங்கே வாழக் காண்கிறோம். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை' என்றார் திருவள்ளுவர். உயிர் வாழ்வதற்குக் காற்றும் ஒளியும் நீரும் உணவும் உடையும் ஒருங்கே தேவைப்படுகின்றன. இறைவன் படைப்பில் காற்றும் ஒளியும் நீரும் இயல்பாகக் கிடைக்கின்றன. உணவும் உடையும் எல்லோர்க்கும் எளிதில்

இயைந்து விடுவதில்லை. அதிலும் உயிர்வாழ்க்கைக்கு உதவும் உணவு ஒரு சிலர்க்கு எளிதாகவாய்த்து விடுவதோடன்றி, அவர்களிடம் தேவைக்கு மேல் சில சமயங்களில் குவிந்து விடுவதனையும் காணலாம். உழைப்பு உணவைப் பெறுவதற்குரிய பொருளை—பணத்தை நல்கும் திறம் சான்றது என்றாலுங்கூட, சில நேரங்களில் சிலருக்கு, ஏன் பலருக்குங்கூட உழைப்பைப் பயன்படுத்திப் பொருளீட்டும் வாய்ப்பே கிட்டாமற் போவதும் உண்டு. அந்நிலையில் ஏற்படும்போது நல்குரவு—வறுமை அவர்கள் வாழ்க்கையில் தாண்டவமாடத் தொடங்குகின்றது. எனவே உடையாரிடம் சென்று, பொருள் உடையாரிடம் சென்று இரந்து உயிர் வாழவேண்டிய அவல நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றார்கள். அது பொழுது உடையார் மனம் உவந்து, இரப்போர்பால் இரங்கி உதவி செய்வார்களாயின், வறியவர் வாழ்வு வளம்பெறும்; வாழ்வு பெறும்; ஒளி பெறும்; உயிர்பெறும். இன்றேல் இரப்போர்க்கு இரண்டு வழிகளே உள. ஒன்று அந்த இரப்போர் பொல்லாதவர்களாகித் தாம் உயிர் வாழத் திருடு, கொலை, கொள்ளை முதலான கொடிய தொழில்களில் ஈடுபட்டுச் சமுதாயத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவர்; இன்றேல் உயிர் துறக்க நேரிடும் என்பர் அமரர் மு. வ. அவர்கள்.

இந்த இரண்டும் நல்லனவல்ல என்கின்ற காரணத்தால் திருவள்ளுவர் பெருமான் 'இரவு' என்ற தலைப்பில் சில அருங் கருத்துகளைச் சமுதாய வாழ்விற்கு நலஞ் சேர்க்க மொழிகின்றார்.

'கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு, இரத்தலும் ஈதலே போலும்' என்கிறார் வள்ளுவர். அதாவது, தம்மிடத்தில் உள்ள பொருளை மறைத்துக் கூறும் இயல்பைக் கனவிலும் அறியாத செல்வடரித்தில் இரந்து

கேட்பதும், பிறருக்குத் தாம் வழங்குவதே போன்ற சிறப்புடைய செயலாகும் என்கிறார் அவர்.

ஈண்டு, இழிந்த பண்பாக நாம் இயல்பில் கருதும் இரத்தலும், உயர்ந்த பண்பாகப் போற்றப்படும் ஈதலும் வள்ளுவரால் ஒருங்கு வைத்து எண்ணப்படுவதனைக் காணலாம்.

இதன் நயத்தினை, உண்மையினை இனிக் காண்போம்.

"அறிவின் முதற் பாடம் செல்வத்தை வெறுப்பது; அன்பின் முதற் பாடம் செல்வத்தை அனைவருக்குமாகச் செய்வது" என்றார் இரஸ்கின் என்னும் பெருமகனார்.

தம்மிடம் 'ஒன்று' இருந்து, 'இல்லை' என்று வந்து கேட்டவர்க்கு 'இல்லை' என்று சொல்லாத இயல்புடையோர், இரக்கமும் உள்ளக் கசிவும் உடைய 'உடையார்' ஆவர். அதிலும் நனவிலன்றிக் கனவிலும் தம்மிடம் வந்து கேட்டவர்க்கு 'இல்லை' என்று கூறாத இயல்புடையோரிடம் சென்று 'ஒன்று' இரந்து நிற்பதும், ஈதலே போன்ற, இரப்பவரும் பிறருக்கு வழங்குவதே போன்ற சிறப்புடைய செயலாகும்.

தம்மிடம் உள்ளதை இரப்போர்க்கு மறைக்காதோரிடம் இரத்தல் ஈதல் போன்ற செயலேயாகும் என்று திருவள்ளுவர் கூறுவதனால் இரண்டு உண்மைகள் பளிச்சிடக் காணலாம்.

ஒன்று, கனவிலும் தம்மிடம் உள்ளதை மறைத்து இல்லையென்று சொல்லும் இயல்பில்லாத உடையாரிடம் சென்று இரப்பது உண்மையில் இரத்தலாகக் கொள்ளப்படாதது மட்டுமன்றி, அதற்கு மாறான ஈதலே போன்ற இனிய சிறப்புடையது என்பதாகும்.

இரண்டாவதாகக் கொள்ளத்தக்கது, கரத்தல் கனவிலும் தேற்றாதார் சிறப்பு அவரிடம் இரப்பதே ஈதலாகும் என்றால், அவர்தம் ஈதல் எத்தகைய உயர்வுடைத்தாகும் என்பது கூறாமலே விளங்கும்.

எனவே, தம்மிடம் ஒன்று இருந்து, இல்லையென்று தம்மிடம் இரந்து கேட்டவர்க்குக் கனவிலும் 'இல்லை' யென்று கைவிரிக்காத பண்பினரிடம் இரத்தலும் ஈதலே போலும் சிறப்புடைத்து என்கிறார் திருவள்ளுவர்.

''இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.''

—திருக்குறள்: 1054

## 2

''கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது.''

—திருக்குறள்: 1055

கவிஞன் சமுதாயத்தை ஆழ்ந்து நோக்குகின்றான். அச் சமுதாயத்தில் அவன் ஏதேனும் குறை கண்டால் அதனைப் போக்குதற்கு அவன் முனைகிறான். சமுதாயத்தில் காணப்படும் தீமையைக் களைவதற்கு அவன் சில மாற்றுகளைப்—பரிகாரங்களைச் சொல்கிறான். ஒருவர் மனத்தை உயர்த்தும், பண்படுத்தும் பண்பு படைத்தவனே ஓர் உண்மையான, உயர்ந்த கவிஞனாகக் கொள்ளப்படுவான்.

கம்பர் ஓர் உயர்ந்த புலவர். தம் கவிக்கு நாயகனாம் இராமனுடைய கோசல நாட்டைக் காணும்பொழுது 'இரப்பாரும் இல்லை; ஈவாரும் இல்லை; உடையாரும்

இல்லை; வறியரும் இல்லை' என்று பாடிப் போந்தார். இது கவிச்சக்கரவர்த்தி கனவு காணுகின்ற கோசல நாடாகும். இதனைக் கவிஞனின் மனத்தேர், 'மனோரதம்' எனலாம். கவிஞன் கனவு கண்டால் மட்டும் போதாது; நடைமுறையில் காணும் நாட்டு நடப்புகளுக்கும் வடிவம் தருதல் வேண்டும். எனவே தான், தாம் படைத்த இராமாயணத்திலேயே 'அருத்தி வேதியனின் ஆசையை' இரக்கும் பொழுதும் ஆசை எல்லை கடந்து போகும் தன்மையினையும் மறவாது குறிப்பிட்டுப் போந்தார்.

இதே போன்று 'இரவு' கூறும் திருவள்ளுவர் அதனை யடுத்து 'இரவச்சமும்' கூறப் போகிறார் என்பதனைக் காணுகின்றோம். 'இல்லை' என்று எவரும் ஒருவரிடம் சென்று இரக்காத அந்த இழிநிலை நிலவாத சமுதாயமே வள்ளுவர் கனவு காணும் உலகச் சமுதாயம் ஆகும். ஆனாலும் நடைமுறையில் நிலவும் நிலையினையும் கருத்திற் கொண்டு 'இரவு' எனும் அதிகாரத்தில் 'இரத்தல்' பற்றிக் கூறி,' அடுத்த அதிகாரமாம் 'இரவச்சத்தில்' தம்மிடம் உள்ளதை ஒளிக்காது இரந்தவர்க்கு ஈயும் பேருள்ளம் கொண்டவரிடத்தும் சென்று இரக்காத தகைமையே—சால்பே வேண்டற்பாலது என்று இரத்தலைக் கடிந்து ஒதுக்குகின்றார் திருவள்ளுவர். இரத்தல் எனும் நிலைக்கு இடம் அளிக்காத சமுதாயம், வள்ளுவர் காணும் வளமான சமுதாயமாகும். ஆனால் இரத்தல் உலகில் என்றும் இருந்தே தீருமோ என்றும் எண்ணிப் பார்க்கிறார் திருவள்ளுவர். எனவே இல்லாதவர்களுக்கு (Have—nots) உடையவர்கள் (Haves) கொடுத்து உதவ வேண்டும் என்று இரக்கப் பண்பினை வற்புறுத்தி 'இரவு' என்னும் அதிகாரத்தினைப் படைத்துள்ளார்.

'மக்களிடை இரக்கமும் சகோதரப் பரிவுணர்ச்சியுமே மனித வாழ்வில் பெறுவதற்காக முயல வேண்டிய பேருணர்ச்சிகளாகும்' என்று ஜார்ஜ் எலியட் என்னும் பெரியார் குறிப்பிடுகிறார்.

"அன்புண்டு இரக்கமில்லை என்று பாசாங்கு செய்ய முடியுமோ? அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள் என்னும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர் (ராபர்ட் சௌத்வெல்) கூறியிருப்பதனை நோக்கவேண்டும்.

"ஒருவர் முன் நின்று இரப்பவர், அந்த இரத்தலாகிய செயலை மேற்கொள்வது, உள்ளதை இல்லை என்று உளம் மறைத்து ஒளித்துக் கூறாத நன்மக்கள் உலகத்தில் இருப்பதால்தான்" என்று இக்குறளில் திருவள்ளுவர் தெளிவுறப் புலப்படுத்துகிறார்.

இதனால் கொடுப்பவர் இருப்பதனால் இரப்பவர் உருவாகின்றார்கள் என்று ஆகின்றது. இஃது இல்லையென்னாது மனம் உவந்து கொடுப்பதைப் பாராட்டுகின்றதா? அன்றித் தூற்றுகின்றதா?

ஒள்ளிய சீர் வள்ளுவர் முப்பாலுக்குத் தப்பாது பொருளுரைத்த தெள்ளிய கருத்தினராம் பரிமேலழகர், "அவரில்லை யாயின், (அதாவது கரப்பிலார்) மான நீக்க மாட்டாமையின் உயிர் நீப்பர் என்பதாம்" என விளக்கவுரை பகர்கின்றார்.

மனித குலம் மானத்தைப் பெரிதாக ஓம்ப வேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி. இரப்பவர் ஒன்று கேட்டு 'இல்லை' என்ற மறுமொழி பெறுதல் இரவினும் இழிவு, இழிவினும் இழிவாகும். எனவேதான் கரப்பிலாது மறைக்காது வழங்கும் வள்ளல்கள் வாழ்வதனால், இரப்பவர்க்கு

மானம் கெடவந்து உயிர் துறக்கும் நிலை ஏற்படவில்லை என்று வள்ளண்மைப் பண்பினை வாயாரப் போற்றி மொழிகின்றார் வள்ளுவர். அதனால் தான் 'இரவு' அதிகாரத்தின் மூன்றாம் குறளில்,

"கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்பும் ஓர் ஏர் உடைத்து" —திருக்குறள் : 1053

என்றார். இதனால் கரவாதாரை உலகத்திற் பெறுதல் அரிது என்பதும் ஒருவாறு விளங்கும்.

எனவே இரத்தல் என்னும் தொழிலை மேற்கொள்வோர், தம்மிடம் உள்ளதை இல்லை என்று ஒளித்துக் கூறாத நன்மக்கள் உலகத்தில் உள்ளதனால் உயிர்க்கின்றனர் என்கிறார் வள்ளுவர்.

"கரப்பிலார் வையகக்து உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது"

—திருக்குறள் : 1055

## 3

"கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்"

—குறள் : 1056

"மனிதப் பிறவியின் விழுப்பத்துக்கு அடிமையான காரணம், அப் பிறவியில் அறத்தொண்டு நிகழ்ச்சிக்கு இடம் உண்மையேயாகும்" என்கிறார் தமிழ் முனிவர் திரு. வி. க. "நாம் பெறுகின்ற இன்பங்களில் நமக்குச் சலிப்பேற்படலாம்; ஆனால் தருகின்ற இன்பங்களில் அன்று" என்கிறார் அறிஞர் ஒருவர். "Give me the ready hand rather than the ready tongue" என்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி.

உடையாரும் இல்லாரும் நிறைந்தது சமுதாயம். இல்லாருக்கு இருப்போர் உதவினால்தான் இல்லார் உயிர் வாழ முடியும்; இன்றேல் இல்லார் இவ்வுலகில் இல்லார்; இவ்வுலகை விட்டு மறைந்தார் என்னும் நிலை வந்துறும்.

இக் குறளில் திருவள்ளுவர், நம்மிடம் பிறருக்குத் தருவதற்கென்று ஒன்று தாராளமாக இருக்க, அதனை இல்லார் ஒருவர் கேட்டுத் தம்முன் இரந்து வந்துற்று நிற்கும் நிலையில் 'இல்லை' யென்று ஒளித்துக் கூறும் பண்பினை இடும்பை—நோய் என்கிறார். 'கரப்பிடும்பை' என்னும் சொல்லினை ஆழ்ந்து உன்னிப் பார்க்க. கரப் பிடும்பை—அதாவது ஒன்றை உடைத்தாயிருந்து இல்லை எனப் பிறருக்கு மறைக்கும் நோய் என்று பொருள் படுவ தாகும். இதனால் திருவள்ளுவர், கரத்தல் என்பது ஒருவர்க்கு வேண்டாத பண்பு எனத் தெளிவுறுத்து கின்றார். எனவே ஒன்று உடையார் தம் ஈகைச் செயல் மேம்பட இல்லாரை எண்ணி நிற்பர். இல்லாரைக் கண்ட போது கழிபேருவகை அடைவர்.

சங்க காலத் தமிழகம் ஈண்டு எண்ணத் தக்கது.

வாரி வாரி வழங்கும் வள்ளண்மைப் பண்பு வாய்ந்த வள்ளல் ஒருவனைக் குறிப்பிட வந்த சங்க காலக் கவிஞர் ஒருவர்,

"இரவலர் வாரா ராயினும்
தேரின் தந்து ஆர்பதம் நல்கும்"

கொடைப் பண்பினை மனமுவந்து பாரட்டுகின்றார். ஒரு நாள் இரவலர் தன்னிடம் வரவில்லை யென்றாலும், தேரையனுப்பி, இரவலரைத் தேடிக்கொணர்ந்து அவர்க்கு வேண்டுவன வழங்கி யருளும் கோடா நெஞ்சின்

கொடைஞன் என வள்ளல் ஒருவனை வாயார நாவாரப் பாராட்டி மொழிகின்றார் கவிஞர்.

சங்க காலத் தலைவன் ஒருவன் வஞ்சினம் செய்யும் பொழுதும், "நான் கண்போற் சிறந்த என் காதலியினை விட்டு நீங்குவேனாயின், இரவலர் வாரா வைகல் பலவாகுக" என்கின்றான். அதாவது இரவலர் என் இல்லந் தேடி வாரா தொழியும் நாள்கள் பலவாகட்டும் என்றான். இதிலிருந்து இரவலர் நாள்தோறும் தன்னிடம் வர உவக்கும் அவன் பேருள்ளம் புலனாகின்றது.

தம்மிடம் உள்ளதை ஒளிக்கும் நோய் இல்லாத வரைக் கண்டால், இருப்பவரின் கொடிய வறுமைத் துன்பம் எல்லாம் ஒருசேரக் கெட்டொழியும் என்கிறார் வள்ளுவர்.

தனிப்பாடல் திரட்டிலே ஓர் அருமையான பாடல்.

வறியவன் ஒருவன் வாழ்வில் வாட்டமுற்றான்; கொடிய வறுமை அவனை வாட்டி வதைத்தது. அவன் வாழ்நாள்கள் மெல்ல மெல்ல இல்லையாகி வந்தன. 'பழுமரம் தேடிச் சென்று பயன்பெறும் பறவை' போல, வள்ளல் ஒருவனை நாடிச் சென்று தன்னை வாட்டும் வறுமை யொழிந்து வளம் பெற வேண்டும் என்று அவ் வறியவன் நினைந்தான். தக்கதே நினைந்தான் அவன். நின்றையூரில் நீடு புகழ் துலங்க வாழும் காளத்திவாணன் அவன் நினைவில் வந்து நின்றான். தன்னை வாட்டும் வறுமை அவ் வள்ளலைக் கண்ட மாத்திரத்திலேயே 'பகலவனைக் கண்ட பனி' போல் 'ஞாயிற்றின் முன்னர் இருள்' போல் மாய்ந்தொழிதல் உறுதி என உணர்ந் தான். எனவே த்ன் நிழல்போல் தன்னை விடாது தொடரும் வறுமையை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்கினான். "என்னைவிட்டு நீங்காத நிழல்போல என்னோடு வாழ்நாள் நெடுகிலும் வந்துள்ள வறுமையே,

நீ நாளைக்கு என்னோடு இருப்பாயா? வள்ளல் காளத்திவாணன் வாழும் நின்றையூர்க்கு நாளை நான் சென்ற பிறகு நீ யெங்கே? நான் எங்கே? நீ என்னை விட்டு நீங்கப் போவது உறுதி. போனால் போகிறது, நெடுநாள் பழகிய கேண்மை உடைய நீ, இன்றைக்கு மட்டும் என்னோடு தங்கி இருந்துவிடு'' என்கிறான்.

''நீளத்திரிந் துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக்கிருப் பாயோ நல்குரவே!—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால்—நீயெங்கே—நானெங்கே?
இன்றைக்கே சற்றே இரு.''

இந்தப் பின்னணியில் இனிக் குறளை நோக்குவோம். தம்மிடத்தில் உள்ளதை ஒளித்து இல்லை என்று இரப்பவர்க்குக் கூறும் இயல்பான நோய் இல்லாதவரைக் கண்டால், இரப்பவரின் வறுமைத் துன்பம் அனைத்தும் ஒரேயடியாக ஒரு மொத்தமாகக் குறைந்து கெடும் என்கிறார் வள்ளுவர்.

இக் குறளில் வறுமையே நோய் என்று குறிப்பிட்ட வள்ளுவர் கரத்தலை அதற்கீடான நோயாகக் குறிப்பிட்டிருப்பது உன்னத்தக்கது.

''கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்''

—திருக்குறள் : 1056

# அறத்தான் வரும் இன்பம்

## 1

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே' என்பர் ஆன்றோர். ஒரு நூலின் பயன், அந்நூல் வாழ்க்கையில் மனிதன் அடைய வேண்டிய உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களையும் விளக்கி வற்புறுத்தி நிற்க வேண்டும் என்பர். இந் நான்கனுள்ளும் அறம் வலியுடைத் தென்பது திருவள்ளுவர் கருத்து. காரணம், ஏனைப் பொருளும் இன்பமும் போலாது அறன், இம்மை, மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான் அவற்றினும் வலியுடைத்தென்று கூறுவர். புறநானூற்றுப் பாட லொன்றன் தொடரும் இக் கருத்துப்படப் பின்வருமாறு அமைந்துள்ளது.

''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல.'' —புறம் : 31

இனி, அறன் எனப்படுவது யாதெனக் காண்போம்? அறம் என்பது செயலா? அன்றிச் சொல்லா? அன்றி இவ்விரண்டிற்கும் காரணமான எண்ணமா? இம் மூன்றும் சேர்ந்ததே அறமாகும். செயலுக்கும் சொல்லிற்கும் எண்ணமே அடிப்படையாக அமைகின்றது. ஆகையால்

எண்ணத்தின் தூய்மையே தலையாயது; முதன்மை யானது. ஆகவே ஒருவர் முதற்கண் மனத்தில் மாசு மண்டாத நிலைமையினைப் பெற வேண்டும். மாசு இல்லாத தன்மையை மனம் பெற்றுவிட்டால் அங்கு அறம் அரசோச்சுவதில் தடையில்லை. மனத்தின்கண் மாசு இல்லாமல் இருக்கும் நிலையே அறம் விளங்கும் நிலையாகும். மனமாசு நீங்காமல் செய்யும் செயலும் சொல்லும் வீண் ஆரவாரமானவை; அவை அறம் என்று கொள்ளப்படா.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."
—திருக்குறள் : 34

மணிமேகலையாசிரியர் வாழ்க்கை வசதியற்ற வறியவர்க்கு உணவு, உடை, உறையுள் என்ற மூன்றையும் அளிப்பதே அறமெனப்படும் என்று அறைகின்றார்.

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்."

பிறர்க்கென உதவும் பெருமனம் யாருக்கு வரும்? மனத்துக்கண் மாசில்லாதவனுக்கே வரும் என்க. மனத்துக்கண் மாசு புகுந்துவிட்டால் அங்குப் பொறாமைப்பேய் முதற்கண் குடிபுகும். ஆசையெனும் அரக்கன் வாழ்வான்; வெகுளி எனும் வேண்டாத பண்பு வீறிடும்; இன்னாச் சொல் இனியதோர் இடம் பெறும். எனவேதான் மனத்துக்கண் மாசற்றுத் துலங்கவேண்டும்; அஃதே அறம் என்கிறார் வள்ளுவர்.

வாழ்க்கையில் இவ்வறம் விளைவிப்பன யாவை? அவை பலவாகும். முதற்கண் வாழ்க்கையில் மனிதர் வேண்டுவது

யாது? புகழ். 'புகழெனின் உயிரும் கொடுக்குவர்' என்பது கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி வாக்கு. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றும், 'அஃதிலார், தோன்றலின் தோன்றாமை நன்று' என்றும் திருவள்ளுவரே குறிப்பிட்டுள்ளார். 'புகழ்பட வாழ்ந்தாரே ஈண்டுப் பிறந்தார்' என்பர். எனவே சிறப்புகளில் தலையாய சிறப்பாகிய புகழ், இவ்வறநெறி நிற்றலால் கிடைக்கிறது. மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் அறநெறியில் நின்றவர் வாழ்விலேயே புகழான சிறப்புப் பொருந்திக் கிடக்கக் காணலாம். அடுத்து அறவழி நிற்றலால் இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளும் கிடைக்கின்றது. 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார் வள்ளுவர். அப்பொருளை அறம் வழங்கும் வன்மையுடைத்து. ஆகையால் அறத்தை விட உயிர்க்கு ஆக்கமானது வேறு எது? அறத்தை விட ஆக்கமும் இல்லை; அதை மறந்து விடுவதைவிடக் கெடுதியும் இல்லை.

''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூ உங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'' —திருக்குறள் : 31.

''அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்திலி னூங்கில்லை கேடு.'' —திருக்குறள் : 32.

இவ்வாறு அறத்தின் பெருமையை உணர்ந்த பிறகு ஒருவர் செய்யத் தக்கது யாது? அவ்வறம் தம் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இடம் பெறுமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அறச்செயல்களை இயலும் வகையால் ஓயாமல் செய்யவேண்டும். செய்யத்தக்க வழியில் எல்லாம் செய்யவேண்டும்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்." —திருக்குறள் : 33.

இவ்வாறு திருவள்ளுவர் அறத்தின் இன்றியமையாமையினைத் தெளிவாகவும் திட்பமாகவும் வலியுறுத்தக் காண்கிறோம்.

## 2

தீமை களைந்து நன்மை ஈட்டும் அறத்தின் திறம் காணப்பட்டது. அல்லது நீக்கி நல்லது நாட்டும் அறத்தின் தன்மை விளக்கப்பட்டது. திருவள்ளுவர் அறம் பற்றிய கோட்பாட்டினை மேலும் ஒரு தெளிவு தந்து விளக்கி நிற்கின்றார். அறமாவது எது? என்னும் வினாவிற்கு விடை காண முற்படுகின்றார். பொறாமை முதற்கண் மனித மனத்திலிருந்து கடியப்பட வேண்டும் என்று கருதுகின்றார். இரண்டாவதாக அவர் அகத்தை விட்டு அகலவேண்டும் என்று வற்புறுத்துகின்றார் மூன்றாவதாக வெகுளி நெஞ்சத்திலிருந்து சொல்லாகவோ செயலாகவோ வெளிப்படுதல் கூடாது என்று குறிப்பிடுகின்றார். நான்காவதாக உறுதி பயக்காமல் இறுதி பயக்கும் இன்னாச் சொல்லினை அறவே நீக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

—திருக்குறள் :35

அழுக்காறு என்னும் பொறாமைப் பண்பு நெஞ்சத்தில் கொஞ்சமும் தங்கக்கூடாது என்பது வள்ளுவர் வாய்மொழி. இப்பொறாமைப் பண்பு மிகுந்தால பிறர்மேல் வடுக்கண்டு வற்றாகும் கீழ்நிலையையே ஒருவன் அடை

வான். பிறர் ஆக்கங்கண்டு நெஞ்சழியும் நேர்மையற்ற நிலையே அவன்மாட்டுக் காணப்படும். எனவே அழுக்காறு அணுவளவில் அகத்தில் குடியிக்க வேண்டா என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் அவாவே. அவா நீங்கினால் துன்பம் துடைக்கப்பட்டு இன்பம் பிறத்தல் இயற்கை.

''ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்'' —திருக்குறள் : 370

என்று பிறிதோரிடத்தில் திருவள்ளுவர் தெளிவுறுத்துகிறார். 'குணமென்னுங் குன்றேறி நின்றாரும் வெகுளி கணமேயும் காத்தல்' அரிதாம். எனவே வெகுளி வேண்டப்படாது கடியப்பட வேண்டுவதாகும். 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந்த' செயலாகும். எனவே இன்னாச்சொல்லுக்கு இடமற்ற வாழ்வே நல்லது; உறுதிபயப்பது. எனவேதான் இந்நான்கு பண்புகளும் சாராத பண்பே அறம் எனத் திறமாகச் சொல்கிறார் திருவள்ளுவர்.

வீட்டில் விருந்து போற்ற அரிசியில்லா நிலையிலும் விளைநிலத்தில் வித்திய நெல்லைக் கொணர்ந்து அடியவர்க்கு விருந்து போற்றிய இளையான் குடி மாற நாயனார் அறத்தின்பாற் கொண்ட பற்றுதான் எத்துணை வியப்பிற்குரியது; இறுதி மூச்சு பிரியும் நிலையிலும் தான் இதுகாறும் திரட்டிய அறத்தின் பயனைக் கண்ணபிரானுக்குக் கொடையாக நல்கிய கன்னனின் அறப்பற்றுதான் எத்துணை விழுமியது!

எனவே உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு அறம் செய்ய வேண்டுமென உறுதி பூண வேண்டும். 'காசி ரகசியம்' என்ற நூலும் வள்ளுவர் வழி நின்று அறனைப் பின்வருமாறு வலியுறுத்துகின்றது.

"சிறுபொருள் கைக்கொண் டோடும்
செயத்தகு தருமஞ் செய்தால்
உறுபொருள் கைக்கொண் டோர்செய்
அறத்தினும் உயர்ந்து தோன்றும்
உறுபொருள் கைக்கொண் டோரும்
உயர்வுறுந் தருமஞ் செய்யிற்
சிறுபொருள் கைக்கொண் டோர்செய்
அறத்தினும் சிறிதாத் தீரும்."

இன்சொல்லை விளைநிலமாக உவமித்து, ஈதலை வித்தாக்கி, வன்சொல்லைக் களைகளாக்கி, அவை களைந்து வாய்மையினை எருவாக்கி, அன்பை நீராக்கி, அறக்கதிர்களை விளைவித்துக் கொள்ள வேண்டும் என்று அறநெறிச் சாரம் அறிவிக்கின்றது.

"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்கு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனுமோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்."

மேலும் அறம் செய்வதில் தயக்கமோ காலம் தாழ்த்தலோ நாளைக்கு என ஒத்திவைத்தலோ இருக்கக் கூடாது. "இப்போது இளமைப் பருவந்தானே! அறத்தைப் பற்றி அணுவளவும் கவலைப்படாமல் நன்கு இளமையை ஆரத்துய்த்துவிட்டு, முதுமைக் காலத்தில் அறத்தைப் பற்றிக் கொள்ளலாம்" என்று வாளாயிருத்தல் கூடாது. இவ்வாறு உயிர்க்கு இறுதிநேரும்பொழுது அறஞ்செய்து துறக்கம் புகலாம் என நினைத்து ஏமாந்த ஒருவன் கதையைச் சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் நயம்படக் கிளத்தியுள்ளார்.

சாகுங்காலத்து அறஞ்செய்யலாமெனத் திட்டமிட்ட ஒருவன் வாழ்வில் எதிர்பாராது இறுதி வந்து விடுகிறது. பேச்சு அடைபட்டு விட்டது. உயிர் அகத்ததோ புறத்ததோ எனும் நிலை. உறவினர் அவன் படுக்கையைச் சுற்றிக் கூடிவிட்டனர். அவன் மனைவியைப் பார்த்துச் சைகையால் தான் திரட்டிய பொருளைக் கொண்டுவரச் சொன்னான். அவளோ ஒன்றுமறியாதவள்போல ''ஐயோ என் கணவர் விளாம்பழம் கேட்கின்றாரே! அதற்கு இது பருவம் இல்லையே'' என்று அழுதாளாம். அவ்வெல்லையில் அவன் உயிரும் பறந்து விட்டதாம்.

''கையாற் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே என்கின்றீர்
ஆங்கதற்குப் பருவம் அன்றுஎன்
செய்கோ எனச்சிறந்தாள் போல்சிறவாக்
கட்டுரையாற் குறித்த வெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்.''

—கேமசரியார் இலம்பகம் : 1553.

இதனையே சிலம்பில் இளங்கோவடிகளும்,

''நாளைச் செய்வம் அறமெனில் இன்றே
வேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்''

என்று குறிப்பிட்டார். எனவே அறந்தான் ஒருவர்க்கு அழிவு வருங்காலத்திலும் அழியாத் துணையாக நிற்பதாகும் என்ற கருத்தைத் திருவள்ளுவர்,

''அன்றறிவாம் என்னாது அறம் செய்க; மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை'' —திருக்குறள் : 36

என்றார்.

"இன்று கொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது பின்றையே நின்றது கூற்றம்" என்பர் பெரியோர். ஆகவே தான் இளங்கோவடிகளும்,

"இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை"

என்றார். இத்தகைய நிலையாகக் கொண்ட வாழ்க்கையில் நிலையாக நிலைத்து நிற்பது அறம் ஒன்றே யாகும். அறமே ஆண்டவனின் சட்டம் எனலாம். எனவே மக்களின் ஒழுகலாறு அறத்தின் திறத்தில் அமைந்திருக்க வேண்டும்.

ஆயினும் ஒரு கருத்து உலகில் பொதுவாய் நிலவு கின்றது. அதாவது முற்பிறவியில் அறம் செய்தவர்களே இப்பிறவியில் செல்வராயும், அறம் செய்யாதவர்களே ஏழையராகவும் உள்ளனர் என்ற கருத்தே ஆகும் அது. இக்கருத்து, திருவள்ளுவர்க்கு உடன்பாடான கருத்து அன்று. இக்கருத்து உண்மையாயின் இன்று ஆடம்பர மான காரில் செல்வோரெல்லாம் அறம் செய்தவர் களாகவும் அல்லாதோரெல்லாம் அஃது ஆற்றாத பாவி யராகவும் கொள்ளப்படுவர். உண்மை இவ்வாறு அன்று என்பதனை எடுத்துக்காட்டவே திருவள்ளுவர், பல்லக்கைச் சுமப்பவன், ஊர்பவன் இவர்களிடையே, அவன் அறம் செய்யாத காரணத்தால் சுமக்கின்றான் என்றும், அவன் அறம் செய்த காரணத்தால் ஊர்கின்றான் என்றும் அறத் தின் பயனை அளந்து கூற வேண்டா என்கின்றார்.

"அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

—திருக்குறள் : 37

"அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையாலும், நெஞ்சின் இன்ப துன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக்கூடுமே அல்லாமல், புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறிய முடியாது" என்பது ஆன்றோர் தரும் விளக்கமாகும்.

"பல்லக்கைத் தாங்கிச் செல்வோரும் மனிதரே. அதில் ஏறிச் செல்வோரும் மனிதரே. இருவரும் ஒரு வழியில் பிறந்தவரேயாவர். இருவரும் தொழின் முறையில் ஈடுபட்டவரே ஆவர். அறநெறி தொழிலிடைப் பொது வாயிலங்குவது. அறநெறி, பல்லக்கைத் தாங்கலில் சுருங்கியும், அதில் செல்கையில் பெருகியும் நிற்பதோ? இல்லை. பல்லக்கைச் சுமந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோர் ஆகலாம். பல்லக்கில் ஊர்ந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோர் ஆகலாம். அறவோராகும் வாய்ப்பு இருவர்க்கும் உண்டு, ஒருவர்க்கு மட்டும் அவ் வாய்ப்பில்லை. அறத்தாறு ஒருசாரார் பக்கம் சாயும் தன்மையுடையதன்று" என்றும் ஆசிரியர் திரு. வி. க. அவர்கள் திருக்குறள் விரிவுரையில் விளக்குதல் காண்க."

செல்வம் பெற்றோர் மட்டும் சிந்தையில் இன்பமும் அமைதியும் உற்று வாழ்வர் என்று சொல்லிவிட முடியாது. அரியணை வாழ்வில் அமைதியிழந்து அமைந்தவரும் உண்டு; அன்றாடங் காய்ச்சி எனும் அவல நிலையுள்ள வாழ்விலும் அமைதியும் மகிழ்வும் பூத்துக் குலுங்க வாழ்வோரும் உண்டு. எனவே பிறர்க்குப் பயன்படும் வாழ்க்கை வாழ்வோர்—தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெரியோர்—வறியராயினும் அவர் பிறர்க்குரியோராவர். செல்வத்தை மலையெனக் குவித்து நடுவூருள் நச்சுமரமாய் வாழும் வாழ்வினர் அச்செல்வத்தைப்

போற்றிக் காப்பதிலேயே தம் வாழ்வின் பெரும் பகுதியினை வறிதே செலவிடுவர்.

"ஈட்டலுந் துன்பம் மற்று ஈட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பம் காத்தல்
குறைபடில் துன்பம் கெடில்துன்பம் துன்புக்கு
உறைபதி மற்றைப் பொருள்"

என்று நலமுற நவிலும் நாலடியார்ப் பாட்டு.

எனவே அறத்தின்வழிச் செல்வதொன்றே மனச்சான்றை மகிழ்விக்கும் திறன் படைத்தது என்று நாம் தேர்தல் வேண்டும். மனச்சான்றைக் கொன்று ஒருவன் இன்பம் துய்த்தல் என்பது ஏலாத செயலாம். மனச்சான்றின் மகிழ்ச்சியே உண்மையான இன்பத்திற்கு உறைவிடமாகும். மனச்சான்றை மறுத்து ஒருவன் ஐம்புல இன்பங்களைத் துய்த்தல் என்பது இயலாத செயலாகும். மனச்சான்று ஒருவனைப் பார்த்துச் சுட்டால், குற்றஞ்சாட்டினால், எள்ளி நகையாடினால் எந்த இன்பமும் வாய்த்தல் அருமையாகிவிடும். எனவே, அறத்தான் வருவதே இன்பமாகும். அஃதே உண்மையான இன்பமாகும். மற்றவை யெல்லாம் மேலுக்கு இன்பமாகத் தோன்றினும் உள்ளுக்குள் ஒருவன் உள்ளத்தை அது துன்பமாக அமைந்தே தொந்தரவு செய்து கொண்டிருக்கும். அவை போலி இன்பமாகவே அமையும்; அவற்றால் எய்தக் கூடிய புகழும் இல்லை.

"அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல."

— திருக்குறள் : 39.

இதனை 'விநாயக புராண' ஆசிரியர்,

''அன்புறும் அறத்தினால் அடுக்கும் இன்பமே
இன்பெனத் தக்கதால் ஏனை இன்பெலாம்
துன்பமும் பழியையும் தோற்றும்''

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே ஒருவன் வாழ்நாளில் செய்யத்தக்கது அறமேயாகும்; ஒதுக்கத்தக்கது பழியே யாகும்.

''செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி''

—திருக்குறள் : 40.

# 6. கூற்றெதிர்க்கும் படை

## 1

''கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை —திருக்குறள் : 765

திருவள்ளுவர் ஒரு தெய்வப் புலவர். அவர் முப்பாலில் மொழிந்தன எல்லாம் தப்பாமல் இன்றும் இந்நிலையிலும் பொருந்துவனவாக விளங்குவதனைக் காணலாம். திருவள்ளுவரின் பொருட்பாலினைப் படிக்கும்போது அவர் அரசியல் ஞானியாக விளங்கும் திறத்தினைக் கண்டு தெளியலாம்.

முதற்கண், ஒரு நல்ல நாட்டினை நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகின்றார். 'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்கின்ற' நாட்டைச் சொல்லி, அந்நாட்டினைக் காக்கும் நல்லதோர் அரண் பற்றி அடுத்து மொழிந்து பொருள்செய் வகையின் நுட்பம் கூறிப் பின்னர், கண்களைக் காக்கும் இமைகள் போல் அந்நாட்டினைக் காக்கும் படையின் மாட்சியினை எடுத்து மொழிகின்றார்.

தனி மனித வாழ்வில் தனக்குத் தீங்கு செய்தாரையும் பொறுத்துப் போகவேண்டும் என்று கூறிய திருவள்ளுவர், பொதுவாழ்வினை - பொதுக்கடமையினை அரசனுக்கு வற்புறுத்தும் பொழுது, தீங்கு செய்தாரைத் தண்டிக்கும்

திறனை ஆட்சித் தலைவன் பெறவேண்டும் என்று கூறு கிறார். ஆட்சியின் அமைதிக்கு இடையூறாக, மக்கள் வாழ்வதற்கு மருட்சியூட்டுபவராகப் பகைவர் வழிவகை காண்பரேயானால், அவர்கள் குறும்பினை யடக்கி யொடுக்குதல் அரசனது படையின் பணியாகும் என்று குறிப்பிட்டு, அத்தகு ஆற்றல் சான்ற படையின் மாட்சி யினை—பெருமையினைப் 'படைமாட்சி' எனும் அதிகா ரத்தால் விளக்குகின்றார்.

படை தனக்கு அமைய வேண்டிய உறுப்புகள் எல்லாம் அமைந்து, ஏற்படும் எத்தகைய இடையூறு களுக்கும் அஞ்சாமல், எடுத்த கடமையில் என்றும் வெற்றியே பெறும் திறத்ததாக இருக்க வேண்டும். அப்படையே அரசனின் அழியாத செல்வம் என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுவிட்டுப் பின்னர் படையின் இலக்கணத்தைப் பாங்குற மொழியத் தலைப்படுகின்றார்.

நம் வாழ்நாள் மேற்சென்று, நம் வாழ்நாள் வழியினை அறுத்து நிற்கும் ஒற்றனை முன்னோர் கூற்றுவன் என்ற சொல்லால் வழங்கினர். வாழ்வினைக் கூறுபகுப்பவன், துண்டாடுபவன் என்ற பொருளில் 'கூற்றுவன்' என்ற சொல் அமைந்தது. அவ்வாறு உடற் கூட்டினின்று உயிரை ஈவு இரக்கமின்றிப் பறித்துச் செல்லும் எமனே கோபங் கொண்டு கொதித்து வந்தாலும், ஒற்றுமையாகக் கூடி, அவ் எமனுக்கு எதிரிலே அஞ்சாது நிற்பதோடு, அவ் எமனையும் புறங் கண்டு வெற்றி பெறும் ஆற்றல் அரசனது படைக்கு அமைய வேண்டும் என்று அமைவுறக் கூறுவார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் கூறும் இத்தகைய அரிய படைமாட்சி பெரிய அளவில் பண்டைத் தமிழகத்தில் நிலவியிருந்தது என்பதனை நம் தமிழ் நூல்கள் நயமுற நவிலும்.

''கூற்றம் வெகுண்டு வரினும் மாற்றும் ஆற்றலையே!''
என்று சேரர் வீரமும் ஈரமும் பேசும் பதிற்றுப்பத்தும்,

''கூற்றம் வரினும் தொலையான்
என்று 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையும்',

''கூற்றுவன் தன்னொடிவ் வுலகம் கூடிவந்து
ஏற்றன வென்னினும் வெல்ல வேற்றுள
மாற்றவன் தம்பி''

என்று கம்பராமாயணமும், எமனையும் எதிர்நின்று வெல்லும் ஆற்றலுடைய படையின் மாட்சியினைப் புகன்று நிற்கக் காணலாம்.

அரசன்மாட்டும், அதன்வழி அவன் செங்கோலோச்சித் தாம் வாழும் தாய்நாட்டின் மீதும் படைமறவர் கொண்ட அன்பின் ஆற்றலே, நெஞ்சொத்த நிலையினையும், மறஞ்சான்ற மனவலியினையும் வழங்கிற்று.

எனவே உயிர் பறிக்கும் எமனின் எண்ணத்தையும் பழுதாக்கி நிற்கும் படைத்திறம் சான்றதே மன்னனின் மாசற்ற படைமாட்சி என்று திருவள்ளுவர் தெளிவுற மொழிகின்றார்.

''கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை'' —திருக்குறள் : 765

## 2

''மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.'' —திருக்குறள் : 766

கூற்றுவனே சினந்து வந்தாலும் நெஞ்சொத்துக் கூடி ஒன்று சேர்ந்து எதிர்நின்று வெற்றி காணும் படை

மறவர்தம் பெருமையினை முன்னர்க் கண்டோம். இன்று அத்தகைய படைக்குப் பாதுகாவலாக, அரணாக அமையும் நான்கு நலமுறு பண்புகளைத் திருவள்ளுவர் கூறக் கேட்போம்.

படைமறவர்—வீரர் முதலாவது எவருக்கும் எப்போதும் எந்நிலையிலும் அஞ்சாத தறுகண்மை, வீரம் உடையவராக விளங்குதல் வேண்டும். வீரம் என்பது மருந்திற்கும் இல்லாமல் வீரர் என்ற பெயரைக் கொண்டிருத்தல் நகைப்பிற்கிடம் ஆகுமன்றோ? மேலும் வீரம் விளங்கி நின்றால்தான், தம் தாய்நாட்டு மண் கருதிவரும் மாற்றாரைப் போரில் மடிவிக்கச் செய்ய முடியும். பகைவரை வெல்லும் செயலில் விரைவும் வினையாண்மையும் காட்டல் வேண்டும்.

அடுத்து, படைவீரர் பெற்றிருக்க வேண்டிய அரும் பண்பு 'மானம்' என்னும் மாசற்ற உணர்ச்சியாகும். ''எப்படியாவது வாழலாம்'' என்று வாழும் வாழ்க்கை மானவுணர்ச்சிக்கு மாறானது; அம் மானவுணர்ச்சியினை மிதித்து மாய்த்து ஒழிப்பது. ''இப்படித்தான் வாழ வேண்டும்'' என்று வாழும் வாழ்க்கை மானவுணர்ச்சிக்கு நிலைக்களமாவது; அம் மானவுணர்ச்சியினை மதித்துப் போற்றுவது. எனவே மானவுணர்ச்சியினை மதித்து ஒழிப்பதும், மதித்துப் போற்றுவதும் அவரவர் வாழும் நெறியால் துலக்கமுறுவன எனலாம். இம் மானவுணர்வு படைவீரர்பால் பாங்குற அமைந்து விட்டால் அரசனுக்கு ஒரு தாழ்வும் வாராமற் காத்தலும், தங்கள் பெயரினையும் பெருமையினையும் நிலைபெற நிறுத்தலும் தாமே அமையும்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை மானவுணர்ச்சி மானப் பெற்றிருந்த காரணத்தால்தான், தான் அடைபட்டிருந்த சோழ மன்னன் சிறைக்கோட்டக் காவலர்கள்

நீர் வேட்கை நீங்கத் தனக்குத் தண்ணீர் தராத நிலையில் உடனே உயிர் துறக்க ஒருப்பட்டு அவ்வாறே உயிரும் துறந்து நின்று, தான் இயற்றிய புறநானூற்றுப் பாடலால் இன்றும் வாழ்கின்றான். அவன் மானவுணர்ச்சியும் பாராட்டப்படும் தகுதியுடையதாயிற்று!

'மாண்டவழிச் செலவு' என்பது தனக்கு முன் வாழ்ந்த வீரர்கள் சென்ற நன்னெறியில் நடப்பதாகும். முன்னோர் சொன்ன—சென்ற நெறியினை 'மரபு' என்று போற்றுதல் தமிழ் வழக்காகும்.

'தேய்ந்த பாதையிற் செல்,'

'முன்னோர் சென்ற வழியிற் பின்னோர் செல்லட்டும்'

'வழியே ஏகுக; வழியே மீளுக'

என்றும், இன்றும் நாட்டுப்புறங்களில் வழங்கும் மொழிகள் முன்சென்ற வழியின் சிறப்பினை முறையுற மொழியும்.

சில மரபுகளை அந்நாளைய வீரர் வழிவழி ஓம்பி வந்தனர். போர்க்களத்தே தோற்றோடிப்போகும் பகைவர்தம் புதுகின் மீது வாளோ, வேலோ பிற படைக் கருவிகளோ ஒச்சாது நிற்கும் செயல் அறமெனப் போற்றப்பட்டது. எந்நிலையினும் தாம் பணியாற்றப் புகுந்த அரசனைக் காட்டிக் கொடுத்து அறைபோகும் தன்மையினை வீரர் ஒரு நாளும் கொள்ளார் என்பதும் வீரர் மேற்கொண்ட 'வழிச்செலவு'களாகும்.

அடுத்து, அரசனுடைய பெரு நம்பிக்கைக்கு உரியவர்களாக வீரர் செயல் அமையவேண்டும். வீரர் நடவடிக்கைகள் ஒருபோதும் யாராலும் ஐயப்பாட்டிற்குரியனவாக அமைதல் என்பது அறவே கூடாது.

வீரம், மானம், மரபு, மன்னன் நம்பிக்கை ஆகிய இந்நான்கு பண்புகளே ஒரு படைக்குப் பாதுகாப்பாக அமையும் அரண்கள் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

''மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு'' —திருக்குறள் : 766

## 3

'தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.' —திருக்குறள் : 767

எண்ணற்ற மக்களின் உயிரை நொடிப்பொழுதில் இருந்த இடத்திலிருந்தே கொன்று குவிக்கும் கொடிய கொலைக் கருவிகள், படைக்கருவிகள் என்ற பெயரில் கணக்கின்றிப் பெருகிவிட்ட—இரக்கவுணர்வுக்கு இடமில்லாமற் போய்விட்ட கொடுங்காலம் இக்காலம். அந்நாளிலும் பகை இருந்தது; அரசர் ஒருவரோடொருவர் மாறுபட்டனர்; போர்க்களத்தில் அணிவகுத்து நின்றனர்; தத்தம் வீரம் காட்டி வெம்போர் விளைவித்தனர். வெற்றி பெற்றவர் வாகை சூட, தோல்வியுற்றவர் துன்பங்களை ஏற்றனர்.

ஆனால் அந்நாளில் போர் முறைகளில் அறநெறிகள் போற்றப்பட்டன.

பசுக்களும், அறம் வளர்க்கும் அந்தணர்களும், மகளிரும், நோயாளிகளும் பிள்ளைபெறாத மணமக்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுங்கள் என்று பறையறைவித்த பின்னரே பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றனர் படை மறவர்கள் என்பது புறநானூறு கூறும் செய்தி. போர்க்களத்தே படைக்கலன்

இழந்து நிற்போரைத் தாக்கி நில்லாமையும், போர்க் களத்தே தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடுபவர் மீது வாள் முதலியன ஓச்சிக் கொல்லாமையும் போர் நெறிகளாகக் கொள்ளப்பட்டன. போர் நடைபெறப் பாழிடங்களே தேர்ந்தெடுக்கப்பட்டன.

இவ்வாறான செயல்கள் மறப்போரிலும் அறநெறிகள் போற்றப்பட்ட நிலையினைத் தெளிவுறுத்தும். மேலும் போர்வீரர்க்கு முடிவு—இலட்சியம்—எப்படியாயினும் வெற்றி என்பதன்று. வெற்றியே வேண்டும், ஆயினும் வெற்றி நேரிய வழியில் வரவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

முடிவு மட்டும் மாசற்றதாக இருந்தால் போதாது, முடிவை அடைய நாம் மேற்கொள்ளும் வழி முறைகளும் இந்தப் பாடலில் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

போர்க்களத்தில் முன்னால் நிற்கும் படையினைத் 'தூசி'ப்படை என வழங்குவர். மண்ணின் மேற்பரப்பில் தூசி விளங்குவது போல, படையின் முதலணி 'தூசிப் படை'யாகும். இன்றும் செய்யாறு எனும் ஊருக்குச் செல்லும் வழியில் காஞ்சிபுரத்தினையடுத்துத் 'தூசி' எனும் ஊரினைக் காணலாம். இவ்வூர் தமிழர் வீர வாழ்விற்குச் சான்றாக நிற்கின்றது.

அரசர் வியூகம் வகுத்து—அதாவது படை வீரர் களைப் பலப் பல அணிகளாக வகுத்துப் பகைவர் மேற் செலுத்துவர். இத்தகைய படைவகுப்பு பல வகைப் படும். மாற்றாரால் இவ்வாறு அணிவகுக்கப்பெற்றுத் தன்மேல் போரிட வந்த படையின் போரை விலக்கும் தன்மை/உபாயம்/வழிவகை அறிந்து தன் படை வகுப்பினை வகுத்து, அவர் பக்கத்திலிருந்து முதலா

வதாக எதிர்ப்படும் 'தூசி'ப் படையினைத் தன் மீது வாராமல் முதலாவது காத்துக் கொள்ளுதல் வேண்டும். அதனோடு மட்டும் அமையாது, அத் 'தூசி'ப் படையைத் துளைத்து உட்சென்று, அவர்கள் படை வகுப்பைச் சின்னாபின்னமாக்கி, சிதறச் செய்து வெற்றிக்கு வித்திடுவதே படைமாட்சியாகும் என்கிறார் திருவள்ளுவர்.

இதனால் படைவகுப்பின் தன்மையறிந்து தாக்கி வெற்றிபெறும் தகவும், தூசிப் படையைத் துளைத்துச் சென்று வெற்றியை விருந்தாக்கிக் கொள்ளும் படை மறவர் பாங்கும் பெறப்பட்டன. இத்தகு படைகளே மாட்சிக்குரிய மாசற்றவைகள் என்கிறார் திருவள்ளுவர்.

> ''தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
> போர்தாங்கும் தன்மை அறிந்து.'' —திருக்குறள் : 767

# 7. வந்தது வந்தது கூற்று!

## 1

"நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்ல செயின் செய்க
சென்றன சென்றன வாழ்நாள் சென்றுத்துடன்
வந்தது வந்தது கூற்று."

—நாலடியார் : 4

எண்ணற்ற உயிர்கள் இவ்வுலகில் பிறக்கின்றன; வளர்கின்றன; வாழ்கின்றன; முதுமையுறுகின்றன; முடிவில் முடிகின்றன. உயிர் உடம்போடு கூடி வாழும் நிலையினை 'உயிர்ப்பு' என்கிறோம். உடம்பை விட்டு உயிர் நீங்கினால் அந்நிலையினை 'இறப்பு' என்கிறோம். இன்ன உயிர் இத்தனை நாள்கள் உயிர்க்கும், இன்ன உயிர் இன்ன நாளில் இறக்கும் என்று எவராலே கூற முடியும்? எவராலுங் கூறமுடியாது அன்றோ. இதைத் தான் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள்,

"இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தோர்
முழுநீர் உலகின் முழுவதும் இல்லை"

—சிலம்பு; நடுகற்காதை : 181—182.

என்றார். நாள்தோறும் கீழ்த்திசையில் கதிரவன் உதிக்கக் காண்கிறோம். தங்கம் உருக்கி வார்த்தாற்போன்று ஒளி பரப்பி உலகின் இருளை ஓட்டி ஒளியை ஊட்டிய கதிரவன், மாலையில் மேற்றிசையில் மாணிக்கச் சுடராய்

ஒளிர்ந்து மறைகிறான். ஒவ்வொரு நாள் கழியும்போதும், நமக்கு என வரையறுக்கப்பட்ட வாழ்நாளில் - வாழும் நாளில் - ஆயுளில் - ஒருநாள் போய்விட்டது என்பதனை உணர்த்தல் வேண்டும். இவ்வுலகில் திரும்பப்பெற முடியாத அரியனவற்றுள் ஒன்று கழிந்துபோன நேர மாகும். எனவே இவ்வுலகிற் பிறந்த ஒவ்வோர் உயிரும் வாழ்நாள் சென்றன சென்றன என்று அறிதல் வேண்டும். உயிர்க்கு வரையறுக்கப்பட்ட வாழ்நாள் முடிவுற்றதும் அவ்வுயிரை இவ்வுலகத்திலிருந்துகொண்டு செல்ல இயமன் அடங்காச் சினங்கொண்டு ஆற்றலுடன் விரைந்து வருகின்றான். அவனோ கூற்றுவன். ஓர் உயிரை அதன் உடம்பினின்றும் கூறுபகுப்பவன், பிரிப்பவன், அச் செயலை நடுவுநிலைமையோடு எந்நாளும் செய்து வருபவன். அவனுக்கு இன்னார் வேண்டியவர், இன்னார் வேண்டாதவர் என்ற பாகுபாடு, விருப்பு வெறுப்பு சற்றும் கிடையாது. யார்மாட்டுங் கண்ணோடாது உயிர் வௌவுதல் அவன் தொழில். இந்தத் தொழிலை அவன் உலகில் உயிர்கள் தோன்றிய நாள் தொடங்கியே முறையாகச் செய்துகொண்டு வருகின்றான்.

இந்த நேரத்தில் சில உயிர்கள் சில பொருள்களை இல்வுலகில் விடாது பற்றி நிற்கின்றன. அதிலும் குறிப் பாகச் செல்வத்தை, நிலையுடையது—நிலைத்த வாழ் வுடையது என்று விடாது பற்றி நிற்கின்றன. செல்வம்—பொருள்—பணம் மனித வாழ்விற்கு—அதன் இயக்கத் திற்கு—வளர்ச்சிக்குக் கட்டாயம் தேவை. 'பொருளி லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார் திருவள்ளுவர். 'செய்க பொருளை' என்றும் கட்டளையிடுகின்றார். 'எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும் ஒளி விளக்காக'ச் செல்வத்தைக் காண்கின்றார் செந்நாப் போதார்.

ஆனால் அந்தச் செல்வம்—வளமான வாழ்விற்கு வழி கோலும் வகை படைத்த செல்வம் நிலையுடையதா? என்றென்றும் ஒருவன் கையில் உருப்படியாகத் தங்கக் கூடியதா? என்று பார்த்தால் எங்கும் என்றும் அவ்வாறு நிலைத்திருப்பதாகத் தெரியவில்லை. 'குன்றத்தனை யிருநிதியைப் படைத்தோரும் அன்றைப் பகலே அழி யினும் அழிவர்' என்று அதிவீரராமபாண்டியர், 'நறுந் தொகை'யில் நறுக்குத் தெறித்தாற்போல் நவின் றுள்ளார். நாலடியாரே பிறிதோரிடத்தில் 'செல்வம் சகடக்கால் போல வரும்' என்று குறிப்பிடுகின்றது.

எனவே, செல்வம் வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைதான். கட்டாயம் எப்பாடு பட்டேனும் நேரிய வழியில் அதனை ஈட்டவேண்டுந்தான். ஆனால் அச் செல்வம் என்றும் நம்மிடமே நிலைத்து நிற்கும் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. எனவே செல்வப் பொருள் கள் அனைத்தும் எல்லாமாய் எங்குமாய்ப் பரந்திருக் கின்ற பரம்பொருள் போல் நிலைத்த வாழ்வுடையன என்று மட்டும் கருதிவிடக் கூடாது. அவ்வாறு கருதாமல், இந்தச் செல்வம் நம்மைவிட்டு நாளையேகூடச் 'செல்வோம்' என்று சொல்லிவிட்டோ, சொல்லிவிடா மலேயுங் கூடச் சென்று விடலாம் என்பதை உறுதியாக உணரவேண்டும். அவ்வாறு உணர்ந்தவுடன் இவ்வுலகில் என்றும், நாம் அழிந்தாலும் அழியாத பொருள், காலத் தால் அழிக்க முடியாத பொருள் என்ன என்பதனை அறிந்து காணவேண்டும்.

அவ்வாறு நோக்கும்போது அறச்செயல்களே அவனி உள்ளளவும் நிலைத்து நிற்கும் நீர்மையன என்ற முடிவு தோன்றும். ஒருவன் மாய்ந்தாலும், அவன் இயற்றிய அறம் ஒரு நாளும் மாயாமல் அவனுக்குப் பெயரும் புகழும் தந்து கொண்டிருப்பதனைக் காணலாம். ஆகவே

ஒன்றியனவாக—பொருந்தியனவாக இவ்வுலகில் நிலைத்து நிற்பது அறத்திருப்பணிகளே என்று உணர்ந்து, அவ் அறச் செயல்களை யெல்லாம், 'நில்லாத செல்வம்' நம்மிடத்தில் நிலைத்து நின்று கொண்டிருக்கும் கால எல்லையிலேயே கணக்காகச் செய்து முடித்து விட வேண்டும் என்று நயமுடன் நவில்கிறது நாலடியார்ப் பாட்டு. பாட்டிலே 'நின்றன 'நின்றன,' 'ஒன்றின ஒன்றின', 'சென்றன சென்றன,' 'வந்தது வந்தது' என்று நான்கு அடுக்குச் சொற்கள் வந்துள்ளன. ஒவ்வோரடியிலும் ஒவ் வோர் அடுக்குச் சொற்கள் அமைந்து விரைவைப் புலப் படுத்துகின்றன. இடையில் 'வல்லே செயின் செய்க' என்ற கட்டளையும் பிறப்பிக்கப்படுகிறது. இனிப் பாடலைப் பார்ப்போம்.

''நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று'' —நாலடியார் : 4

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' போல் 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' அன்றோ?

## 2

''என்னாலும் ஒன்றுதம் கையுறப் பெருக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லும் சுரம்'' —நாலடியார் : 5

'செல்வம்' எனப்படுவது யாது? இக்கேள்வி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் சங்கத் தமிழ்ப் புலவர் ஒருவர் மனத்தில் எழுந்தது. நல்ல அறிவு சான்ற மனம் அவருடையது. இக்கேள்வி குறித்து விடாது

சிந்தித்தார். வாழ்க்கையில் சிலர் தாங்கள் இட்டது கட்டளையாக வேண்டும் என்று முனைப்புடன் நினைக்கிறார்கள். இன்ன செயலை இன்ன நேரத்தில், இடையூறு என்ன எதிர்வந்தாலும் முடித்தே தீருவேன் என்று மொழிகின்றார்கள். இவ்வாறு 'நெடிய மொழிதல்' செல்வமாமோ? என்று எண்ணிப் பார்த்தார்.

மணிக்கு நூறு கிலோ மீட்டர் தூரம் என்று பறந்தாலும் அவ்வூர்தியில் பயணம் செய்பவர்களுக்கு ஓர் அலுப்பும் இல்லை; அவ்வளவு ஆடம்பரமான, சொகுசான, வசதிகள் அனைத்தும் நிறைந்து வேகமாகச் செல்லும் புதியதோர் ஊர்தி; அத்தகைய ஊர்தியிலே பறந்து செல்வது 'கடிய ஊர்தல்' செல்வமாகுமா? எண்ணிப் பார்த்தார். அவர் சிந்தனையில் அவை செல்வங்கள் ஆகா என்ற விடை பிறந்தது. இவ்வாறு 'நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே' என்று கண்டார் அறிவிற் சிறந்த சான்றோர் பெருமக்கள் செல்வமாகக் கருதுவது யாது? என்று அடுத்து எண்ணிப் பார்த்தார். தம்மைச் சேர்ந்தவர்களுடையவும் சார்ந்தவர்களுடையவும் துன்பங்களுக்கு இரங்கி, அவர்களின் துன்பத்தைத் துடைப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியே—செய்யும் உதவித் திருப்பணியே—செல்வம் என்று கருதப்படும் என்று கண்டார்.

''சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே.''

—நற்றிணை : 210

எனவே செல்வம், செல்வம் என்று மதிக்கப்படுவது, அச் செல்வம் அருள் மனத்தோடு பிறர்க்கும் பயன்படும் தன்மையைப் பெறும் பொழுதேயாகும் என்பது தெளிவாகின்றது. 'வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான்

பெற்ற முழங்கு முரசுடைச், செல்வம்' 'நாய்பெற்ற தெங்கம் பழம்' என்கிறது பழமொழி நானூறு. எனவே, வழங்கலும் துய்த்தலும் செல்வத்தின் செயற்பாடுகளாக அமைய வேண்டும் என்பது பெறப்படுகிறது. துய்த்தலி னும் வழங்கல் முற்கூறப்பட்டிருப்பது, தனக்குச் செல்வம் பயன் படுவதனைக் காட்டிலும் பிறர்க்கே செல்வம் பெரி தும் பயன்பட வேண்டும் என்பதனைப் பெரிதுறக் காட்டும்.

ஒருவர் பாடுபட்டுப் பாடுபட்டுப் பணத்தைத் தேடு கிறான், அரிய முயற்சியிற் பெரியதாகக் கிடைத்ததே இச் செல்வம் என்று கருதி, அச்செல்வத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிறான். இன்றைக்கு என வாழும் சிந் தனையில்லாமல், நாளைக்கு என—அதிலும் உடலையும் உள்ளத்தையும் ஒய்வுறச் செய்யும் முதுமைக் காலத்திற் பயன்பட வேண்டும் என்று கருதிச் சேமித்து வைக்கிறான். ஆனால் முதுமைக்காலம் வருமுன்னர் அவன் ஈட்டிய செல்வம் போய்விடலாம்; அன்றி அவன் ஈட்டிய செல்வம் இருக்க, அவன் முதுமை அடையாமல் இளமையிலேயே இறந்தும் போகலாம். இதனைப் பழைய உரையாசிரியர் பதுமனார், 'நிலையாமை யெனவே அமையுமாயின், யாக்கை மேல் வையாது செல்வத்தின் மேல் வைத்து நிலையாமை சொல்லிய தென்னையெனின், யாக்கை நிற்க செல்வமிழத்திலும், செல்வம் கிடக்க யாக்கை யிழத்தலும் வருதலால், செல்வங் கொண்டறஞ் செய்ய வேண்டுதலின் எல்லாரிடத்துமுளதாகிய செல்வங்கள் எல்லாவற்றானும் நில்லாமை காட்டி யறஞ்செய்வித்தல் கருத்தாகலின் என்றவாறு' என்கிறார்.

எனவே செல்வ நிலையாமை என்று சொன்னால் அதனை ஓர் இழிவாக் கருதாமல், உலகஇயல்பாகக் கருதி,

நில்லாத செல்வம் நிலைத்திருப்பது ஒரு நிமிடமே யாயினும் அந்த நிமிட எல்லைக்குள் ஆற்றி முடித்து விடக்கூடிய அறங்களைத் தப்பாமற் செய்துவிட வேண்டும் என்பதே ஆன்றோர் அறிவினில் தெளிந்த அரும்பெரும் உண்மையாகும்.

ஏனெனில், இளமைக் காலத்திலேயே—தாம் பொருள் வசதியோடு பொலிந்த காலத்திலேயே, ஒன்று 'இல்லை' என்று இரந்து வந்தவர்க்கு, 'இல்லை' யென்று சொல்லி விடாமல் இந்தாருங்கள், இதனை எடுத்துச் செல்லுங்கள்' என்று ஈகையுள்ளத்தோடு, இரக்க சிந்தையோடு கேட்டோர்க்குக் கொடுத்தவர்கள், நடுவுநிலைமைப் பண்பினின்றும் நழுவாத, ஆனால் அதே நேரத்தில் யார்க்கும் எவருக்கும் எந்தக் காலத்திலும் இரக்கங் காட்டித் தன் நீதி—நியதி வழுவாத நெஞ்சத்தை நெகிழ்வித்துக் கொள்ளாத யமன், தம்மைப் பாசத்தால் கட்டிக்கொண்டு போகின்ற பாலைநிலத்திலிருந்து தப்பிச் செல்பவராம். அதாவது அவர்கள் இம்மையில் வீட்டுப்பேறும் பெறுவர் என்பதாம்.

எனவே செல்வம் குட்டை நீராகத் தேங்கி விடாமல், ஆற்று நீராக ஓடி ஏழைமை என்னும் வயல்களுக்குப் பாய்ந்து வாழ்வையும் வளத்தையும் தருதல் வேண்டும் என்பது பெறப்படும். எனவே ஒரு பொருளே கிடைத்தாலும், நாளைக்கென்று விடாது பற்றி நிற்காமல் இரந்தவர்க்கு ஈந்தால் இயமனும் இரங்குவான் என்ற கருத்தமைந்த நாலடியார்ப் பாடல் வருமாறு:

''என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக்கூற்றம்
தொடுத்தாறு செல்லும் சுரம்'' —நாலடியார்: 5

"இழைத்தநாள் எல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை—ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின் நாளைத்
தழீஇம்தழீஇம் தண்ணம் படும்" —*நாலடியார் : 6.*

கோள்களும் நாள்களும் ஒரு கணக்கில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. வானவீதியில்தான் எத்தனை கோள்கள்? அவை ஒரு சிறிது கணக்குத் தவறி இயங்கினாலும், உலகம் என்னாகும்? இதனைப் பாரதியார்,

"கைப்பிடிகொண்டு சுழற்றுவேன்—தன்
கணக்கிற் சுழன்றிடுஞ் சக்கரம்

என்றும், பாரதிதாசன்,

"அங்குத் தங்கும்வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா"

என்றும் கூறினர். எனவே இங்கு, இவ்வுலகில் எல்லாம் ஒரு நியதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, இவர் இவர்க்கு என்று வாழ்நாள்கள் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த வாழ்நாளினைக் கடந்து ஒரு விநாடியும் ஒருவரும் வாழமுடியாது. எனவே, எடுத்த உடலோடு கூடி, உயிர் வாழும் நாள் இவ்வளவு என்று ஏற்கெனவே படைத்தவனால் வகுக்கப்பட்டு விட்டது. ஆனால் யாருக்கும் தமக்குரிய வாழ்நாள்கள் இத்தனை என்று ஒரு சிறிதும் அறியமுடியாது. இதனையே அறநெறிச்சாரம்,

"கோட்டுநா ளிட்டுக் குறையுணர வாராதால்
மீட்டொருநாள் இடையும் தாராதால்"

என்று, ஒரு நாளை மேற்கொண்டு பெறவோ, ஒரு நாளைக் குறுக்கிக் கொள்ளவோ இயலாது என்று பேசுகின்றது. இதே அறநெறிச்சாரம் பிறிதோரிடத்தில்

இன்னும் அழகாக, ஏன்? ஒப்பற்ற உணர்வு நிலையிலே ஒப்பற்ற கருத்து ஒன்றனையும் குறிப்பிட்டுள்ளது. நம்முடைய வாழ்நாளில் இதுவரை எத்தனை நாள்கள் கழிந்து சென்றிருக்கின்றன என்று சிறுவிரலை விட்டுக் கூட நெடுக எண்ணி விடலாம். ஆனால் இனி எத்தனை நாள் வாழப் போகிறோம் என்பதனை எவராலும் எக்காலத்தும் எளிதில் அன்றி அரிதாகவும் சொல்ல இயலாது.

''சென்றநாள் எல்லாஞ் சிறுவிரல்வைத்து எண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரிது.'' —அறநெறி : 69

எனவே இனி வாழும் நாள்கள் இத்தனை என்று எண்ணக்கூடா நிலையில் எமனிடத்திலிருந்து தப்பிப் பிழைக்க யாரால் முடியும்? எனவே கூற்றம் குதித்தால், அக் கூற்றத்தின் தாக்குதலிலிருந்து, ஆளுகையிலிருந்து, பிடியிலிருந்து, தப்பிப் பிழைக்கும் ஆற்றலை உடையவர் இவ் அவனியில் ஒருவரேனும் உண்டா? இதுவரை உலக வரலாறு அத்தகையோர் ஒருவரையேனும் கண்ட துண்டா?

எனவே இந்த அரிய, என்றும் நிலைத்திருக்கக் கூடிய அடிப்படை உண்மையினைக் காணாதவர்கள் எண்ணிய செயல்களை முடிக்காமலே இந்த உலகத்தி லிருந்து திடீரென்று விடைபெற்றுச் சென்றுவிடுகிறார்கள்.

ஓர் ஊரில் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் பலவகை யிலும் பெருக்கியவன் ஒருவன் இருந்தான். சேர்த்த பெரும்பொருளைத் தானும் துய்க்காமல், பிறருக்கும் வழங்காமல், அனைத்துப் பொருளையும் தங்கக் கட்டி யாக்கிச் சேமித்து வைத்தான். நாளைக்கென நமக்கு வேண்டும் என்ற சிந்தனையே அவனை இவ்வாறு செய்ய வைத்தது. முதுமையில் பிறருக்கு வழங்கி, போகும் வழிக்குப் புண்ணியத்தைத் தேடிக்கொள்ளலாம்

கொண்டிருந்தான். ஆனால் இயமன் அவனைக் கேட்டுக் கொண்டா அவன் உயிரைக் கவர வருகிறான்? இல்லையே! திடீரென்று கூற்றுவன்—இயமன் அவனை நெருங்கினான். அறஞ்சாராது மூப்படைந்த அவன் நாக்கு அடைத்துக் கொண்டது; கண்கள் செருகத் தொடங்கின. உறவினர் அவனைச் சுற்றிக் கூடிவிட்டனர். அந்நிலையில் அப்பொழு தாவது அறம் செய்து முடித்துவிட வேண்டும் என்று எண்ணினான். தன் மனைவியை அழைத்துக் கையால் சாடை காட்டி அப்பொன் கட்டியை எடுத்து வருமாறு பணித்தான். அவன் மனைவியோ உலகியல் அறிந்தவள்; தேர்ந்தவள். எனவே அவளை வாழவைக்கும் தங்கக் கட்டியைக் கொண்டு வராமல், ஆனால் அதே நேரத்தில் நிலைமையைத் திசை திருப்ப முனைந்தாள். "ஐயோ! என் வீட்டுக்காரர் இறக்குந் தறுவாயில் விளாம் பழத்தின் மீது ஆசைப்பட்டாரே, விளாம்பழம் கிடைக்கும் காலம் (Season) இஃது இல்லையே! ஐயோ! என் அருமைக் கணவரின் இறுதிக் காலத்து ஆசையை எவ்வாறு நிறை வேற்றுவேன்?" என்று அவன்மாட்டுப் பேரன்பு கொண் டவள் போல நடித்து அழுதாள். இக்காட்சியினைத் திருத் தக்கதேவர்,

"கையால் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்
ஐயா விளாம்பழமே என்கின்றீர்
ஆங்கதற்குப் பருவம் அன்றுஎன்
செய்கோ வெனச்சிறந்தாள் போற்சிறவாக்
கட்டுரையாற் குறித்த வெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்"

—சீவகசிந்தாமணி; கேசமரியாரிலம்பகம்: 142

என்று அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இதனால் பெரும்பொருளைச் சேமித்து வைத்து நாளைக்கு என்ற எண்ணத்தில் வாழ வேண்டா.

"Tomorrow is too late; live today" என்பர். இளங்கோவடிகள்,

" நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும் "

—சிலம்பு: நடுகற்காதை: 179-180.

என்பர்.

'உறங்குவது போலும் சாக்காடு' என்றார் திருவள்ளுவர். சாவு வரும் நாளினை, நேரத்தை அளந்து சொல்ல முடியாது. சாப்பறை திடீரென்று "தழீஇம் தழீஇம்' என்று ஒலிக்கத் தொடங்கிவிடும். 'நெருநல் உளன ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்தான் இவ்வுலகில், "ஒன்றே செய்க, ஒன்றும் நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க, இன்றும் இன்னே செய்க' என்ற ஆன்றோர் அருள்மொழிப்படி நல்ல செயல்களை நாளும் நாடிச் செய்ய வேண்டும் என்கிறது நாலடியார்.

" இழைத்தநாள் எல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை—ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின் நாளைத்
தழீஇம் தழீஇம் தண்ணம் படும்"

—நாலடியார்: 6

## 8. மாண்புறு கவசம்

### 1

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்பர். இப்படித்தான் வாழ வேண்டும் என்று எண்ணி அதற்கேற்ப ஓர் எல்லைக்குள் தன் வாழ்க்கையை வகுத்துக்கொண்டு வாழ்பவன் வாழ்க்கை ஒரு நாளும் வீழ்தல் இல்லை; ஆனால் எப்படியாவது வாழலாம் என்று வாழ்பவன் வாழ்க்கையில் அல்லலும் அகப் போராட்டங்களும் மிகுதல் உறுதி. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உறுதிக்கு நாலடியார், திருக்குறள் போன்ற நூல்கள் ஆக்கஞ் சேர்க்கின்றன. எனவே தான் 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்று நம் முன்னோர் வழங்கினர்.

இறைவன் படைப்பில் பல விந்தைகளும் மாறுபாடுகளும் இருப்பதனைப் பார்க்கிறோம். ஒரு கையில் அமைந்துள்ள ஐந்து விரல்களைக் காட்டி அவற்றின் வேறுபாடுகளைச் சுட்டி, ஆயினும் அதே நேரத்தில் அவ்வைந்து விரல்களும் ஒன்றாய் இணைந்து செயலாற்றுவதனைக் குறிப்பிடுவர். பல்வேறு சுவைகளைப் படைத்தது இறைவனின் தனிப்பேரருளினைக் காட்டும். எதிரிடையான சுவைகளும் வாழ்க்கைக்கு உறுதி பயக்கக் காணலாம். இன்பதுன்பம், ஒளி இருள், பகல் இரவு முதலானவற்றினைக் காண்க.

வேம்பு கசக்கும் பண்புடையது; அதன் இலையும், பூவும், காயும், பழமும் கசக்கும் இயல்பு கொண்டவை. தமிழ் நாட்டுத் தலையாய முக்கனிகளில் ஒன்றாகப் பேசப் படும் வாழை இனிமை சான்றது; தோலையுரித்துவிட்டுத் தின்றால் தெவிட்டாத தெள்ளமுதனைய சுவைதரக் கூடியது. அத்தகைய வாழைப்பழம், கசக்கும் இயல்புடைய வேப்பிலைக்குள்ளேயிருந்து பழுத்தாலும், வாழைப்பழம்' தனக்கேயுரிய இனிய சுவையினின்றும் சிறிதும் மாறுபடுவ தில்லை. இதனை இன்றும் நடைமுறை வாழ்வில் சோதனை செய்தும் காணலாம். அதுபோலவே, நற் குணமுடையோர் இனமாக, நட்பாக, தொடர்பாகச் சேர்ந்திருக்கும் கூட்டம் தீயதாக இருந்தாலும், அதனால் ஒரு நாளும் அவர்கள் மனம் திரிந்து மாறுவது இல்லை.

இனிய வாழைப்பழத்தைச் சுற்றி இன்னாத — கைப்புச் சுவை பொருந்திய வேப்பிலை யிருந்தாலும், அது எவ்வாறு தன்கசப்புச் சுவையினை வாழைப்பழத்தில் ஏற்ற இயலாமற் போகின்றதோ, அதுபோலவே நற்குண முடையார் சிற்றினத்தாரோடு சேர்ந்திருந்தாலும் சிற்றினத்தார் அவர்களைத் தம்பால் இழுத்து அவர்கள் குணத்தை மாற்றும் இயல்பு அற்றவராவர். ஏனெனில் எவ்வளவுதான் நற்குணமுடையோர் புறத் தோற்றத்திற் காணும்போது சிற்றினத்தாரோடு நெருங்கிச் சேர்ந்திருப் பவராகத் தோன்றினாலும் அதனால் அவர்களுக்கென்று இருக்கும் நற்குண நல்லியல்புகளைத் துறக்கமாட்டார்கள். இஃது உறுதி.

உவமைகள் பாடலின் உட்பொருளை, கருக்கருத்தை விளக்கப் பிறந்தனவாகும். உவமையின் ஒளிக்கதிர்கள் புலனாக்கும் உண்மைகள் பல. அறிவுக் கண்களின் ஒளிப் பாய்ச்சல் எந்த அளவிற்குச் சிறந்திருக்கின்றதோ அந்த அளவிற்கு உவமைகளின் ஒளிக்கதிர்களும் உண்மைகளை ஊடுருவி விளக்கக் காணலாம்.

'வேம்பின் இலையுட் பொதிந்த வாழைப்பழம் கசப்பில்லை; அது போன்று தீய இனத்தோடு சார்ந்திருப்பினும் இயற்கை யறிவுடையார் மனம் தீதாவதில்லை' என்ற பொருள் கிடைக்கும். உவமையைக் கூர்ந்து நோக்கினால் மேலும் சில உண்மைகள் புலனாகும். வேம்பின் இலையும் வாழையும் சேர்ந்திருப்பினும் இடையில் ஒரு தடை உண்டு. ஆம் வாழையைச் சுற்றிப் படைப்பிலேயே அமைந்திருக்கும் இயல்பான தோல்தான் அது. வேம்பின் கசப்பு வாழையைச் சாராமல் வாழையின் தோல் காக்கின்றது. காத்தல் மட்டும் தோலின் தொழில் அன்று. வாழையைக் கனிய வைப்பதும் அதன் தொழிலாகின்றது. வேம்பின் கதகதப்பைத் தான் வாங்கிக் கனியவைத்து வாழைக்கு இனிமை சேர்க்கின்றது தோல். ஆம் 'திதொரீஇ நன்றின் பால்' உய்க்கும் அறிவு போலத் தோல் செயலாற்றுகின்றது. தோலின் இவ்விரு தொழிலும் அறிவால் அமைகின்றன. இப்போது நமக்குப் புதியதோர் விளக்கம் கிடைக்கக் காணலாம். வேம்பு தீய இனத்திற்கு உவமை; வாழை நற்பண்புடையாருக்கு உவமை. தோல் அறிவென்னும் அங்குசத்திற்கு உவமை, மனத்தைக் கொண்டு நெறிப்படுத்தும் திறம் வாய்ந்தது அறிவு. தக்கது இது தகாதது இஃது என்று தடுத்தாட்கொள்வது அறிவு. மனத்தைக் காக்கும் மாண்புறு கவசமாய் அறிவு செயல்படுகின்றது. எனவே தீயோரைச் சேர்ந்த நல்லோரும் தம் மனத் திண்மையால் தீயதன்பால் திரியாமல் நல்லதன்பால் நிலைத்து நற்பயன்களையே சமுதாயத்திற்கு ஈவர். இவ்வாறு நற்குண முடையோர் தீயோரைச் சேர்ந்திருந்தாலும் அவர்கள் பண்பு கெடாமற் காப்பது அறிவுடைமையே என்கிறது நாலடியார். பாடலைக் காண்போம்;

"வேம்பின் இலையுள் கவியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்:—ஆங்கே
இனத்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனத்தீதாம் பக்கம் அரிது." —நாலடியார் : 244

## 2

அறத்திற்கும் மறத்திற்கும் போராட்டம் உண்டு. அறிவுக்கும் உணர்ச்சிக்கும் போராட்டம் உண்டு. அறிவிற்கும் புலன்களுக்கும் போராட்டம் உண்டு. அறிவு வழிச் செல்பவனுக்கு, வாழ்க்கை இன்ப நாடகமாகவும், உணர்ச்சிவழிச் செல்பவனுக்குச் சோக நாடகமாகவும் அமைதல் இயல்பு. புலன்களின் இன்பச்சுவை கட்டுப் படுத்த இயலாதது. ஐம்பொறிகளை அறிவு இயக்காமல் ஐம்பொறிகளும் நம்மை இயக்கத் தொடங்கிவிட்டால் உறுவது அல்லல் அன்றி வேறில்லை, எனவேதான் முன்னோர் 'ஐம்புல வேட்டுவரால் நாளும் அடையும் துன்பம் பெரிது' என்றனர்.

தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியிலும் கடல்; கிழக்குப் பகுதியிலும் நீண்ட கடல்; தெற்குப் பகுதியிலும் கடல்; ஒரு கடலா? முக்கடல்கள். வங்கக்கடலும், அரபிக் கடலும், இந்துமாக்கடலும் இணையும் இடமே தென் குமரித் திருநாடு. தமிழ்நாட்டின் வடக்கே மட்டுந்தான் நிலம். இவ்வாறு நீண்ட நெடிய கடற்கரையைக் கொண் டுள்ள நாடு நம் தமிழ்நாடு. கடற்கரையோரத்து ஊர்கள் பல தமிழ்நாட்டில் உண்டு. கடலும் கடலைச் சார்ந்த பகுதிகளைச் சங்க நாளில் 'நெய்தல்' என்ற பெயரால் வழங்கினர். கடல் நீர் உவர்ப்புச் சுவையுடையது. உண்ண வழங்காதது. ஆனாலும் கடலையடுத்த இடங்களிலும் உண்பதற்கு உரிய இனிய நீர் - குடிநீர் உண்டாகும். ஆனால் அதே நேரத்தில் நல்ல நீர்ச்சுனைக்கு, நீர் ஊற்

றுகளுக்குப் பெயர்போன மலையும் மலையைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தையடுத்த இடங்களிலும் உப்புச் சுவை சார்ந்த உப்புநீர் சுரக்கும். இதனை இன்றும் பலவிடங் களிற் காணலாம். ஆதலால் மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுதற்குரியவர்கள், குணம் செயல்களால் தாம் சேர்ந்த இனத்தினை யொத்தவர்கள் அல்லர்; தங்கள் தங்களுடைய மனத்திற்கு இயைந்த, பொருந்திய தன்மையை உடையவர்களாகவே இருப்பர்.

'கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும்; மலை சார்ந்தும் உப்பீண்டு உவரி நீர் பிறக்கும்' - நம்முன்னோர் எவ்வளவு நுட்பமாக இயற்கையின் இயல்புகளை, தன்மைகளை, அளவிலா ஆற்றலை ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள் என்பது போதரும்.

மனத்திற்கும் இனத்திற்கும் இடையே ஒரு போராட் டம் எழுகின்றது. அந்தப் போராட்டத்தில் இயல்பாக இனம் வெற்றி பெறும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. காரணம் எவ்வளவுதான் தூய பாலாக இருந்தாலும், அதனைத் தூய்மையற்ற பாத்திரத்தில் வைத்திருந்தால் அப்பால் முற்றிலும் கெட்டுப்போவது உறுதி என்பர். தீய இனத்தாரோடு சேர்ந்துவிட்டால் எவ்வளவு நல்ல இனத் தவரும் தம் இயல்புகெடுவது உறுதி. எனவே பழகும் இனம், சூழலை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பர்.

ஆனால் நாலடியார் சூழலினும் இயற்கையறிவிற்கே, முதன்மை வழங்குகின்றது. மனம் அறிவின் வழிச் செயல் பட்டால் மனமே வெற்றி வாகை சூடும் என்று நயமுற நவில்கிறது நாலடியார். ''சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு'' என்று குறள் மறை தந்த கோமான் திருவள்ளுவர் அறிவின் ஆட்சிக்கும்

ஆற்றலுக்கும் வலிமை தேடித் தந்திருக்கிறார் அன்றோ! அறிவின்வழி, இயற்கை அறிவின்வழிச் செயல்படும் மனமுடையார், தீய இனத்தோடேயே தங்களை முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலுங்கூட அவர்களை அத் தீய இனம் தம் பக்கம் சாய்க்கும் வல்லமையினைப் பெறுதல் இல்லை. இனத்தின் ஆற்றலிலும் அவ்விடத்தே மனத்தின் ஆற்றல் மிகுந்து வெற்றி பெற்று விடுவதனைக் காணலாம். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' என்று திருவள்ளுவர் சுட்டியதும் இதனைத்தான். தத்தம் மன ஆற்றலை நன்குணர்ந்தும் நல்வழியில் பயன்படுத்தித் தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் எவ்வளவுதான் தீய இனத்தோடு எத்துணைதான் நெருங்கிய அளவு தொடர்பு பெற்றிருந்தாலும் அதனால் ஒருநாளும் தளர்வு ஏற்பட்டு வாழ்வு காய்தல் இல்லை. இதனையே நாலடியார் 'மனத்தனையர் மக்கள்' என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது. எனவே இந்நாலடியார் அறிவாலமைந்த மனத்திற்குத் தீய இனத்தையும் வென்று வாழும் ஆற்றல் மிகுதி என எழிலுற எடுத்து விளக்குகின்றது.

" கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும்; மலைசார்ந்தும்
உப்பீண் குவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனையர் அல்லர்; எறிகடல் தண்சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார். "

—நாலடியார்: 245.

## 3

அறிவாட்சி மிகுந்த அறிஞரின் - பண்பாட்சி நிறைந்த சான்றோரின் நட்பு எவ்வாறு இருக்கும் என்பது குறித்து நாலடியார் நயம்பட விளக்கப் புகுகின்றது.

நல்ல நட்பு வேண்டற்பாலது; நட்பு என்னும் பண்பு நானிலமெங்கும் பரந்து விரிந்து கிடக்கின்றது. நண்பர்களுக்கிடையே அமைந்த தொடர்பு நட்பாகிறது; காதலன் காதலியர்க்கிடையே அமைந்த தொடர்பு காதலாகிறது; பெற்றோர்க்கும் அவர்கள் பெற்றெடுத்த சேய்க்கும் இடையே அமையும் தொடர்பு பாசமாகிறது. அடியவனுக்கும் ஆண்டவனுக்கும் இடையே அமையும் தொடர்பு பக்தி எனப் பேசப்படுகின்றது. இவையனைத்திலும் அன்பு மிகுந்து அறிவு நிறைந்து விளங்குகின்றது. தொடர்பு ஏற்படக் காரணமாய் அமைவது அன்பு; தொடர்பு இடையறாது; இடை முரிவுபடாது நீடித்து நிலைக்கத் துணை புரிவது அறிவு.

'அறிவுடைமை' என்று தலைப்பமைந்த அதிகாரத்தில் நட்பைப் பற்றியும் பேச நாலடியார் ஏன் முற்படுகின்றது? என்று மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது தோன்றலாம். நல்ல நட்பு அமைவதற்கு அன்பு என்னும் அடித்தளம் அமைந்தால் மட்டும் போதாது. அறிவு என்னும் கட்டடமும் அந்த அன்பு என்னும் அடித்தளத்தின்மேல் அமைய வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை என்னும் மாளிகை வகையுற, வனப்புற அமையும் என்பதனையே நாலடியார் நாம் நலம் பெற நயம்பெற— நவில்கின்றது.

'நட்புக்கடலில் வீழும் முன் - அன்பலைகளில் ஆடும் முன், ஆழும் முன் உங்கள் அறிவிற்கு வேலை கொடுங்கள்' என்பதனை வலியுறுத்தவே நாலடியார் முதற்கண் முனைகின்றது.

நிலைத்த மனத்தினை யுடையவர்கள் பண்பு— எத்தகையதாக இருக்கும்? நிலைத்த மனத்தையுடையவர்கள், நல்ல குணங்களும், ஒழுக்கம் என்னும் உயர் சிறப்பும் பொருந்தியவர்களிடத்தில் முதலில் சேர்தலும், பின் பிரித

லும் செய்ய மாட்டார்கள் என்பதனை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது நாலடியார்ப் பாடல்.

அறிவினுடைய கடமை யாது? செய்யத்தக்கன இவை, செய்யத்தகாதன இவை எனப் பகுத்தறிந்து கூறுதல் அறிவின் பணியாகும். நட்புலகில் எவற்றைச் செய்தல் வேண்டும்? எவற்றைச் செய்தலைத் தவிர்க்க வேண்டும் என்பது குறித்து ஆராய்கிறது இந்தப் பாட்டு.

'ஒராஅலும் ஒட்டலும் செய்பவோ?' - நண்பரை ஒரு காற் பிரிதலும், மற்றொரு காற் கூடுதலும் உலகத்திற் செய்யத் தக்கனவோ? என வினவுகிறது நாலடியார். இவண் செய்யக்கூடாது என விதிமுறையிற் கூறாமல், 'செய்பவோ' என வினாவாக்கி விடையைப் பெறவைக் கிறது நாலடியார். அறிவால் நெறிப்படுத்தப் படாது, ஆய்ந்தோய்ந்து பாராமல் கண் மூடித்தனமாக அன்பு செய்வோர் தம் நண்பரிடம் சில நாள் கூடியிருப்பர்; பின் சிறு தவறும் (தவறு இன்றெனினும் தவறாகக் காண் பித்துக் கொண்டு) பொறுக்காது, பிரிந்து விடுவர். அதிலாவது உறுதியாக நிற்பரா வென்றால் அதுவும் இல்லை. அப் பிரிவிலும் உறுதியற்ற மனத்தராய் மீண்டும் அவர்களோடு பழக வருவர். ஆனால் அறிவால் அமைந்து நட்புக்கொண்ட நல்லோர் நிலையில்லா மனத்தராய் நிலவமாட்டார். அறிவுடைமைக்கு அஃது அழகும் அன்று. உலகம் அறிவுடையோர்மாட்டு இந்த இனிய நட்புப் பண்பை எதிர்பார்த்து நிற்கிறது.

'ஒராஅலும் ஒட்டலும் செய்பவோ?' என்று வினாக் குறி எழுப்பும் நாலடியார்ப் பாடலின் உட்கருத்து, செய்ய மாட்டார்கள், என்பதாகும்.

நல்ல குணங்கள் பொருந்திய ஒழுக்கமுடை யாரிடத்தும் முதலில் சேர்தலும் பின்னர்ப் பிரிதலும் உறுதியாகச் செய்யமாட்டார்கள். ஒருவேளை முதலிற்

சேர்ந்து, பின் பிரிபவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் யாரிடத்திலும் நட்புக் கொள்ளாமல் இருப்பதே நலம் பயப்பதாகும் என்கிறது நாலடியார்.

'விராஅய்ச் செய்யாமை நன்று' என்ற தொடர்நட்புலகில் அறிவுடைமையை வற்புறுத்துகின்றது. 'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' அன்றோ?

'' நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும் ''

என்றும்,

'' வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு ''

என்றும்,

'' இறப்பவே தீய செயினுந்தம் நட்டார்
பொறுத்தல் தருவதொன் றன்றோ ''

என்றும்,

'' தமரென்றுதாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரென்மை தாமறிந்தா ராயின் அவரைத்
தமரினும் நன்குமதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல் ''

என்றும் இரண்டு அதிகாரங்களுக்கு முன் நாலடியார் 'நட்பிற் பிழைபொறுத்தல்' பேசும்.

எனவே நிலைத்த மனத்தினையுடையவர்கள் நற்குண நற்செய்கையுடையாரிடத்துத் தொடர்பு கொண்டால் விட்டு நீங்கமாட்டார் என்பதாம். பாடலைக் காண்போம்:

'' பரா அரைப் புன்னை படு கடல்தண்சேர்ப!
ஒராஅலும் ஒட்டலும் செய்பவோ? நல்ல
மரூஉச் செய்தியார் மாட்டும் தங்கும்மனத்தார்
விராஅய்ச் செய்யாமை நன்று. '' —நாலடியார் : 246

# 9. யாவர்க்குமாம் இறை

தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய சான்றோர் பலர். 'உண்டா லம்ம விவ்வுலகம் இந்திரர் அமிழ்தம், இயைவதாயினும் தமியர் உண்டலும் இலரே' என்றும், 'தமக்கென வாழா நோன்றாள் பிறர்க்கென முயலும் பெற்றி யானே உண்டாலம்ம விவ்வுலகம்' என்றும் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த கடலுள் மாய்ந்த-இளம்பெருவழுதி என்ற மன்னன் பாடினான். தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெற்றியுடைய பேரருளாளர்களை உலகம் மதிக்கிறது; பாராட்டுகிறது; பின்பற்றுகிறது.

இருநிலம் நம்மைத் தாங்கி நிற்கும் தகவுடைய கடமையினைச் செய்வதே, சான்றோர் வாழும் தவநெறி தழுவிய வாழ்க்கையாலேயாகும். அத்தகு சான்றோருள் தலைசிறந்தவராய், காலத்தால் முற்பட்டவராய் விளங்கும் சான்றோர் திருமூலர் ஆவர். இவர்தம் தொண்டின் தகவறிந்த நம்பியாரூரராம் சுந்தரமூர்த்தி நாயனார் தம் திருத்தொண்டத் தொகையுள் இவரை, 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று குறிப்பிடுகின்றார். கயிலைமால் வரையைக் காத்தருளும் நாயகர் நந்தி தேவரின் திருவருள் பெற்ற யோகிகளுள் ஒருவர் திருமூலர் என்றும், அவர் அணிமாதி சித்தி பெற்றவர்

என்றும் கூறுவர். திருமூலர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறவோர் என்று ஆராய்ச்சியாளர் அறைவர். இவர் சிவநெறி மறவாத சிந்தையர். 'அரனடி நாள்தோறும் சிந்தை செய்து ஆகமஞ் செப்பலுற்ற' சிறப்பினர் தம் புகழைத் தரணியில் தமிழிற் பாட வேண்டும் என்றே இறைவன் இவ்வுலகில் இவரைப் பிறப்பித்ததாகக் கூறுவார் இவர்.

" என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே "

என்பது இவர்தம் திருவாக்காகும். இவ்வுலக மக்கள் மாட்டு இவர் கொண்ட பேரருள்,

" நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் "

என்னும் இவர்தம் திருவாக்கால் விளங்கும்.

" ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் "

என்று இறைவன் ஒருவனே, உயிர்க்குலம் அனைத்தும் ஒன்றே என்ற உயரிய, உலகமெலாம் ஒரு குலம் என்ற பரந்துபட்ட பண்பாட்டைப் பாருக்கு அளித்தவர் தவ யோகியும் ஞானச் சிரேட்டருமான திருமூலர் ஆவர்.

இவருடைய 'கிளத்து முறை' (The way of telling) தனித்தன்மை வாய்ந்தது. நில்லாமையே நிலையாக நிலை பெற்று விளங்கும் இவ்வுலக நிலையாமையினை இவர் போல் வற்புறுத்தி நுணுக்கமாகச் சொன்னவர்கள் வேறு எவரும் இலர் எனலாம். முதற்கண் நிலையாமையை யுணர்த்திப் பின்னர் வாழும் நெறியை வகையுற எடுத்து மொழிகின்றார் திருமூலர்.

இந்த உடம்பின் நிலையாமையினை 'யாக்கை நிலையாமை' என்ற தலைப்பில் விளக்குகின்றார். ஓர் அன்பான இல்லறக் காட்சியினை இனிதுறக் காட்டி, பாடலின்

இறுதியில் நூலறுந்த காற்றாடிபோல் உயிர் குடிபெயர்ந்து போய் உடல் மட்டும் நின்ற அவலக் காட்சியினைக் காட்டுகின்றார். தன் இனிய மனைக்கிழத்தி, தன் கைவண்ணமெல்லாம் காட்டிச் சமைத்து வைத்த அறுசுவை யுணவை உண்ட ஒருவன், அடுத்து அவளோடு இனிய காதல் மொழிகளைப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் இடப் பக்க மார்பு வலிக்கின்றது என்று கூறிக் கீழே விழுந்து உயிர்விட்ட சோகக் காட்சியினை நம் நெஞ்சம் பிழியக் கூறுகின்றார் திருமூலர்.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே."

—திருமந்திரம்: 148

எனவே யாக்கையின் நிலையின்மையை முதற்கண் அறிந்து கொண்டால் வாழும் நாள்களை வீணாள் ஆக்காமல் இருக்கும் வகையினை மேற்கொள்ளலாம். உடம்பின் தன்மை இத்தகையதாக இருப்பினும், அவ்வுடம்பில் உயிர் நிலைக்கும்வரையில் அதனை ஓம்புதல் வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார். ஏனெனில் 'காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா' மாயனார் குயவன் செய்த மண்ணு பாண்டம் ஓடடா என்று மட்டுமே எண்ணி உடலை ஓம்பாது இருந்து விடுதல் கூடாது என்று கூறுவார் போல், நிலையற்ற உடம்பினுள்ளும் என்றும் நிலைபெற்ற உத்தமனாம் இறைவன் கோயில் கொண்டு எழுந்தருளிக் கொலுவீற்றிருக்கின்றான் என்றும் எனவே, தாம் இறைவன் வாழும் கோயிலாக இலங்கும் தம்முடம்பினை அரிதாக முயன்று ஓம்புவதாகவும் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

" உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. "

—திருமந்திரம்: 725

இவ்வாறு உடம்பினை ஓம்பி இறைநெறி நிற்றலில் தலைப்படும் திருமூலர், வையத்து உயிர்கள் வகையுற வாழும் நெறியினையும் வனைந்து வகுத்துக் காட்டுகின்றார்.

உலக உயிர்களுக்கெல்லாம் ஒருபெருந் தலைவனாக விளங்கும் இறைவனை வணங்குதற்குரிய ஆறு எது? என்று முதலாவதாக எண்ணுகின்றார். எளியதொரு பச்சிலை கொண்டு வணங்கினும் அஃது எம்பிராற்கு ஏற்றதாகும் எனத் துணிகின்றார். "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" என்கிறார். இஃதோர் பெரிய உண்மையாகும். வாழ்க்கையின் அடித்தளத்தில் வாழ்பவனும் தன் சக்திக்கேற்ற வகையில் ஆண்டவனை வழிபடலாம் எனத் தெளிவுறுத்துகின்றார் திருமூலர்.

இக் கருத்தினையே சங்ககாலப் புலவராம் பொய்யா நாவிற் கபிலர்,

" நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா "

—புறநானூறு : 106

என்கிறார். அதாவது, "நல்லதாயினும் தீயதாயினும் அல்லாத, குவிந்த பூங்கொத்தும் புல்லிய இலையும் உடைய எருக்கம் பூவாயினும், ஒருவன் உள்ளன்புடன் சூட்டினால், அவற்றைத் தெய்வங்கள் விரும்பி ஏற்குமேயன்றி, யாம் அவற்றை விரும்போம்' என்று கூறா" என்பதாகும். இதனையே ஈழத்துப் புலவரும், தமிழிசை வளர்ச்சித் தொண்டில் தலைப்பட்டுச் சிறந்த 'யாழ் நூலினை' த் தந்தவருமான விபுலானந்தர்,

"வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்தமா மலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

என்றார். (விபுலானந்தத் தேன்)

அடுத்து, 'யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை' என்கிறார். மனிதப் பிறவிக்கு நிகரான மாண்புடைய பிறவி பசு எனலாம். ஒரு வீட்டின் சிறப்பு 'பால் பாக்கியம்' எனப்பட்டது. போரின் தொடக்கமும் பசுமந்தை கவர்தலாக இருந்தது. 'மாடு' என்ற சொல்லே செல்வத்தை யுணர்த்திற்று. எனவே வாயாற்ற தன் பசி யுணர்த்த முடியாத பசுவிற்குப் புல்லொன் றெடுத்துப் போடுக என்றார் திருமூலர். தம்மோடு தொடர்புடையார் அல்லாதார் மாட்டும் பிறப்பதன்றோ அருள்!

மூன்றாவதாக 'யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி' என்றார். 'பசியென்று வந்தவர்க்குப் புசியென்று ஒருபிடி' கொடுக்க வேண்டும் என்பர் பெரியோர். 'இல்லோர்க்கு இல்லையெனாது வழங்குதலே ஈகை'யாகும். பாரகம் அடங்கலும் பசிப்பிணி யகற்றலே அறத்தில் தலையாய அறமாகும்.

நான்காவதாக, 'யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே'. நம்மிடம் ஏதும் இல்லையென்றாலும் இறைவன் தந்த நாவால் பிறருக்கு இனியவுரை வழங்கலாமன்றோ! எதுவுமற்றவர் வாய்ச் சொல் வழங்கலாமன்றோ!

திருமூலர் பாட்டை முழுமையாகப் பார்ப்போம்:

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

# 10. விளையும் உயிர்

உலகம் உய்யும் நெறி இதுவென்றும், மனிதன் வாழும் நெறி இதுவென்றும் வையத்தில் வற்புறுத்திச் சென்ற சான்றோர் பலராவர். 'ஊழிபெயரினும் தாம் பெயராத' தன்மையுடைய அச்சான்றோர்களால்தான் உலகம் வாழ்ந்து வருகின்றது. அத்தகைய தவமுடைய சான்றோருள் ஒருவர் திருநாவுக்கரசர் ஆவர். தம் தொண்டின் திறத்தாலே தமிழகத்தில் ஒரு விழிப்புணர்ச்சி —ஏற்படுத்திய பெரியவர் இவராவர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய சான்றோராகிய இவர் பிறந்த பதி, திருவாமூர் என்பதாகும். இப் பதியினைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான், 'சைவ நெறி தலமேழும் பாலிக்குந் தன்மையினால் தெய்வ நெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர்' என்று பாராட்டுவார். அத்திருத்தலத்தில், 'அலகில்கலைத் துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறி வாழ, உலகில் வரும் இருள் நீக்கி, 'ஒளிவிளங்கு கதிர்போல்' திருநாவுக்கரசர் திருவவதாரஞ் செய்ததாக மேலும் அவர் போற்றுவார்.

பரமன் பதம் பாடிப் பாடித் துதித்தே புகழ் கொண்டவர் திருநாவுக்கரசர்; 'பாவுற்றலர் செந்தமிழன் சொல் வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினால் நாவுக்கர

சென்று உலகேழினும் நின் நன்னாமம் நயப்புற மன்னுக' என்று தடங்கருணைப் பெருங்கடலாம் இறைவனே நாவுக்கரசு என்ற நற்பெயரை வழங்கியருளிய பேறு பெற்றவர் நாவுக்கரசர் ஆவர். வாக்குக்கு ஈசர்—வாகீசர் பெயர் பெற்ற பெருந்தகையார், மெய்யுற்ற திருப்பணி செய்பவராய், விரவுச் சிவ சின்னம் விளங்கிடக் கையில் திகழும் உழவாரப் பெரும்படையுடன் திருத்தொண்டாற்றும் பெருவிருப்புடையவராய்த் திகழ்ந்தார். இவ்வாறு என்ற உள்ளத்தாலும் உடலாலும் இறைவனுக்கும் மக்களுக்கும் ஒரு சேரப் பணிபுரிந்த உயர்குணத்து நல்லோராய் ஒளிர்பவர் நாவுக்கரசராவர்.

இறைவனின் இனிய பண்புகளை எவரும் எளிதில் அறிந்து அவனடிகளைப் போற்றும்வண்ணம் நெறிப்படுத்துவதில் நாவுக்கரசர் முன்னிற்கிறார். அவரது திருப்பாடலைக் காண்போம்:

"திருவே! என்செல்வமே! தேனே! வானோர்
செழுஞ்சுடரே! செழுஞ்சுடர் நற்சோதி! மிக்க
உருவே! என் உறவே! என் ஊனே! ஊனின்
உள்ளமே! உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே! என் கற்பகமே! கண்ணே! கண்ணிற்
கருமணியே! மணியாடு பாவாய்! காவாய்!
அருவாய வல்வினைநோய்—அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே!"

திருநாவுக்கரசர் பெருமான் இவ்வாறு இறைவனின் பண்பு நலன்களைப் பறைசாற்றிவிட்டு, அவனுடைய படைப்பில் உலக உயிர்கள் அனைத்தும் சமம் என்ற நற்கருத்தை எடுத்து நவில்கின்றார்.

ஆண்டவனுடைய அடியார்கள் என்றால் அவர்கள் அனைவரும் சமம். அவர்களுக்கிடையில் பிறப்பினால் பேதம் என்று கூறிப் பிரித்துப் பேசுவது பேதமை. 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்பது தமிழ்மறை, திருக்குறள். அவ்வகையில் கணக்கிலாச் செல்வத்திற்கு அதிபதியாக இருந்தாலுங்கூட அவர்கள் இறைநெறியை மதிக்காத போற்றாத உள்ளமுடையோராய் இருப்பா ரேயானால் அவர்களை ஒருபோதும் மதியோம் என்றார். அதே நேரத்தில், அங்கங்கள் எலாம் அவ்வுடம்பைப் பற்றியுள்ள தொழு நோய் காரணமாக அழுகியிருந்து, மேலும் அவர் பசுவினைக் கொன்று அதன் ஊனினைத் தின்று வாழும் கருணையற்ற கொடுமை மிக்க வாழ்வு நடாத்தும், கீழ்ச்சாதியென வழங்கும் புலையரே யாயினும் அவர் ஈசனுடைய அடியவராய், அவன் நெறி நிற்கும் நல்ல மனத்தராய் விளங்கினால் அவரே யாம் வணங்கும் கடவுளர் என்று ஆண்டவன் அருள் நெறி பின்பற்றும் புலையரையும் உயர்த்திப் பேசக் காணலாம். பாடல் வருமாறு:

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வான்ஆளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லாராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே."

'எல்லோரும் சமம்' என்ற இந்தக் கருத்தையே மேலும் சற்று வன்மையாகவே பிறிதொரு பாடலில் கூறியுள்ளார்.

" சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும் குலமும்கொண்டு என்செய்வீர்
பாத்தி ரம் சிவமென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருமாற் பேறரே "

இவ்வாறு ஒரு குலம், ஒரு நிறையானவர்கள் அடுத்துச் செய்யத்தக்கது என்ன என்பது குறித்தும் நாவுக்கரசர் பெருமான் நலமுற நவில்கின்றார். நாவுக்கரசர் பிறருக்கு உதவும் பெருமனம் படைத்த வேளாளர் குடியில் பிறந்து, பலருக்கும் பயன்படும் பயன்மரமான வாழ்வு வாழ்ந்தவர். உழவர்குடிப் பெருமகனாராகப் பிறந்து, உழவாரப் பணியே தம் இடையறாத உயர்பணியாகக் கொண்டொழுகிய உத்தமராகிய அவர், உலக மக்கள் இறையருளை எய்தப்பெற—சிவகதி சேர எளிய வழி எதுவென்றும் தேர்ந்து தெளிவிக்கின்றார். சிவகதி—அதாவது சிவனருள் இறையருள் என்னும் நெற்கதிர்களை நிறையப் பெற வேண்டுமேயானால் 'மெய்ம்மை' என்ற உழவை மேற் கொள்ளவேண்டும். நிலம் உழப்பட்ட பின்னர் அந் நிலத்தில் 'அன்பு' என்னும் அரிய விதையை ஊன்றி விதைக்க வேண்டும். அவ்வயலில் வித்து முளை கிளம்பிப் பயிர்முகம் காணும் அளவையில் அவற்றோடு 'பொய்ம்மை' என்னும் களையும் விளையலாம். அப் பொய்ம்மை' என்னும் களையினை வேரோடு வெட்டி—யெறிய வேண்டும். பின்னர்ப் 'பொறுமை' என்னும் நீரைப் பாய்ச்சி, 'தகுதி' என்னும் நல்ல பண்பாகிய வேலியைக் காவலாகப்போடவேண்டும். நல்லவழியிலே நடத்தலாகிய 'செம்மை' என்னும் நெறியிலே நீங்காது நிற்க வேண்டும். இவ்வாறு நின்றால் 'சிவகதி' எனும் தானிய மணிக் கதிரைத் தடையின்றிப் பெறலாம் என்கிறார் சால்பிற்குக் கட்டளையாகி நெறி நின்ற தூயோராம் திருநாவுக்கரசர் பெருமான்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையும் அன்றே."

இவ்வாறு திருநாவுக்கரசர் பெருமான் உலக உயிர்கள் உய்யுநெறியினை, ஒழுகும் நல்லாற்றினைத் திறம்படக் கூறியுள்ளார்.

## 11. ஆனந்த வெள்ளம்

உலகிடைத் தோன்றி வளர்ந்து செழித்து வாழ்ந்த மொழிகள் பல; இன்றளவும் வாழ்ந்துவரும் மொழிகள் சில; அவற்றிலும் இலக்கிய இலக்கணச் செல்வங்களை இடையறாது பெற்று, அதனால் வளம்பெற்று இன்றளவும் உயர்தனிச் செம்மொழியாய் விளங்கும் மொழி தமிழாகும். ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் அறிஞர் பெருமக்களால் கூறப்படுவது போன்று தமிழ் இரக்கத்தின் மொழி என்றும் பக்தியின் மொழி என்றும் பாராட்டப்பெறுகின்றது. அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியத்தில் இல்லை என்பர் ஆராய்ச்சியாளர்.

'தமிழோடு இசை பாடல் மறந்தறி' யாதவர்களான சமய குரவர்கள் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'ப் பாடிய பாடல்கள் கல்நெஞ்சினையும் கனிவிப்பனவாகும். ஒருவாத புகழுடைய திருவாதவூரில் பிறந்து, அரிமர்த்தன பாண்டியனிடம்'தென்னவன் பிரமராயன்' என்ற விருதுப் பெயர் பெற்று அமைச்சராக விளங்கி, மன்னன்

பொருட்டுக் குதிரை வாங்கச் சென்றபொழுது திருப் பெருந்துறையில் இருந்த மரத்தடியில் குரு வடிவில் இருந்த சிவபிரானைக் கண்டு சித்தம் பறிகொடுத்து, ஏற்ற பணியினை மறந்து இறைவன் திருத்தொண்டு செய்து, அதனால் அரசனின் ஒறுப்பிற்கு ஆளாகி, இறுதியில் இறைவனின் திருவடிநீழலை அடைந்தவர் மாணிக்கவாசகர் ஆவர்.

இறைத்தொண்டிலே திளைத்து உயர்வாழ்வு வாழ்ந்து ஒளிநெறி காட்டிய பெருமக்களாகத் தேவார மூவரையும், திருவாசகம் தந்த மாணிக்கவாசகரையும் குறிப்பர். இந்நால்வரினும் சம்பந்தர் தலையாயவர் என்றும், ஆயினும் அவர் இறையருளை இளமையிலேயே பெற்றவர் என்றும், சுந்தரர் சம்பந்தரினும் சிறந்தவர் என்றும், ஆயினும் அவர் உலகியல் வாழ்கையிற் பெரிதும் உழன்றவர் என்றும், ஆதலின் அவரினும் விழுமியவர் திருநாவுக்கரசர் என்றும், அவரும் தாம் வாழ்ந்த எண்பத்தோர் ஆண்டுகளிற் பெரும்பகுதியினை அறிவுநெறியிலும், எஞ்சிய சில ஆண்டுகளைப் பக்திநெறியிலும் செலுத்தியவர் என்றும், எனவே, மாணிக்கவாசகரே உலக அனுபவம் நிரம்பப் பெற்று, மக்கள் மனம் உருக வைக்கும் திருப்பாடல்களை நிரம்பப் பாடியவர் என்றும் அறிஞர் ஆராய்ச்சிகள் கொண்டு உரைப்பார்.

'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது தொன்றுதொட்டுத் தமிழகத்தே நிலவி வரும் பழமொழியாகும். ''திருவாசகத்தை ஒருமுறை ஓதினால் போதும். கருங்கல் மனமுடையவராயிருந்தாலும் அவர் மனம் கரையும். நீர்க்கேணியில் ஊறும் ஊற்றைப் போல ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி நிற்பர்'' என்கிறார் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

" திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்ணீர்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே. "
—நால்வர் நான்மணிமாலை

என்பது அவர்தம் திருவாக்காகும்.

ஏழாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து கிறித்தவ சமயத்தைப் பரப்ப வேண்டுமென்று தமிழகம் வந்தவர் ஜி. யு. போப் என்னும் பாதிரியார் ஆவர். கிறித்தவ சமயம் பரப்ப வந்த அந்த அருளாளரின் நெஞ்சை நன்கு பிணித்தது திருவாசகம். விரும்பி விரும்பிப் படித்தார்; உருகி உருகி நின்றார். பின் தம் மொழியில் இத்தகு சீரிய நூலை-உயர்ந்த பனுவலை- பக்தித்திறம் பேசும்பாக்களை மொழிபெயர்க்க வேண்டும் என்று எண்ணினார். திண்ணிய எண்ணமுடையார் எண்ணினால், எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் அன்றோ! திருவாசகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. 'எலும்புருக்கும் பாட்டு' (Bone-melting song) என்று கசிந்து கசிந்துஉருகி உருகித் திருவாசகத்தினைக் கண்ணீர் மலர்களைச் சிந்திப் பாராட்டினார் ஜி. யு. போப் அவர்கள்.

தித்திக்கும் திருவாசகத்தின் இனிமையைப் பா மணக்கப் பாடினார் வடலூர் வள்ளற் பெருமான் அவர்கள்.

" வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே. "
—திருவருட்பா

என்று வள்ளலார் வாயாரப் பாடினார்.

இவ்வாறு பெரியோர் பலரால் பாராட்டப்பெறும் மாணிக்கவாசகர் ஒருவனே இறைவன் என்று உளமார எண்ணியவர். அவ்விறைவன் சிவபெருமானே என்று தெளிந்தவர். அச்சிவனார் ஒருநாமம். ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவர் என்று எண்ணியவர். அப்படிப்பட்ட தன்மை வாய்ந்த இறைவனை ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்ட எண்ணி அனைவரையும் அழைத்தவர். 'அருவாய் உருவமுமாய் ஆயபிரான்' என்றும் எண்ணி எண்ணி நைந்தவர். அவ்விறைவனை 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி' என்றும், 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள்' என்றும், 'பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியன்' என்றும் பாடிக் களிக்கின்றார். ஞானக்கரும்பின் சாறாகவும், வெல்லப் பாகாகவும், நாடற்கரிய நலமாகவும் நந்தாத தேனாகவும், பழச்சுவையாகவும், சித்தம் புகுந்து தித்திக்க வல்ல கோனாகவும் பிறப்பு அறுத்து ஆட்கொண்ட கூத்தனாகவும் எல்லாம் வல்ல இறைவனை உள்ளம் மகிழ்ச்சியில் அள்ளூறித் ததும்ப நினைக்கிறார்.

'நவச்சிவாய' என்ற இறைவனின் 'தாரக மந்திரத்தை' அறிந்து தம் நூலின் முதற் பகுதியாம் சிவபுராணத்தை ''நமச்சிவாய வாழ்க'. நாதன் தாள் வாழ்க, என்று தொடங்குகின்றார். அவ்விறைவனை ''இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று பரவிப்' போற்றுகின்றார். இறைவன் 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' என்றும், 'ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்' என்றும், 'தாயிற் சிறந்த தயாவான தத்துவன்' என்றும், 'பேராது நின்ற பெருங்கருணைப் பேராறு' என்றும், 'நள்ளிருளின் நட்டம் பயின்றாடும் நாதன்' என்றும், 'தில்லையுட் கூத்தன்' என்றும், 'தென்பாண்டி நாட்டான்'

என்றும், 'அல்லற் பிறவி யறுக்கும் சொல்லற்கரியான்' என்றும் அகங்குழைந்து நெக்குருகித் துதிக்கின்றார்.

மாணிக்கவாசகர் அன்பு வேறு ஆண்டவன் வேறு என்று எண்ணியவர் அல்லர். இறைவன் அருளே இடை யறாத இன்பத்தைத் தருவது எனக் கருதியவர். ஆதலால் இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியா கவும் மணிவாசகப் பெருந்தகையார் எண்ணிக் கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். நானூறு கட்டளைக் கலித் துறையான் இயன்ற திருக்கோவையார் இம்முறை யில் அமைந்ததாகும். மேலும், நாயகன் நாயகி பாவத்தில் திரு அம்மானைப் பாடல்கள் துலக்கமுறக் காணலாம். அப்பாட்டில் மாணிக்கவாசகர் தம்மைத் தலைவியாக எண்ணி இறைவனை எண்ணி உளம் உருகிப் பாடியுள் ளார்:

"அழகிய கொன்றை மாலையைத் தலையில் அணி வேன். அணிந்து, சிவபெருமானது எழுச்சிமிக்க தோள் களைச் சேர்வேன்; சேர்ந்து, அவனைக் கூடி, அதனாற் பிறந்த களிப்பால் அறிவு மயங்கிப் புலவியெய்துவேன். பின்னர், புலவி நீங்கி, அவனது சிவந்த இதழைப் பெற உளமுருகி நிற்பேன். நெஞ்சம் நிறையழிந்து நெக்குருக அவனைத் தேடுவேன். தேடி, அவன் திருவடியை எஞ்ஞான்றும் நினைந்திருப்பேன். அவன் திருவருளைப் பெறாது மெலிவேன். அதனைப் பெற்று மீண்டும் மகிழ்வு கொள்வேன். எனவே நெருப்பைக் கையிலேந்தி ஆடுகின்ற கூத்தனின் சிவந்த திருவடிகளை நாம் பாடுவோமாக."

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன்; செவ்வாய்க் குருகுவேன்; உள்ளுருகித்
தேடுவேன்; தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்;

வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்."

—திருஅம்மானை: 17

இறைவனைத் தொழும்பொழுது ஏற்படும் உருக்கமே சிவன் கழல் சேர்க்கும் நீர்மைத்து என உளமார எண்ணினார் மணிவாசகப் பெருந்தகையார். கசிந்து கசிந்து உருகி உருகி நிற்கும் நிலையினை அவர்தம் திருப்பாடல்களில் காணலாம். 'பக்திவலையிற் படும் ஈசனின்' திறத்தினைப் பின்வருமாறு கூறுவர்:

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்;
உடையாய் என்னைக் கண்டுகொள்ளே."

—திருச்சதகம்: 1

"என்னை அடைக்கலமாக ஏற்றருள் செய்தவனே! நின்பெருங் கருணைத் திறத்தை நினைந்து உடம்பு தானே மயிர்க்கூச்செறிந்து நடுநடுங்க, உனது வாசனை பொருந்திய திருவடிகளை வணங்குவதற்கு எனது கைகள் தாமே தலைமேற் கூம்பப்பெற்றுக் கண்களினின்று ஆனந்த வெள்ளம் நிரம்ப, மனமானது ஆர்வத்தால் வெப்பமுடைத்ததாக நிலையற்றவற்றின் பற்றுத் தானே நீங்கியொழிய உனக்கு வணக்கம், வெற்றி வெற்றி வணக்கம் என்றியம்பும் ஒழுக்கத்தையே நழுவ விடாது மேற்கொண்டு நிற்பேன். அடியேனைக் கண்பார்த்து ஏற்றுக் கொள்ளுக."

இவ்வாறு உடலும் உள்ளமும் உருகி நிற்கும் தனது அன்பு நிலையை மணிவாசகப் பெருந்தகையார் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

உற்றாரையும் ஊரையும் பேரையும் கற்றாரையும் வேண்டாது, குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தபிரானின் குரைகழற்கே கன்றை ஈன்ற தாய்ப்பசுவின் மனம்போலக் கசிந்து உருகுவதனையே வேண்டி நிற்கிறார் திருவாசகம் என்னும் தித்திக்கும் திருமறையைத் தந்த திருவாதவூரராம் மாணிக்கவாசகர்.

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

—திருப்புலம்பல்: 3.

"இவ்வாறு பக்திநெறியில் நிற்கும்பொழுது பேரின்பம் பெருகுகின்றது, தொன்றுதொட்டுச் சூழ்ந்து வந்த இருள் எங்கோ ஓடி மறைந்தது. அதனால் இடையீடின்றித் தொடர்ந்து வந்த துன்பம் அறவே அகன்றது. இருட்டறையாக இருந்த இதயம் அன்பு மலிந்த பேரூராக மாறி விட்டது. இவையாவும் குருந்த மரத்தின் கீழமர்ந்த திருப்பெருந்துறைப் பெருமானின் திருவருளால் விளைந்தனவே ஆகும்" என்கிறார் மணிவாசகர்.

"இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்து
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து."

—திருவெண்பா: 11.

மாணிக்கவாசகர் இம்மண்ணுலகில் உயிர்கள் எடுக்கும் பல்வேறு பிறப்புகளை கழிவிரக்கத்தோடு, உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் பக்குவ நிலையோடு குறிப்பிடுகின்றார்:

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்; எம்பெருமான்"

—சிவபுராணம் : 26—31.

என்று பிறவிப் பிணியின் புன்மையினைக் கூறி, அப்பிணி போக்கும் மாமருந்து சிவனின் திருவடிகளே என்பதைத் தெரிவிக்கும் வகையில்,

"மெய்யே உன்பொன் அடிகள்
கண்டுஇன்று வீடு உற்றேன்"

எனப் புகல்கின்றார். 'புறத்தார்க்குச் சேயோ'னாய், 'நேயத்தே நின்ற நிமல'னாய், 'மாயப்பிறப்பு அறுக்கும் மன்னவ'னாய், 'ஆராத இன்பம் அருளும் மலை'யாய், 'மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்சுட'ராய், 'அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறி'வாய் விளங்கும் சிவபெருமானே இவ்வுலகின் உண்மைத்தெய்வம் என்கின்றார். "இப்பூவுலகத்தில் உள்ளவர்கள் உண்மைத் தெய்வத்தை உள்ளபடியே உணர்ந்ததாகத் தெரிய வில்லை. 'அந்தத் தேவர்தான் சிறந்த தேவர்; அவர் தான் எல்லாம் வல்லதேவர்' என்று இவ்வாறு பொய்த் தெய்வங்களைப் பற்றிப் பேசிப் புலம்புகின்றனர். இவ்வுல கிலே நான் உண்மைத் தெய்வத்தை உணர்ந்தேன். வேறு ஒரு பற்றும் எனக்கில்லை. என் பற்று முழுவதும் அழிந்து போக வேண்டும். அந்த உண்மையான

தெய்வத்திடம் நான் ஆராத அன்பு கொண்டுள்ளேன். ஏ! வண்டே! நீ அந்தத் தேவதேவனிடம் தூதாகச் செல்ல வேண்டும்; என் ஆவலை எடுத்து மொழிய வேண்டும். இதுவே நீ எனக்குச் செய்யத்தக்க உதவி" என்று வண்டை நோக்கி மணிவாசகப் பெருந்தகையார் உரைக்கின்றார்.

" அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி"

—திருக்கோத்தும்பி : 5

"எங்கள் மனவிருள் கடந்த முதல்வனே! அரசனே! இந்திரன், பிரமன், திருமால் என்போர் பதவிகளை ஒரு பொருட்டாக மதியேன். என் வாழ்விற்கு முடிவு ஏற்பட்டாலும், உன்னுடைய அடியாரோடன்றிப் பிறரோடு நட்புக் கொள்ள மாட்டேன். நரகம் புகுந்தாலும், அங்கே உனது திருவருளுணர்ச்சியோடு இருக்கப் பெற்றால், அதனை இகழ மாட்டேன். உன்னை யொழிந்த வேறு தெய்வங்களை மனத்தாலும் நினைக்க மாட்டேன்" என்று மிக்க மனவுறுதியோடு மொழிகின்றார் மாணிக்கவாசகர்:

" கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வுகுடி கெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலேயிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள்
உத்தமனே "

—திருச்சதகம் : 2.

இவ்வாறு தான் வணங்கும் ஒரே தெய்வமாகச் சிவ பெருமானையே தேர்ந்து, அவரடிகளையே சிந்திக்கப்

பெற்றால், சிவானந்த வெள்ளம் சித்திக்கப்பெறும் என்றும், அழுது அடி அடைதலே உயிர்கள் உய்யும் நெறி என்றும் உணர்த்துகின்றார் மாணிக்கவாசகர்.

நாட்டு மக்கள் உள்ளங்கவர்ந்த நாடோடிப் பாடல்கள் (Folk—Songs) வழி மாணிக்கவாசகர் தடங் கருணைப் பெருங்கடலாம் இறைவனின் அருட்பெருக் கினை வெளிப்படுத்தியுள்ளார். திருஅம்மானை, திருப் பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருஉந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல், திருத்தசாங்கம், திருப் பள்ளியெழுச்சி முதலியன மாணிக்கவாசகர் காலத்து விளங்கிய சமுதாயப் பாடல்களாகும்.

இறைவனை அடைவதற்கு எளிய வழியாக மணிவாசகப் பெருந்தகையார் கொண்டது அழுது அழுது நிற்றலாகும்.

"அடியார்களுள், யான் ஒருவனே பொய் நிறைந்த வன். என் மனமும் வஞ்சமுடையது. என் அன்பும் களங்கமற்றதன்று. ஆனால் தீவினையுடையேன் செய்த பிழையெண்ணி நைந்து உருகி அழுவேனாயின் உன்னை வந்தடையலாம். அதற்கு அருள் புரிவாயாக" என்று அகங்குழைந்து உருகுகின்றார், 'திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை'யாம் மணிவாசகர்.

" யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே "

—திருச்சதகம்: 90

இவ்வாறு சிவபுராணத்தில் 'நமச்சிவாய' என முழு முதற் பொருளாம் இறைவனை வணங்கித் தொடங்கியு

வழுவிலாத மாணிக்கவாசகர், 'அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே' எனப் பேரின்பப் பேறு பெற்றதனைப் பொருந்தக் கூறியுள்ளார். மும்மலத் தினையொழித்து முத்திக் கொடையினை முற்பட்டுச் சென்று பெறுங்கள் என்று உலக உயிர்களை விரைவு படுத்துகின்றார்:

" அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலர் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று முந்துமினே "
—திருப்பாண்டிப் பதிகம் : 8

இவ்வாறு மாணிக்கவாசகர் "சிவபெருமானே உண் மைத் தெய்வம்; அவர் ஒருவரே தெய்வம்; அவரிடமே பற்றுச் செலுத்தவேண்டும். பற்றற்ற நிலை வாய்க்கப் பற்றற்ற அப்பரம்பொருளின் பாதமலர்களைப் பற்ற வேண்டும்; அதனாலே மாயப் பிறப்பறும்; மன்னிய சிவானந்த வெள்ள நிலை வந்தெய்தும்" என்று குறிப் பிட்டு, தன் அடியவர்க்கு "மூல பண்டாரம் வழங்குகின் றான்; வந்து முந்துமினே" எனத் தன் பேரன்பின் பெருக்குக் காரணமாக, தான் பெற்ற சிவானந்தத்தை உலக உயிர்கள் எல்லாம் பெற வேண்டும் என்னும் உயரிய கோட்பாட்டில் எல்லோரையும் கனிந்த உள்ளத் தோடு கசிந்துருகி அழைக்கின்றார்.

## 12. எவ்வண்ணம் உய்வண்ணம்

தாயுமானவர் என்பது திரிசிரபுரம் என வழங்கிய திருச்சிராப்பள்ளியில் உள்ள சிவபெருமான் பெயராகும். அறிவறிந்த பெற்றோர் இட்ட பெயர்தாங்கிய தாயுமானவர், பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சான்றோர் ஆவர். வடநூற் கடலையும் தமிழ் நூற் கடலையும் நிலை கண்டுணர்ந்த நேரியர்; உலகப் பற்றின்றி உலக மக்கள்பால் கொண்ட கணக்கிலாக் கருணையால் உலக மக்கள் அனைவரும் ஒன்றெனக் கூறி அவர்கள் உயரிய நல்வாழ்வு வாழ்தற்கு உறுதுணையாக ஒப்பற்ற தம் திருப்பாடல்கள் வழிக் கருத்துச் செல்வத்தை வாரி வழங்கிச் சென்ற சன்மார்க்கச் சான்றோராவர்.

'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி' இறைவன் இலங்கும் மாட்சியினைத் தெளிவுறச் சொன்ன சான்றோர் அவர். "எந்தெந்த நாளும் எனைப் பிரியாது என் உயிராய்ச் சிந்தை குடிகொண்ட அருள் தேவே பராபரமே" என்று ஆண்டவனை விளித்து நெக்குருகிப் பாடும் அவர் திருப்பாடலில் இந்த உண்மையைக் காணலாம்.

இந்த உலகத்து உயிர்களையெல்லாம் சைவ சித்தாந்திகள் 'பசு' வென்றும், இறைவனைப் 'பதி' யென்றும், உயிர்களின் உலகப் பற்றைப் 'பாசம்' என்றும் கூறி முப்

பொருள் உண்மை காட்டுவர். 'ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம்' என்பர் பகவான் புத்தர். ஆசைதான் இந்த அவனியையே நடத்திச் செல்கிறது. 'பற்றின் இடனாயது' உடம்பு. இந்தப் பற்று ஓர் எல்லைக்குள் அடங்குமானால், தவறு பெரிதாக விளைந்து விடாது. ஆனால் பற்று பெரும்பற்றானால், ஆசை பேராசையானால் பல தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. 'பேராசை பெருநட்டம்' என்பது உலகத்தின் அனுபவ மொழி.

இந்தப் பேராசையென்னும் பெருநோய் குறித்துத் தாயுமான தயாபரர் ஆழ்ந்து சிந்தித்துத் தம் கருத்து களை அழகிய தம் திருப்பாடலொன்றிற் பெய்துள்ளார்.

''ஆசைக்கு ஓர் அளவேயில்லை. அகிலத்தை யெல்லாம் கட்டியரசாண்டாலும், அதனோடு அமையாது அலைமீதும் தங்கள் ஆணை செல்ல வேண்டும் என்றே நினைப்பர்.

''செல்வத்திற்கு அதிபதியாகக் கருதப்படும் குபேர னுக்குச் சமமாகக் கணக்கற்ற பொன்னைக் குவித்து வைத்திருப்பவர்களும், செம்பு, ஈயம், இரும்பு, வெள்ளி முதலான விலை குறைந்த உலோகங்களைக் கொண்டு, ரசவாத வித்தையின் பயனால் பொன்னாக மாற்றி அதிக விலைக்கு விற்கவே ஆசைப்படுவர்.

''நீண்ட நாள் இனிதாக எவ்வகைத் துன்பத்தின் சாயலும் தொடராமல் வாழ்ந்து விட்டவர்களும், இனி நாம் இறந்து போய் விடுவதால் குடியொன்றும் முழுகிப் போய் விடாது என்று கருதுவதில்லை. மாறாக, நெடு நாள் வாழவைக்கும் காய கல்பத்தைத் தேடி நிற்பார்கள்.

''இவ்வாறெல்லாம் பேராசை கொண்டு அலைப வர்கள் இறுதியில் தங்கள் நெஞ்சு புண்ணாவதையே

காண்பர். ஆனால் எல்லா வுயிர்களுக்கும் எளிதாக இயல்பாக நினைத்த மாத்திரத்தில் நடைபெறுவதென்பது பசி தீர உண்பது, படுத்து உறங்குவது ஆகியவைகளே ஆகும்.

"எனவே எனக்கு எதுவும் வேண்டா; உள்ளதே போதும். பார்க்கும் இடங்களில் எல்லாம் இடையீடின்றி நீயே எங்கும் நிலவுகின்ற ஆனந்த வடிவமே! நான் உன்னிடம் வேண்டுவது ஒன்றே ஒன்று ஆகும். அஃது என்ன என்றால், நான் 'யான்' என்ற செருக்கால் குழப்பம் அடைந்து, ஒன்றிலும் உறுதியில்லாமல், ஒன்றை விட்டு ஒன்றைத் தாவிப் பற்றிக்கொண்டு, 'பாசம்' என்னும் பேராசைக் கடலிலே வீழ்ந்து அமிழ்ந்து விடாமல் இருக்க வேண்டும். இதற்காக 'யான்' என்னும் செருக்கற்ற தூய நிலையை நீ எனக்கு அருள்வாயாக" என்று கேட்கிறார் தாயுமானவர். அவர்தம் அருமைத் திருப்பாடலைக் காண்போம்.

"ஆசைக்கோர் அளவில்லை; அகிலம்எல் லாம்கட்டி
ஆளினும், கடல் மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்

நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேஇனும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ஆவர் எல்லாம்

யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆகமுடியும்;
உள்ளதே போதும்; நான்நான் எனக்குளறியே
ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்

பாசக் கடற்குள்ளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்!
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம் அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே"

— பரிபூரணானந்தம் : 10

இவ்வாறு பேராசையினைப் பெயர்த்தெறிய வேண்டும் எனக் கடிந்து கூறும் தாயுமானவர் பிறிதொரு பாடலில் மக்களுக்கு அமைய வேண்டிய அரும்பண்புகளைச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஏட்டுக் கல்வி மட்டும் கற்று விட்டால் போதுமா? கற்றதனால் மட்டும் அறிவு வந்து விடுமா? கல்லாதவர்களிடமும் அறிவு உளதே! அவ்வறிவு அவர்கள் வாழ வழி காட்டி விடும் என்று கூறி விட முடியுமா? முடியாதன்றோ! கல்வியும் வேண்டும்; அதனோடு நல்லது இது. தீயது இது என்று எந்த ஒரு பொருளைப் பற்றியும் துணிந்தறிந்து உண்மை காணும் திறனும் வேண்டும். அடுத்து, கல்வி ஞானமும் அறிவு மேம்பாடும் மட்டும் இருந்து விட்டால் அஃது அமையாது. கேள்வி ஞானமும் கைவரப் பெற வேண்டும்.

'கற்றில னாயினும் கேட்க' என்பார் திருவள்ளுவர். 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' என்றும் குறிப்பிடுவார். நம் மனத்தில் எழும் ஐயப்பாடுகளைப் போக்குவதற்குக் கற்றுவல்ல அறிஞர்களோடு உரையாடி உண்மைத் தெளிவு பெற வேண்டும். கல்வி, அறிவு, கேள்வி ஆகிய மூன்றும் கைவரப் பெற்றோர், இளகிய நெஞ்சம் வாய்ந்தவராயிருக்க வேண்டும். பிற வுயிர்கள்மாட்டுக் கருணை காட்டாத கல்வி கேள்வியினால் சமுதாயம் எய்தும் பயன் தான் என்னை? எட்டி பழுத்த கதையாக, காட்டிலெரிந்த

நிலவாக அங்கணத்தில் உக்க அமிர்தமாக அன்றோ அஃதாகும். ஐந்து பெருங் குற்றங்கள்—பஞ்சமா பாதகங்கள் என்று, கொலை, களவு, காமம், பொய், கள்ளுண்ணலைக் குறிப்பிடுவர். இவ்வைந்து குற்றங் களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாகும். ஒருவரை ஒன்று முதற்கண் போய்ப் பற்றிக் கொண்டால் மற்ற நான்கும் அடுத்தடுத்து அணி அணியாகப் படை யெடுத்து அவரை ஆட்கொள்ளும். எனவே வாழ்வில் மானிடப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும் இந்த ஐந்து பெருங் குற்றங்களும் தம்மையணுகாமற் பார்த்துக் கொள்ளவேண்டும். வடமொழியாளர் இவற்றைப் 'புருஷார்த்தங்கள்' என்பர். அவையே அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அறத்தாற் பொருளீட்டி, அறவழியில் நின்று, இன்பந் துய்த்து இம்மையில் வாழ்பவனே, மறுமையில் வீட்டின்பம் பெற முடியும்; பிறந்த பிறவியின் பெரும்பயனை ஈட்ட முடியும். இவ் வாறாகத் தாயுமான தயாபரர் கல்வி நிரம்பி, அறிவு மேம்பட்டு, கேள்வி நிறைந்து, கருணை மிகுந்து, நோக்கம் நன்றாகி, ஐம்பெரும் பாசங்கள் களைந்து, அறத்தாற்றின் நின்று, பொருளீட்டி, இன்பந் துய்த்து, இறுதியில் வீட்டின்பம் பெறும் வகையினை வற்புறுத்தி நிற்கக் காணலாம்:

'' கல்லாத அறிவும், மேல் கேளாத கேள்வியும்
கருணை சிறிது ஏதும் இல்லாக்
காட்சியும் கொலைகளவு கள்காமம் மாட்சியாக்
காதலித் திடுநெஞ்சமும்

பொல்லாத பொய்ம்மொழியும் அல்லாது நன்மைகள்
பொருந்துகுணம் ஏதும் அறியேன்;
புருடர்வடி வானதே அல்லாது கனவிலும்
புருஷார்த்தம் ஏதும் இல்லேன்

எல்லாம் அறிந்தநீ அறியாததுஅன்று; எனக்கு
எவ்வண்ணம் உய்வண்ணமோ?
இருளை இருள் என்றவர்க்கு ஒளிதா ரகம்பெறும்
எனக்குநின் அருள்தாரகம்:

வல்லான் எனும்பெயர் உனக்குஉள்ள தே! இந்த
வஞ்சகனை ஆள நினையாய்!
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரும் மவுனகுருவே ”
—மௌன குரு வணக்கம் : 6

## 13. மதி மறந்தவர்

பாரத நாடு பழம்பெரும் நாடு. இந்நாட்டில் வாழும் மக்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே கடவுள் நம்பிக்கையோடு வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு மதங்களை - சமயங்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறு கடவுளர்களை வழிபட்டாலும் அவரவர் தம் வாழ்க்கையினை அமைதியோடு நடத்தி வருகிறார்கள். ஞானத்திலும் பரமோனத்திலும் நம் பாரத நாடு பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாரதியாரும் பாடினார்.

முதலாவதாக உமறுப் புலவரின் சீறாப் புராணக் கடவுள் வாழ்த்துப் பாடலை எடுத்துக் கொள்வோம். முதலில் அந்தப் பாட்டைத் தெளிவுற நோக்குவோம்:

'' சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனந்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.''

—சீறாப்புராணம்—கடவுள் வாழ்த்து.

இந்தப் பாடல் சீறாப்புராணப் பாடல் என்பது விளங்கும். இசுலாமியர்களின் ஒப்பற்ற பெரியோரான முகம்மது நபி அவர்களின் வரலாற்றைக் கூறுவது சீறாப் புராணமாகும். 'சீறத்' என்ற அரபுச் சொல்லே 'சீறா' என்று ஆனது. 'சீறத்' என்ற சொல்லுக்குப் 'புகழ்' என்பது பொருளாகும். தூய வாழ்க்கை வாழ்ந்து புகழ் எய்திய ஒருவரின் வரலாற்றை விளக்குவது சீறாப்புராண மாகும். எனவே சீறாப்புராணம் என்றால் பெரியார் புகழ் விளக்கும் பழைய வரலாறு என்று ஆகும். நபிகள் நாயகத்தின் பிறப்பு, வளர்ப்பு, வெற்றி, செய்தி முதலிய வற்றைக் கூறும் இந்நூலினைத் தமிழில் இயற்றிய புலவர் உமறுப்புலவர் ஆவர். இவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; எட்டையபுரத்து அரசவையில் இருந்த புலவருள் ஒருவர். இதே எட்டையபுரத்து அரசவையின் ஆதரவு பெற்றவர்தான் இந்த நூற்றாண்டின் முற்பகுதி யில் வாழ்ந்து மறைந்த பாரதியாரும். எனவே புலவர் களை வழிவழியாக ஆதரித்துப் போற்றிவந்த எட்டைய புரத்து அரசவை ஆதரவு பெற்ற புலவராம் உமறுப்புலவர் இயற்றிய சிறந்த நூல் சீறாப்புராணமாகும்.

இனிப் பாடலின் உள்ளே நோக்குவோம். முதலாவ தாக இந்தப் பாடலின் வணக்கத்திற்குரிய அல்லாவின் அருமைப் புகழ் பேசப்படுகின்றது.

சிறந்த மெய்ப்பொருள் : உலகில் பொருள்கள் பல உள்ளன. பொருள் என்றால் பொதுவாகப் பணத்தைக் குறிக்கும். இந்தப் பணம் இந்த உலக வாழ்க்கைக்கு மிகவும் வேண்டப்படுவதாகும். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார் திருவள்ளுவர். ஆனால் இந்தப் பொருளாகிய செல்வம் உண்மையான செல்வ மாகுமா? நிலையாக நிலைத்திருக்கும் பொருளாகுமா? அழியாத பொருளாகுமா என்றால் இல்லை என்று கூறி

விடலாம். 'ஆறிடும் மடுவும் போல் ஆம் செல்வம்' என்பர் பெரியோர். யாரிடமும் செல்வம் நிலைத்து நிற்பதில்லை. செல்வம், 'செல்வோம்' என்று கூறி ஒருவரிடமிருந்து போய்விடுகிறது. எனவே அதனை மெய்யான பொருளாகச் சொல்ல முடியாது. இது போன்றே உலகில் நாம் காணும் ஒவ்வொரு பொருளும் அழியக்கூடிய தன்மை உடையதாகும். ஏன்? மனிதர் களையே எடுத்துக் கொள்வோமே!

" நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்துஇவ் வுலகு " —திருக்குறள் : 836

என்று திருவள்ளுவர் கூறுவது போன்று நேற்றைக்கு இருந்தவர் இன்றைக்கு இல்லை. இதேபோன்று 'இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பார் என்று எண்ணவே சதமில்லை நெஞ்சே' என்று கூறுவர் அனுப வப்பட்ட பெரியவர்கள். எனவே இந்த உலகில் மெய்ப் பொருளாகக் கருதத்தக்கது இறைவன் என்ற ஒரு பேரருள் பெருந்திறத்தையேயாகும். மெய்ப்பொருள் களுக்கு எல்லாம் சிறந்த மெய்ப்பொருளாக விளங்குபவர் ஒப்பற்ற உயரிய கடவுளாவர். எனவே உமறுப்புலவர் இறைவனை முதலில் 'சிறந்த மெய்ப்பொருள்' என்றார்.

அடுத்து ஆண்டவனை 'அழிவிலா மணியை' என்றார். மணிகள் பலவகைப்படும். மாணிக்கம், வைரம், வைடூரி யம், கோமேதகம், புட்பராகம் முதலியனவெல்லாம் மணிகள் என்று கூறப்படும். இவற்றைச் சேர்க்க வேண்டும் என்பதில் அன்றிலிருந்து இன்றுவரை மனிதனின் முயற்சியும் ஆசையும் குறைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இப்படிப் பாடுபட்டுச் சேர்க்கும் இவ்விலையுயர்ந்த மணிகள் அழியாத தன்மை வாய்ந்த னவா என்றால் அதுதான் இல்லை. அழிவிற்கு ஆளாகும் இம்மணிகள் மனிதனை ஆட்டி அலைக்கழித்து

மனித மனத்தின் அமைதியையே அழித்துவிடுகின்றன. எனவே கடவுள் ஒருவர்தான் அழிவிலாத மணியாக நின்று மனிதனின் மனத்தில் அமைதியெனும் நிலையினை அருளுகின்றார்.

மூன்றாவது தொடர் 'தெரிந்து முக்காலமும் உணர்ந்து துறந்தவர் இதயாசனத்து இருந்தவனை' என்பதாகும்.

வாழ்க்கையில் ஒருவரைத் தெரிந்து கொள்வது வேறு; உணர்ந்து கொள்வது வேறு. தெரிந்து கொள்வது என்பது மேற்போக்கான அறிமுகமாகும். கண்ட மாத்திரையில் ஒருவரைத் தெரிந்துகொள்ள முடியும்; ஆனால் அவரோடு நெருங்கிப் பலமுறை பழகினால்தான் அவரை உணர்ந்து கொள்ள முடியும். அதுவும் உணர்ச்சியோடு அளவளாவி நெருங்கிப் பலமுறை பழகிய பின்னரே ஒருவரை உள்ளவாறு உணர்ந்து கொள்ள முடியும். எனவே உணர்தல் என்பது ஆழ்ந்த பொருளைத் தருகின்றது. இந்த உலகத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றார்கள். அதாவது நல்ல பெரியவர்கள் - சான்றோர்கள் - தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெரியோர்கள் வாழுகின்ற காரணத்தினால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது - நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் சங்ககாலப் பாண்டிய மன்னன் ஒருவனும் பாடிவிட்டுப் போயுள்ளான்.

இத்தகைய பெரியவர்கள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று காலங்களையும் முற்ற அறிவார்கள். நமக்கு இறந்த காலத்தில் நடந்தவை தெரியும்; நிகழ்காலத்தில் நடைபெறுவதை ஓரளவு அறிவோம்; ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கவிருக்கின்றது என்பது ஓரளவும் தெரியாது.

ஆனால் எப்பொருளையும் தெரிந்து வாழ்க்கையின் பரந்துபட்ட அனுபவத்தால் முக்காலங்களையும் முறைப் பட உணர்ந்த பெரியோர்கள் இந்த உலகின் நிலையற்ற தன்மையை யறிந்து இந்தவுலக இன்பங்களைத் துறந்து நிற்பர். திருமூலர் என்ற சான்றோர் இந்த உலக இன்பங்களின் தன்மையினை ஒரே பாட்டில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

''அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரோடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே'

—திருமந்திரம்: 148

தம் மனைவியிடம் அறுசுவையோடு கூடிய நல்ல உணவினை ஆக்கச் சொன்னார் ஒரு வீட்டின் தலைவர். ஆருயிர் மனைவி அருமையாகச் சமைத்த உணவினை இனிதாக உண்டு மகிழ்ந்தார். பின்னர் மனைவியோடு இன்பப் பேச்சுகள் பேசிக் கொண்டிருந்தார். அப்போது இடப் பக்கத்தே சிறிது நோவு எடுக்கின்றது என்றார், அவ்வளவு தான்! சிறிது நேரத்தில் இவர் வாழ்வு முடிந்து விட்டது. இவ்வாறு திருமூலர் இவ்வுலகில் உயிர்களின் நிலையாமையினை நம் நெஞ்சில் தைக்கும்வண்ணம் சொல்லுகின்றார்.

எனவே உலக வாழ்க்கையின் இயல்பினைக் கண்ட வர்கள் இவ்வுலக இன்பங்களைத் துறந்து வாழ்வார்கள்.

இவ்வாறு துறந்தவர்தம் மனமாகிய இருக்கையிலே இறைவன் நிச்சயமாகக் கோயில் கொண்டு வாழ்கின் றான். இதனை நன்கு உணர்ந்தே திருமூலர், 'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்' என்றும், தாயுமான தயாபர சுவாமிகள்,

'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்—அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே'
—பராபரக் கண்ணி: 151

என்றும் பாடினர். வடலூர் வள்ளற்பெருமானார் நம் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்,

'பொய்வந்த உள்ளத்திற் போகாண்டி—அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி'

என்று இறைவன் பொய்யுள்ளத்திற் புகாத நிலையினைப் பொருத்தமுறப் புகன்றுள்ளார்.

அடுத்து, இறைவனைத் 'தொடர் இன்ப துன்பம் அற்றவன்' என்று உமறுப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உலகில் நன்மை தீமை என்ற இரண்டும் உண்டு. பாவ புண்ணியங்களே நம்மைத் தொடர்ந்து வருகின்றன என்பர். இருளும் ஒளியும், உண்மையும் இன்மையும், இன்பமும், துன்பமும் இவ்வுலகில் எந்நாளும் உண்டு. மனித மனம் இன்பத்தையே ஏங்கி நாடி அலைகின்றது. துன்பம் வருமானால் தாங்கிக்கொள்ளும் ஆற்றலின்றிக் கலங்குகின்றது. ஒவ்வொருவர் வாழ்விலும் இன்ப துன்பங்கள் தொடர்ந்து வருகின்றன. ஆனால் இறைவனோ இன்ப துன்பங்களைக் கடந்தவன்; வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்; இன்புறு சோதியாக இணையற்று விளங்குபவன், எனவே இன்ப துன்பங்கள் இறைவனை ஒருநாளும் ஆட்டி அலைக்கழிப்பதில்லை.

அடுத்து, 'பிறந்த பல்லுயிரின் மனத்தளவுறைந்து பிறப்பிறப் பென்றிலா தவனை!' என்றார் உமறுப் புலவர்.

இவ்வுலகில் எண்ணற்ற உயிர்கள் பிறக்கின்றன; வளர்கின்றன; வாழ்கின்றன; இறுதியில் மடிந்து முடி

கின்றன. தோற்றம் என்பது ஒன்று உண்டென்றால் மறைவு என்பது ஒன்றும் உண்டு. இறைவனோ தோன்றிய உயிர்களில் எல்லாம் உறைகின்றான். 'இறை' என்ற சொல்லிற்கே 'தங்குதல்' என்பது பொருள். இறைவன் தான் தோற்றுவித்த—படைப்பித்த எல்லா உயிர்களிலும் தங்கி உறைகின்ற காரணத்தினால்தான் 'இறைவன்' என்று வழங்கப்படுகின்றான். 'மனத்தளவு உறைந்து' என்றால் 'மனமாகிய எல்லையில் தங்கி' என்பது பொருளாகும். தாயுமானவரும் பார்க்கின்ற மலரில் எல்லாம் பரமனே உறைவதாகவும், எனவே தாம் அப் பனி மலரைப் பறிக்கவும் உள்ளங் கூசுவதாகவும் பாடியுள்ளார்.

பிறப்பு இறப்பு என்ற இந்த இரண்டும் உலகின் எல்லாவுயிர்க்கும் வருவனவாகும். ஆனால் இறைவனோ எனில் பிறப்பும் இறப்பும் இல்லாதவனாவன். இதனையே திருவாசகம் தந்த மணிவாசகப் பெருந்தகையார், ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி என்றார். சிட்டுக் குருவிக்கும் சிவபெருமானுக்கும் சிலேடையாகப் பாட வேண்டும் என்று ஒரு புலவரைக் கேட்க அவர் பிறப்பிறப்பில் என்றார். இத் தொடர் சிட்டுக்குருவிக்கு எவ்வாறு பொருந்துகின்றது, என்று பார்ப்போம். சிட்டுக் குருவிக்குப் பிறப்பு இறப்பில்—அதாவது வீட்டின் இறவாணத்தில் ஆகும். சிட்டுக் குருவி இறவாணத்தைத் தானே பிறக்குமிடமாகக் கொள்கிறது. இத் தொடர் ஆண்டவனைக் குறிக்கும்பொழுது பிறப்பு—இறப்பு—இல்—இல்லாதவன் என்று ஆகும். வடலூர் வள்ளலார் இறைவன், "பிறப்பும் வளர்ப்பும் இல்லாதவன்; அவன் அருட்பெருஞ்சோதியன்; சாதி சமயச் சண்டை வேண்டா. சன்மார்க்க நெறி நடப்போம். வாரீர்" என்று உலகவரை நோக்கி அறைகூவல் விடுக்கின்றார். அப் பாடலைக் காண்போம்!

'ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் சோதியென் னுளத்தே
நீதியிற் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்த்தே
சத்திய சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே.'

இது மட்டும் அல்ல: ஒவ்வொரு சமயத்தவரும் ஒவ்வொரு பெயர் கூறி ஒவ்வொரு கடவுளை வணங்கி வழிபட்டாலும் தெய்வம் ஒன்று என்பதே பெரியோர்கள் கண்ட உண்மையாகும். திருநாவுக்கரசர், 'கடவுள் ஒருவரே தான்; பல கடவுள்கள் இல்லை; ஒரே கடவுள் தான். தம் பேராற்றலால் கடவுள் உலகைப் படைத்துள்ளார். அந்த ஒரே கடவுளே பல வடிவங்களில்—பல பெயரில். காட்சி தருகின்றார்; பல செயல்களைச் செய்து வருகின்றார். படைத்தல்,காத்தல் அழித்தல் ஆகிய 'முத்தொழில்களையும் சிறப்பாகச் செய்து வருகின்றார்" என்று குறிப்பிடுகின்றார் பண் சுமந்த பாடலைக் காண்போம்:

" நாதனாய் உலகம் எல்லாம் நம்பிரான் எனவும்நின்ற
பாதனாம் பரமயோகி பலப்பல திறத்தினாலும்
பேதனாய்த் தோன்றினானைப் பெருவேளூர் பேணினானை
ஓதநாவுடையன் ஆகி உரைக்குமாறு உரைக்கின்றேனே "
—திருநாவுக்கரசர் தேவாரம் :579.
(திருநேரிசை-நான்காந்திருமுறை-திருப்பெருவேளூர்)

இத்தன்மை வாய்ந்த இறைவனை 'மறந்தவர் சுவர்க்கப் பதியையும், மறத்து மண்ணில் மதிமறந்தவரே' என்கிறார் உமறுப் புலவர்.

நம்மை வாழச் செய்யும் இறைவனை நினைத்து வணங்கி வாழ்தலே முறையாகும்.

" பெற்றதாய்தனை மறந்தாலும்
பிள்ளையைப்பெறுந் தாய்மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர்மறந்தாலும்
உயிரைமேவிய உடல்மறந்தாலும்
கற்றநெஞ்சகம் கலைமறந்தாலும்
கண்கள்நின்று இமைப்பதுமறந்தாலும்
நற்றவத்துள் ளிருந்தோங்கும்
நமசிவாயத்தை நான்மறவேனே "

என்கிறார் இராமலிங்க சுவாமிகள். பெற்ற தாயைப் பிள்ளை மறந்தாலும், பிள்ளை தாயை மறந்தாலும், உடலை உயிர் மறந்தாலும், உயிரை அதனோடு பொருந்தியிருக்கின்ற உடல் மறந்தாலும், அரும்பாடுபட்டுக் கற்ற கல்வியை மனம் மறந்து போனாலும், எப்போதும் இமைக்கும் கண்கள் இமைக்க மறந்தாலும் உடலுக்குள்ளே உயிருக்குள்ளே உயிருக்கு உயிராய் உறையும் இறைவனை மறக்க மாட்டேன் என்கிறார் வடலூற் பெருமானாகிய வள்ளலார்.

இறைவனைத் தன் முனைப்பால்—தான் என்ற கர்வத்தால்—செல்வச் செழிப்பால்—இன்ப துன்ப வாழ்வால் மறந்தவர் இறைவன் உறையும் மோட்ச வுலகத்தையும் மறந்து, தாம் வாழும் மண்ணுலகத்தையும் புத்தி மயங்கி புன்மையாலே மறந்தவர் ஆவார்கள் என்று உமறுப்புலவர் அழுத்தமாக அறிவுறுத்துகின்றார்.

நினைப்பவர் மனமே கோயிலாகக் கொண்ட இறைவன் ஒருவனே.

'எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென்று அறியீர்'

என்ற இராமலிங்க சுவாமிகள் திருவாக்கினை நோக்குவோமாக.

மேலும் வணக்கத்திற்குரிய மகம்மது நபிகள் நாயகம் அவர்கள் இந்நிலவுலகத்திற்கு வழங்கிய செய்தியாகத் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் குறிப்பிட்டுள்ள பாடல் வருமாறு:

'அரபிய நாட்டில் தோன்றி
ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த
மகம்மது நபியே! போற்றி!
தரையினிற் பொய்மை மல்கிச்
சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த
கருணையே! போற்றி! போற்றி!'

—திரு. வி. க.

இதுகாறும் கூறியவற்றால் உமறுப்புலவர் கூறும் கடவுள் வாழ்த்துப் பாடலின் கருத்தினை ஒருவாறு உணர்ந்து கொண்டோம். இறைவன் ஒருவன்; அவன் பிறப்பு இறப்பு அற்றவன்; அவனை வணங்கி வாழ்வதே இவ்வுலக உயிர்கள் உய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல் என்பதனை இப்பாடல் வழியே நாம் பெற்றோம்.

இசை வடிவான இறைவனை இசையோடு பாடி, வணங்கி வாழ்வோமாக!

## 14. ஒருமை உணர்வு

'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று நாட்டு மக்களால் நயமுறப் பாராட்டப்பெறும் பாரதியார், விடுதலை வேட்கை வெறிகொண்ட ஓர் ஒப்பற்ற கவிஞராவர். இந்திய நாட்டின் இணையிலாத விடுதலைப் போராட்டத்தில் வீறுடன் பங்குகொண்ட நாட்டுப்பற்று நிறைந்த நல்ல கவிஞர். அவருக்குத் தாம் பிறந்த தாய் நாடாம் இந்தியத் திருநாட்டை எண்ணிப் பார்க்கும் பொழுதெல்லாம் ஒரு பெருமித உணர்ச்சி தோன்றுவதனைக் காணலாம்.

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ"

என்று 'நாட்டு வணக்கம்' பாடுகின்றார் கவிஞர். நாட்டின் உயர்விற்கு நற்காரணமாய்த் துலங்கும் நங்கையர் புகழையும் நெஞ்சினிக்கப் பாடுகின்றார் பாரதியார்.

"..........எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினிலாடிக்
களித்தது மிந்நாடே"

என்கிறார்.

'மன்னுமிமய மலையெங்கள் மலையே' என்றும், 'மாநில மீதது போற்பிறிதிலையே' என்றும், 'இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே' என்றும், 'இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே' என்றும் பரவசத்துடன் பாடும் பாரதி,

"பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரா னருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிங்கதை யெமக்கிலை யீடே"

என்றும் பாடிப் பாடிப் பெருமிதம் கொள்கிறார்.

மேலும் சத்ரபதி சிவாஜி, தன் சைனியத்திற்குக் கூறியதாக அவர் எழுதும் பாடலில்,

"பாரத பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற்றாதீர்"

என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடுகின்றார்.

'புன்னாக வராளி' ராகத்தில் அமைந்த 'பாரத தேசம்' என்ற பாடலில் பாரதியின் நாட்டு ஒருமைப் பாட்டுணர்ச்சி தெளிவுறத் திகழ்வதனைக் காணலாம்.

சிந்து நதியில் நல்ல நிலாக்காலத்தில் ஒரு தோணி ஓடுகிறது. அத் தோணியில் சேரநாட்டுப் பெண்ணோடு

தமிழ்நாட்டு இளைஞன் அமர்ந்துள்ளான். இருவரும் சுந்தரத் தெலுங்கிற் பாட்டிசைக்கின்றார்கள். நாட்டின் வடக்கே சிந்து நதி; கீழ்க்கோடியில் கேரளம்; அதனை யடுத்துத் தமிழ்நாடு; அதனையும் அடுத்து ஆந்திரா - இந்த நான்கு நாடுகளையும் ஒருங்கிணைத்து ஓர் உற்சாகப் பாடல். இம்மட்டோடு நிற்கவில்லை பாரதி. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டத்தினைக் காவிரி வெற்றிலைக்குப் பண்ட மாற்றுச் செய்து கொள்வோம் என்கிறார். சிங்க மராட்டியரின் சீர்சால் கவிதைகளுக்குச் சேரநாட்டுத் தந்தங்களைப் பரிசளிப்போம் என்றும், காசிநகர்ப் புலவர் பேசும் உரைதனைக் காஞ்சி மாநகரிற் கேட்பதற்கு ஒரு கருவி செய்வோம் என்றும் உரைக்கிறார். இராசபுதனத்து வீரர்தமக்குக் கன்னடத்துத் தங்கத்தை வழங்குவோம் என்று கூறி மகிழ்கிறார் பாரதி. சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைத்துச் சேதுவை மேடாக்கி வீதி சமைத்து இரு நாடுகளுக்கிடையே நல்லுறவுப் பாலத்தை நட்புறவுப் பாலத்தை அமைப்போம் என்கிறார். வங்க நாட்டில் ஆற்று நீர்ப் பெருக்கின் மிகுதியைத் திருப்பிவிட்டு நீர்வளம் குறைந்த மையத்து நாடுகளிற் பயிர் செய்வோம் என்கிறார்.

''முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்''

என்றும்,

''முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொதுஉடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை''

என்றும் பாரதி, 'பாரத நாடு' என்னும் வீணையில் 'ஒருமைப்பாடு' என்னும் கீதத்தினை இனிமையுற இசைக்கின்றார்.

'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்' என்றும், 'இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே' என்றும் கூறிக் கல்விச் செல்வம் பொருட் செல்வம் இரண்டனையும் பெற்று ஆண்களும் பெண்களும் ஏன்? மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோர் என்கிறார் எட்டையபுரம் தந்த எழிற்கவிஞர் பாரதியார்.

''எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாருமோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

என்று அழுத்தந் திருத்தமாக மூன்று முறை முழங்குகின்றார் பாரதி.

''ஒன்று பட்டாலுண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்''

என்று நாட்டு மக்களின் ஒற்றுமையினை வற்புறுத்தும் கவிஞர்,

''எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்தநிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வேம்—வீழில்
முப்பதுகோடி முழுமையும் வீழ்வேம்''

என்றும் குறிப்பிடுகின்றார்.

தாயின் மணிக்கொடியின் கீழ்ச் செந்தமிழ் நாட்டுப் பொருநரும், சேர நாட்டு வீரர்களும், சிந்தை துணிந்த தெலுங்கர்களும், தாயின் சேவடிக்கே பணிசெய்திடு துளுவர்களும், கன்னடியர்களும், ஒட்டியராம் ஓரியாக் காரர்களும் 'போரிற் காலனும் அஞ்சக் கலக்கும்' மராட்டியர்களும் 'பொன்னகர்த் தேவர்களொப்ப நிற்கும் பொற்புடையராம்' இந்துஸ்தானத்து மல்லர்களும், ராஜபுத்ர வீரர்களும், பஞ்சநதத்துப் பிறந்தோர்களும், 'துஞ்சிய பொழுதினும் தாயின் பதத்தொண்டு நினைத்திடும்' வங்கத்தினரும் ஒன்றாகச் சேர்ந்து நின்று, தாயின் மணிக் கொடியைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திடும் அற்புதக் காட்சியின் மாட்சியினையும் பாடுகிறார் பாரதியார்.

இவ்வாறு பாரதியார், பாரத நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு - ஒருமைப்பாட்டுச் சிந்தையுடன், பாரதத் தாயின் திருப் புதல்வர்கள் என்ற வீறார்ந்த பெருமையுடன் வாழ வேண்டும் என்பதனைச் சித்திரித்துக் காட்டி நிற்பதோடு, சேதமில்லாத இந்துஸ்தானத்தில் பேதமில்லாமல் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒருங்கிணைந்து வாழும் மாட்சியினை - பாரத நாட்டின் ஒருமைப்பாட்டினைப் பண்போடும் பயனோடும் குறிப்பிடுகின்றார்.

# 15. அண்ணலின் அருட் சிந்தனைகள்

## 1

உலகப் புகழ் பெற்ற உயர்ந்த தலைவர்கள் மிகச் சிலருள்ளும் சிறந்தவராகத் திகழ்பவர் 'நாட்டின் தந்தை' என நம்மால் அன்புடன் அழைக்கப் பெறும் காந்தி யடிகள் ஆவர்.

அன்னை பாரதம் பெற்ற பிள்ளையுள் அண்ணல் காந்தியடிகளே முதல் பிள்ளை; பரந்த பூமியும் விரிந்த வானுமே சிறந்த அவருடைய புகழ் எல்லை.

அவர்தம் உலகப் புகழுக்குக் காரணமாக விளங்கு வதே அகிம்சைக் கொள்கை. ஆயுதப் புரட்சியின் காரணமாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கு உதாரண மாக எத்தனையோ நாடுகளைக் காட்ட முடியும். அன்பில்—அகிம்சையில் இன்ப சுதந்திரம் அடைந்த நாடு இந்தியா ஒன்றாகத்தான் இருக்கமுடியும். அப்பெருமை யைப் பெற்றுத் தந்த மகாத்மாவே காந்தியடிகள்.

வன்முறை வெறியாட்டங்கள் மூலமே சுதந்திரம் பெற முடியும் என்று கூறிய மற்றவர்களுக்கு அன்பு வழியைக் காட்டினார். அந்நியராம் ஆங்கிலேயர் மனம் என்னும் பாறையில், இந்தியாவின் சுதந்திரம் என்னும் உரிமைச் சிற்பத்தை வடிக்க அவர் எடுத்துக் கொண்ட உளி, அன்பு

என்னும் சிற்றுளியாகும். அகிம்சை என்பதை விளக்க வந்த காந்தியடிகள், "அக்கிரமத்துக்கு எதிரான உண்மைப் போராட்டத்திலிருந்து அடியோடு விலகியிருப்பதுதான் அகிம்சை என்று கூறுவது சரியல்ல. இதற்கு மாறாக என் கருத்தின்படி அமைந்த அகிம்சையானது அக்கிரமத்துக்கு எதிராக உள்ள அதிதீவிரமான உண்மையான போராட்டமாகும்" என்று விளக்கியிருக்கிறார்.

அகிம்சை கோழைகளின் ஆயுதம் என்பதைக் காந்தியடிகள் உறுதியுடன் மறுக்கிறார்.

> "என்னுடைய அகிம்சைக் கோட்பாடு, மிகுந்த வீரியம் வாய்ந்த சக்தியாகும். கோழைத் தனத்திற்கோ, பலவீனத்துக்கோகூட, அதில் இடமில்லை"

என்கிறார் அவர்.

விவேகானந்தர் ஒருமுறை புகைவண்டியில் பயணம் சென்றபோது, அவருடைய இளமையையும், துறவுத் தோற்றத்தையும் அருகிலிருந்த இருவர், ஆங்கிலத்தில் பரிகசித்தவண்ணம் உரையாடி வந்து கொண்டிருந்தனர். விவேகானந்தர் ஆங்கிலம் அறிந்திருக்க மாட்டார் என்பது அவர்களின் நினைப்பு. அவர்களின் வசை மொழிகளைக் கேட்டும் கேளாதவராய் வந்த விவேகானந்தர், ஒரு நிலையத்தில் வண்டி நின்றதும் அங்கிருந்த நிலைய அதிகாரியிடம் "குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்று ஆங்கிலத்தில் கேட்டாராம். அதனைக் கவனித்துக் கொண்டிருந்த அவரைப் பரிகசித்த இருவரும், விவேகானந்தரின் பொறுமையைப் போற்றி, தம்மை மன்னிக்குமாறு வேண்டிய நிகழ்ச்சியை, விவேகானந்தர் வரலாறு

வாயிலாக அறிந்துள்ள எவரும், இம்சைவாதிகளையும் வெற்றி கொள்வது அகிம்சை என்பதை அறிந்துகொள்ள முடியும்.

காந்தியடிகளும், "மிருகத்தனத்தை மிருகத்தனத்தால் ஒருவர் எதிர்ப்பது தம்மிடம் ஒழுக்கமும் அறிவும் இல்லை என்று ஒப்புக்கொள்வதாகும். பலாத்காரத்தைவிட அகிம்சை மிக மிக உயர்வானது. தண்டிப்பதைவிட மன்னிப்பதில் அதிக ஆண்மை இருக்கிறது. மன்னிப்பது போர் வீரனுக்கு அணிகலன். ஆனால் தண்டிக்கும் சக்தி இருக்கும்போது தண்டிக்காமல் இருப்பதுதான் உண்மையான மன்னிப்பு. கையாலாகாத ஓர் உயிர் மன்னிப்பதாக நடிப்பதில் அர்த்தமில்லை" என்று கூறியுள்ளார்.

சிறு வயதில் வீட்டில் பெற்றவர்களுக்குத் தெரியாமல் காசுகளைத் திருடியும், மாமிசம் உண்டும் காந்தியடிகள் செய்த தவறுகளைத் தண்டித்துத் திருத்தாமல், மன்னித்து மாற்றிய அவர்தம் தந்தையின் அகிம்சையன்றோ, காந்தியடிகளை அகிம்சா மூர்த்தியாக்கியது!

பலாத்காரத்தின் துணையால் வீளையும் பயன் நிரந்தரமாக இருக்க முடியாது என்பதனாலேயே, காந்தியடிகள் அகிம்சையை வற்புறுத்திக் கூறியுள்ளார்.

"பலாத்கார அஸ்திவாரத்தின் மீது சாசுவதமான எதையும் நிருமாணிக்க முடியாது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. பலாத்காரம் நன்மை தருவதாகத் தோன்றினாலும் அது அளிக்கிற நன்மை தற்காலிகமானது. அது செய்கிற தீமையோ நிரந்தரமானது. அதனால்தான் பலாத்காரத்தை நான் ஆட்சேபிக்கிறேன்."

தேவருலகத்து தேவாமிர்தமே கிடைப்பதாக இருந்தாலும் அஃது இனிமை தரத்தக்கதென்று கருதித் தாங்களாகவே தனித்துச் சாப்பிட்டுவிட மாட்டார்கள். தாங்கள் மேற்கொண்ட வினையில் சோர்வுற மாட்டார்கள். பிறர் அஞ்சுவதற்கு அஞ்சுவார்கள். எப்போதும் பிறர்க்கென வாழும் பெருமனம் உடையவராய் வாழ்வார்கள். இத்தகையோர் வாழுகின்ற காரணத்தால் தான் இந்த உலகம் இடையறாது இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த தமிழகத்தில் வாழ்ந்த கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற மன்னன் பொருத்தமுறப் புகன்றான்.

"உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

—புறநானூறு: 182.

இத்தகைய நல்லோர்—பிறர்க்கென நம் காலத்தில் வாழ்ந்த பெரியவர், நாட்டுத் தந்தை காந்தியடிகள் ஆவார்.

## 2

'புவியினில் தருமம் காத்திடத் தெய்வம் பலமுறை பிறக்கும்' என்று கூறுவர். புத்தர், ஏசு இவர்களைப்

போல அறத்தைக் காத்திடப் பிறந்தவராகிய அண்ணல் காந்தியடிகளும் 'மாந்தருள் ஒரு தெய்வம்' ஆவர்.

காந்தியடிகள் வறுமையை ஒழிக்க வற்புறுத்திய கொள்கைகளுள் ஒன்று தர்மகர்த்தாப் பொதுவுடைமைக் கொள்கை.

''பணக்காரர்கள் தங்களிடம் உள்ள அதிகப்படியான செல்வத்துக்குத் தர்மகர்த்தாக்கள் தாம் என்பது சமத்துவ வினியோகம் என்ற இந்தச் சித்தாந்தத்தின் ஆணி வேராகும்'', என்று கூறியுள்ளார் காந்தியடிகள்.

> ''இதன்படி பணக்காரரின் செல்வம் அவரிடமே இருக்கும். தம்முடைய நியாயமான சொந்தத் தேவைக்கு வேண்டிய அளவுக்கு அதிலிருந்து அவர் உபயோகித்துக்கொள்வார். எஞ்சியதற்கு அவர் . தர்மகர்த்தாவாக இருந்து அதைச் சமூகத்துக்கும் பயன்படுத்துவார். தர்மகர்த்தாவிடம் நேர்மை இருக்கும் என்ற ஊகத்துடன் இந்த வாதம் கூறப்படுகிறது''

என்று தம் தர்மகர்த்தாப் பொதுவுடைமைக் கொள்கையை விளக்கிக் கூறியுள்ளார் அவர்.

செல்வத்தின் பயன் யாது? என்ற வினாவிற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விடை கூறிய நக்கீரனார், ''செல்வத்துப் பயனே ஈதல்'' என்று அழகுறச் சொன்னார்.

கடலால் சூழப்பட்ட உலகம் முழுவதையும் உரிமையுடையவனாய் ஆளும் வேந்தனுக்கும், இரவும் பகலும் உறக்கமின்றி விலங்குகளை வேட்டையாடி வாழும் வேடுவனுக்கும், உண்ணத் தேவையானது நாழி அரிசி. அதுபோல் உடுக்கத் தேவையானதும் இரண்டாடைகள். பிற

தேவைகள் அனைத்துங்கூட எல்லோருக்கும் ஒரே தன்மையனவே ஆகும். ஆகையினால் செல்வத்தாற் பெறும் பயனாவது கொடுத்தல். கொடாமல் செல்வம் முழுவதும் கொண்டவரே துய்ப்போம் எனக் கருதினால் கேடுகள் மிகப் பல உண்டாகும்'' என்று அன்று நக்கீரர் அறிவுறுத்திய அதே அறத்தைத்தான் அண்ணல் காந்தி யடிகளும் அறிவுறுத்தக் காண்கிறோம்.

''தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே''

—புறநானூறு : 189

''கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்க ஆட்சேபணை இல்லை. ஆனால் உங்கள் சொத்து உங்களுடையது அல்ல, மக்களுக்குச் சொந்தமானது என்பதைத் தெரிந்துகொள் ளுங்கள்; பாக்கியைச் சமூகத்துக்குப் பயன் படுத்துங்கள்''

என்று கூறியுள்ள காந்தியடிகள், அவ்வாறான அறிவுரை யைச் செல்வர்கள் நடைமுறைப் படுத்தாவிடில் நேர்வது என்ன என்பதையும் கூறியுள்ளார்.

''செல்வத்தையும் அந்தச் செல்வம் தருகிற அதிகாரத்தையும் தம்மிச்சையாகப் பொதுநல னுக்குக் கொடுத்துப் பகிர்ந்து கொள்ளாவிடில்

பலாத்கார, இரத்தக் களரிப் புரட்சி என்றாவது ஒரு நாள் ஏற்பட்டே தீரும்''

என்பது அவருடைய எச்சரிக்கை.

''அனுபவம் ஒன்றே பொன்னால் ஆய நற்பயன்'' என்று கூறியுள்ள வேதநாயகம் பிள்ளை அவர்கள், ''நல்ல பழங்களைத் தாமே தராமல், வானளாவி உயர்ந்துள்ள மரங்களைக் கல்லாலும் கழியாலும் எறிந்து பழங்களைக் கொள்வதைப் போல, ஏழைகட்கு வழங்காது வாழ்கின்ற செல்வர்களின் பொருள், மிக்க பசியுள்ளவரால் வன்முறை யால் பறிக்கப்படும்'' என்று தம் நீதி நூலில் கூறி யுள்ளார்.

''தானற்கனி சிந்தாதுயர் தருவைச்சிலை கழியாமல்
ஊனப்பட மோதிப்பழம் உதிர்ப்பாரென வுலகில்
தீனர்க்குவ ழங்காதுறை தீயன்பசி யுளரால்
மானத்தையி ழந்தேபொருள் வவ்வப்படு வானே''

—நீதிநூல்; கடும்பற்று; 12

பலாத்கார இரத்தக் களரிப் புரட்சி ஏற்பட்டே தீரும் என்ற காந்தியடிகள், அப்புரட்சியை ஆதரிப்பவர் அல்லர். வறுமையை ஒழித்திடும் முயற்சியிலும் அகிம்சையைத் தான் அவர் வலியுறுத்தியுள்ளார்.

''எவ்வளவோ முயன்று பார்த்தும், பணக்காரர் கள் உண்மையாகவே ஏழைகளின் கார்டியன் களாக மாறாமல், ஏழைகள் மேலும் மேலும் நசுக்கப்பட்டுப் பட்டினி கிடந்து சாக நேரிட் டால் என்ன செய்வது? இந்தப் புதிருக்கு விடை தேட முயலும்போது நான் ஒரு மார்க்கத்தை அறிந்து கொள்ள நேர்ந்தது. அகிம்சா பூர்வ மான ஒத்துழையாமையும் சட்ட மறுப்பும்தான் சரியான, தோற்க முடியாத அந்த மார்க்க

மாகும். சமூகத்தில் உள்ள ஏழைகளின் ஒத்துழைப்பு இல்லாமல் பணக்காரர்களால் செல்வந் திரட்ட முடியாது.''

என்று அங்கேயும் அகிம்சை வழியையே வழிகாட்டுகிறார்.

'இந்த வையத்து நாட்டில் வாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ் பட்டு நின்ற தாமோர் பாரத தேயந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதியார், நாட்டுக்கொரு தந்தை அண்ணல் காந்தியடிகளை அன்றே நலமுறப் புகழ்ந்து பாடியுள்ளார். அண்ணலின் வாழ்வு நாட்டுக்கெனத் தம் உடல், பொருள், உயிர் அனைத்தையும் அர்ப்பணித்த—அறவழிப்பட்ட தியாக வாழ்வாகும்.

''வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீவாழ்க! வாழ்க!''

—மஹாத்மா காந்தி பஞ்சகம்

## 3

''மக்களுக்காக வாழ்பவர் எல்லாம் நிலைபெறும் தலைவர்களே; மதிப்பினுக்காக அலைபவர் எல்லாம்

விலைபெறும் கூலிகளே'' என்று பாடியுள்ளார் ஒரு கவிஞர். இந்திய நாட்டின் விடுதலைக்கு தம்மை அர்ப் பணித்துக் கொண்ட காந்தியடிகள், சுதந்திர இந்தி யாவில் சாதாரன பதவியையும் விரும்பாமல் மக்களுக் காக உழைத்தார். மத இன வேற்றுமைகளைப் போக்கப் பாடுபட்டார். தன்னலமற்ற அத்தகு மேன்மைத் தொண்டின் காரணமாகவே அவர் என்றும் மக்களின் தலைவராக இருக்கின்றார்.

''ஒரே இலக்கில் வந்து சேர்கின்ற பல்வேறு சாலைகள் தாம் மதங்கள்...ஒரே தண்டைக் கொண்ட மரத்தில் பல கிளைகளும் இலைகளும் இருப்பது போல வே, சத்தியமான, பூரணமான மதம் ஒன்றுதான் என் றாலும் மனிதர்களின் வாயிலாக வெளிவரும்போது அது பலவாகி விடுகிறது'' என்று மதத்தை விளக்கியுள்ளார் காந்தியடிகள். இந்து, முசுலீம், கிறித்தவர் என மக்களை வேறுபடுத்திய குற்றம் மதத்தைத் தானே சாரும் என்பவர் கூற்றை மறுக்கும் காந்தியடிகள், ''ஒரு மனிதனை இன்னொருவனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்து வைப் பதுதான் அவற்றின் நோக்கம்'' என்று கூறி, மனிதர் களை ஒன்றுபடுத்துவதே மதத்தின் பணி என்று கூறுகிறார்.

> ''நம்மைக் கிறித்தவர்கள் என்றோ, இந்துக் கள் என்றோ, முகம்மதியர்கள் என்றோ நாம்ன அழைத்துக் கொள்ளலாம். நாம் எச்சமயத்தி ராக இருந்தாலும், இந்த வேறுபாடுகளின் அடியில் தெள்ளத் தெளிவான ஒருமைப்பாடு இருக்கிறது. பல்வேறு மதங்களுக்கு அடியில் ஒரு பொது மதமும் இருக்கிறது. முகம்மதி

யர்கள், கிறித்தவர்கள் அல்லது இந்துக்களாக இருக்கும் நம்மிடையே ஒற்றுமை அம்சங்கள் மிகப்பலவாகவும், வேற்றுமை அம்சங்கள் மிகச் சிலவாகவும் இருப்பதை எப்போதாவது நாம் கண்டு கொள்வோம் என்பது என் அனுபவம் காட்டும் உண்மை''

என்று கூறும் காந்தியடிகள், ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரிடம் சகிப்புத்தன்மையைக் காட்டிச் சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

''பிற மதங்களின்பால் சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்வது நம்முடைய சொந்த மதத்தினை இன்னும் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவும்'' என்பது அவர் வாக்காகும்.

இந்து சமயத்துள்ளும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என இருக்கும் இனப்பாகுபாட்டினைக் களைந்தெறிய முற்பட்ட காந்தியடிகள்,

''தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை நான் தொடங்கியிருப்பதன் நோக்கம், தெள்ளத் தெளிவானது. தீண்டத் தகாதவர் ஒருவரை ஒவ்வொரு இந்துவும் தீண்ட வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. ஆனால் தீண்டத் தக்க ஒவ்வொரு இந்துவும் தம்முடைய இருதயத்திலிருந்து தீண்டாமையை விரட்ட வேண்டும் என்பதும் பூரணமான மனமாற்றம் பெறவேண்டும் என்பதுவும்தான் என்னுடைய நோக்கம்''

என்று தாம் தொடங்கிய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் நோக்கத்தை எடுத்துக்கூறியுள்ளார்.


"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார் வான்புகழ் வள்ளுவர். தந்தை காந்தியடிகளும்

> "உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்ற அடையாளச் சின்னத்துடன் மனிதர்களைக் கடவுள் படைக்க வில்லை, பிறப்புக் காரணமாக ஓர் ஆணையோ பெண்ணையோ தாழ்ந்தவர் அல்லது தீண்டத்தகாதவர் என்று குறிப்பிடும் சாத்திரம் எதற்கும் நாம் கட்டுப்பட முடியாது. இது கடவுளையே மறுப்பதாகும்; கடவுளாக இருக்கும் சத்தியத்தையே மறுப்பதாகும்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

எனவே உலக உயிர்கள் அனைத்தும் சமம் என்ற உணர்வோடு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்து பட்ட மனப்பான்மையோடு வாழ்வோமாக.

★



## சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில், கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி,ஏ. ஆனர்சு. அங்கு, முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர்!

பத்து நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன், 'பெருந்தகை மு.வ. 'ஆங்கிலத்தில் ஒரு நூல்! சங்ககால மகளிர் நிலை பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்த பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்), சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ. வின் செல்லப்பிள்ளை சி. பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்களுக்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு!

— மா. செ.

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5. Phone: 841478